॥ श्रीः ॥

श्रीमते रामानुजाय नमः ॥

[ஸ்ரீஸூக்திமாலா மலர் 8]

பரமகாருணிகரான

நாயனாராச்சான் பிள்ளை அருளிச்செய்த

சதுஃச்லோகி வ்யாக்யானம்

[ப்ரமாணத்திரட்டுடன் கூடியது]

பதிப்பாசிரியர்:-

ஸ்ரீ உ. வே. K. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி

கிடைக்குமிடம்:-

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

★

[நந்தன—௵ ஆவணி—௴]

விலை ரூ. 1-50] 1952. [தபாற்கூலி 30.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவுரை.

வந்தார் அருளிய ஸ்தோத்ரரத்நத்திற்குப் பெரியவாச்சான் தமிழிலும், வேதாந்ததேசிகர் வடமொழியிலும் வியாக்கி செய்தருளியிருக்கிறார்கள் என்பது ஸுப்ரஸித்தம். பட்ட சிஷ்யரான நலந்திகழ் நாராயணச்சீயரும் ஒரு ஸ்தோத்ர னம் செய்திருக்கிறார் என்பது தேசிக பாஷ்யத்திலிருந்து றது. ஆனால், அந்த வியாக்கியானம் இப்போது இல்லை. து:ச்லோகிக்கும் பெரியவாச்சான்பிள்ளை ஸங்க்ரஹமாகத் ம், வேதாந்ததேசிகர் விரிவாக வடமொழியிலும் வியாக்கி செய்தருளியிருக்கிறார்கள். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கி த முன்பே அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். பெரியவாச் ளை குமாரரான நாயனாராச்சான்பிள்ளை மிக விரிவாகச் ாகிக்கு ஒரு பாஷ்யம் செய்தருளியிருக்கிறார் என்பது ஸுப்ர அது தெலுங்கு லிபியிலேயே அச்சிடப்பட்டிருந்தது. து அதைத் தமிழ் லிபியில், ப்ரமாணங்களுக்கு ஆகாமும் ம் கொண்ட ப்ரமாணத்திரட்டுடன் அச்சிட்டு வெளியிட் றும். ஸ்ரீவைஷ்ணவர்கள் படித்துப் பயன்பெறவேண்டும்.

:ச்லோகிக்குள்ள இம்மூன்று வியாக்கியானங்களையும் து படிப்பவர்கள் பெரியவாச்சான்பிள்ளையும், அவருடைய ம் அருளிய வியாக்கியானங்கள் முற்பட்டவை என்பதையும் அருளிய பாஷ்யம், இவ்விரண்டு கிரந்தங்களுக்கும் பிற்பட் பதையும், இவற்றை—முக்கியமாக நாயனாராச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தை—பல விடங்களில் தழுவியும் சில விடங்களில் பபேதத்தைக் காட்டியும் இயற்றப்பட்டது என்பதையும் எளிதில் . உதாஹரணமாக ஓரிடத்தைக் காட்டுவோம். "ஈஷத் த்வத்" ூன்றாவது சுலோக வியாக்கியானத்தின் முற்பகுதியில் பிராட் கத்காரணத்வத்திலுள்ள அந்வயம் விவரிக்கப்படுகிறது என்று பெரியவாச்சான்பிள்ளையும், அவருடைய குமாரரும் நிர்வஹித்திருக்கிறார் கள். இதை ஸேவித்த தேசிகர் 'அத்ர ப்ராளயாதிகம் விவக்ஷிதமிதி கேசித்" [இங்கு ப்ராளயாதிகளில் பிராட்டிக்குள்ள அந்வயம் சொல் லப்படுகிறது என்று சிலர் வியாக்கியானம் செய்தார்கள்.] என்று

அருளிச்செய்தார். இம்மாதிரி மற்றும் பலவிடங்களுமுண்டு. மேலே தெளிவாகும்.

ஸ்தோத்ரவ்யாக்யானத்தில் தேசிகர், பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைப் பலகால் பருகி, அவற்றைப் பெரும்பாலும் தழுவியும், சிலவிடங்களில் அபிப்ராயவர்ணனம் செய்தும், சிலவிடங்களில் அபிப்ராயபேதத்தைத் தெரிவித்தும் ஸ்ரீஸூக்திகளைப் பொழிந்திருக்கிறார் என்பது அறிஞர்கள் அனைவரும் கண்ட உண்மை. இவ்விரண்டு வியாக்கியானங்களையும் சேர்த்துப் படிப்பவர்களுக்கு இரண்டிலும் பாடசோதனம் செய்யவேண்டிய இடங்கள் பலவுள்ளன என்று புலப்படும். 45-வது சுலோகத்தில் "ஸாத்ம்யபோகப்ரதாநே" என்பதே தேசிகபாஷ்யத்தில் சுத்தபாடம் என்று பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானத்தைக்கொண்டு நிரூபகர்கள் நிர்ணயித்திருப்பதைக் காண்க.

இம்மாதிரியே நாயனாராச்சான்பிள்ளையின் சது:ச்லோகீ வ்யாக்யானத்தையும் தேசிகர் பேரானந்தத்துடன் ஸேவித்து, அதிலுள்ளது போலவே வாக்யங்களைப் பலவிடங்களில் அமைத்திருக்கிறார் என்பதையும், பெரும்பாலும் அதைத் தழுவியே தம் வியாக்கியானத்தை இயற்றியிருக்கிறார் என்பதையும், இரண்டோரிடங்களில் அபிப்ராய பேதத்தைத் தெரிவித்திருக்கிறார் என்பதையும் நிஷ்பக்ஷபாதிகள் நன்குணர்வர். இவ்விரண்டு பாஷ்யங்களையும் சேர்த்துப் படிப்பவர்களுக்கு தேசிகர் பெரியவாச்சான்பிள்ளையிடத்திற்போலவே, அவருடைய குமாரரான நாயனாராச்சான்பிள்ளையிடமும் விசேஷமான ப்ரதிபத்தியுடனிருந்தார் என்பது விளங்கும். இவ்விரண்டு பாஷ்யங்களையும் ஊன்றிப் படித்தால், சிலவிடங்களில் ஒன்றைக்கொண்டு மற்றொன்றின் பாடங்களைத் திருத்தவேண்டியது அவசியம் என்பதை நிரூபகர்கள் நன்கு உணரலாம். சிலவிடங்களை இனிக் காட்டுவோம்.

"ஸ்ரீஸாத்வதத்திலே தனக்கு மோக்ஷப்ரதத்வமும், தேவிக்கு ஐச்வர்யப்ரதத்வமும் விபஜித்து ஸ்வயமேவ ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே" என்று நாயனாராச்சான்பிள்ளை மூன்றாவது சுலோக வியாக்கியானத்தின் முடிவில் அருளிச்செய்திருக்கிறார். தேசிகர் இந்தப் பங்க்திகளையே மூன்றாவது சுலோகபாஷ்யத்தில் பூர்வபக்ஷமாக

எடுத்துத் தம் அபிப்ராயபேதத்தை அறிவித்திருக்கிறார். அவ்விடத்து அச்சுப் பிரதிகளில் "நநு, மோக்ஷப்ரதத்வம் பகவத ஏவேதி ஸர்வத்ர ஸ்தாபிதம்। ஸ்ரீஸாத்வதே ச ஸ்வஸ்ய மோக்ஷப்ரதத்வம், தேவாநாம் ஐச்வர்யப்ரதத்வம் ச விபஜ்ய உக்தம்" என்று பாடம் காண்கிறது. இங்கு நாயனாராச்சான்பிள்ளை தமிழில் அருளியதை அப்படியே வடமொழியில் தேசிகர் மொழிபெயர்த்திருக்கிறார் என்பது தெளிவு. ஆகையால் அவர் 'தேவிக்கு' என்றருளியதை 'தேவ்யா:' என்றே மொழிபெயர்த்திருப்பார் என்பது திண்ணம். 'தேவாநாம்' என்றிருப்பது தவறான பாடம். மேலும், இந்த ச்லோகத்தில் ஸாக்ஷாத் மோக்ஷப்ரதத்வம் தேவிக்கு உண்டா இல்லையா என்பது விவாதாஸ்பதமான விஷயம். 'இல்லை' என்பது நாயனாரின் பக்ஷம். 'இருக்கலாம்' என்பது தேசிகருடைய பக்ஷம். ஆகையால் இங்கு 'தேவாநாம்' என்று தேவர்களைச் சொல்ல ப்ரஸக்தியில்லை. ஆகையால் 'தேவ்யா:' என்றே பாடமிருக்கவேண்டும்.

மற்றோரிடத்தைப் பார்ப்போம். "(பத்மயோநிரிதம் ப்ராப்ய படந் ஸ்தோத்ரம் தத: பரம்। திவ்யம் சாஷ்டகுணைச்வர்யம் தத்ப்ரஸாதாச்ச லப்தவாந்॥) (ப்ரஹ்மாதீநாம் யதாயத்தம் வைபவம் யஸ்ய ஸா ஸ்வயம்। தஸ்ய கைமுத்யநிர்த்தார்யமீச்வரத்வம் ஶ்ரிய: பதே:॥) என்று ப்ரஹ்மாத்யைச்வர்யத்தோடு ப்ரஹ்மஜனகனான ஈச்வரனுடைய ஐச்வர்யத்தோடு வாசியற தத்ப்ரஸாதாதீநமாயிருக்கும்படியை ப்ரதிபாதித்ததிறே" (பக்கம் 48) என்பது நாயனாரின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகள். இங்கெடுக்கப்பட்ட சுலோகங்களிரண்டும் புராண சுலோகங்கள் என்பது தெளிவு. தேசிகபாஷ்யத்தில் "ஹிரண்யகர்ப்பஸ்யாபி ப்ராஹ்மேபுராணே தததீநைச்வர்யத்வமும்" என்று தொடங்கி "பத்மயோநிரிதம்" என்னும் முதல் சுலோகத்தைப் படித்து, "ப்ரஹ்மாதீநாம்" என்ற இரண்டாவது சுலோகத்தை தேசிகருடைய காரிகையாக அச்சிட்டிருக்கிறது. இதுவும் திருத்தப்படவேண்டிய விஷயம் என்பதை அறியலாம்.

மற்றோரிடம் காண்போம். நாயனார் இரண்டாவது சுலோகம் அவதாரிகையிலும், தேசிகர் முதல் சுலோக பாஷ்யத்திலும் பிராட்டி விஷயமாக மதாந்தரஸ்தர்கள் கொண்டுள்ள அபிப்ராயங்களைக்

கண்டிக்கிறார்கள். இவ்விடத்தில் தேசிகர் நாயனாருடைய பல வாக்யங்களை அப்படியே மொழி பெயர்த்திருப்பதைக் காணலாம். "இவ்விசேஷகடாக்ஷமில்லாதார்....ஸத்வாதி விசிஷ்டபகவான் தானே ஸ்ரீயென்பது, ஸ்த்ரீரூப நித்ய விக்ரஹாந்தர விசிஷ்டனான அவனே இவளென்பது...." என்பது நாயனாரின் ஸ்ரீஸூக்திகள். "யே து ஸத்தாதிவிசிஷ்டோ பகவானேவ ஸ்ரீரிதி வா, ஸ்ரீரூபநித்ய விக்ரஹாந்தரவிசிஷ்டஸ் ஸ ஏவேயமிதி வா...." என்பது தேசிகருடைய அநுவாதம். இங்கு "ஸத்வாதி—ஸத்தாதி" என்றும், "ஸ்த்ரீரூப—ஸ்ரீரூப" என்றும் பாடபேதங்கள் காண்கின்றன. இரண்டு பாஷ்யங்களுள் ஒன்றில் பாடப்பிறழ்வு ஏற்பட்டிருக்கிறதென்பது ஸ்பஷ்டம். எதைக்கொண்டு எதைத் திருத்துவது என்பதில் அபிப்ராயபேதம் ஏற்படலாமாகையால் இதைக் காட்டினதோடு த்ருப்தராய் நிற்கிறோம்.

இப்படியே மற்றோரிடமும் உண்டு. மூன்றாவது சுலோகத்தில் "கர்ஹிசித்" என்னும் பதத்தை விவரிக்கும்போது "இவளுடைய ப்ரபாவமும் இந்த்ராதிகள் ப்ரபாவம்போலே காலபேதபேத்யமாயிருக்குமோவென்னில்: அங்ஙனன்றிக்கே ஏகரூபமாயிருக்குமென்கிறார்" என்பது நாயனாரின் ஸ்ரீஸூக்திகள். "ஈத்ருசஸ்ய அஸ்யா: ப்ரஸாதஸ்ய இந்த்ராதீநாமிவ காலபேதபேத்யத்வம் ச நாஸ்தீதி வ்யஞ்ஜநாய கர்ஹிசிதித்யுக்தம்" என்பது தேசிகருடைய மொழிபெயர்ப்பு. இங்கும் "ப்ரபாவம்—ப்ரஸாதம்" என்னுமிரண்டுக்குள் ஒன்று பிறழ்ந்த பாடமென்பது தெளிவு.

இனி, தேசிக பாஷ்யத்தைக்கொண்டு நாயனாரின் பாஷ்யத்தில் திருத்தப்படவேண்டிய பாடங்கள் சிலவற்றைக் காட்டுவோம். மூன்றாவது சுலோகத்தில் "காந்தா ப்ரஸாதாத்" என்னுமிடத்தை விவரிக்கும்போது "ப்ரஸாதாத்—க்ருபாவிசேஷாதிதி யாவத்। அஸ்யா: க்வசிதபி நிக்ரஹாஸம்பவேந தந்நிவ்ருத்திரூப ப்ரஸாதாயோகாத்॥" [(ப்ரஸாதாத்) தயாவிசேஷத்தாலேயென்கை; இவளுக்கு ஓரிடத்திலும் நிக்ரஹமில்லையாகையால், நிக்ரஹநிவ்ருத்திரூபமான ப்ரஸாதம் கூடாதாகையாலே.] என்பது தேசிகபாஷ்யம். இதற்கு மூலமான நாயனாரின் வியாக்கியானத்தில் "(ப்ரஸாதாத்) தயாவிசேஷத்தாலே; அநுக்ரஹைகஸ்வபாவையான இவளுக்கு ஓரிடத்திலும் நிக்ரஹம்

ஸம்பவியாமையாலே, தந்நிவ்ருத்திரூப ப்ரஸாதயோகத்தாலொழிய வென்கை" என்று பாடம் காண்கிறது. இந்த வாக்யங்கள் உள்ளபடி கொண்டு பார்த்தால் பொருளற்றதாயிருக்கின்றன. தேசிகருடைய அநுவாதத்தைக் கூடக்கொண்டு பார்த்தால் "ப்ரஸாதாயோகத்தால்" என்பது "ப்ரஸாதயோகத்தால்" என்று பிறழ்ந்துள்ளது என்று தெளிவாகிறது. அப்போதும் வாக்யம் அநந்விதமாயுள்ளது. "அநுக்ரஹைகஸ்வரூபையான இவளுக்கு ஓரிடத்திலும் நிக்ரஹம் ஸம்பவியாமையாலே தந்நிருத்திரூபப்ரஸாதாயோகத்தால் 'தயாவிஶேஷரூபப்ரஸாதத்தால் ஒழிய' என்கை" என்றோ, அப்பொருளைத் தரும் வேறு பதங்களுடன் கூடியோ இருத்தல் வேண்டும். ஓலைச் சுவடிகளைப் பார்த்து உண்மைப் பாடம் யாது என்று பெரியோர்கள் வெளியிட்டால் நலம்.

மற்றோரிடம் காண்போம். நான்காவது சுலோகத்தில் "மூர்த்தம்" என்றவிடத்தை விவரிக்கும்போது "மூர்த்தம்—ஸ்பர்ஶரூபாதியுக்தம் பரமபத பர்யங்காதி தேஶபரிச்சிந்நம் ச இத்யர்த்த:" என்பது தேசிக பாஷ்யபங்திகள். இதற்கு மூலமான நாயனாரின் வியாக்கியானத்தில் "(மூர்த்தம்) ஸ்பர்ஶரூபாதிகுணங்களோடே கூடி பரமபத பர்யந்தாதி தேஶபரிச்சிந்ந விக்ரஹமாயிருக்கை" என்று பாடம் காண்கிறது. 'பர்யங்காதி' என்பதே 'பர்யந்தாதி' என்று மாறியிருக்கிறதென்பது தெளிவு.

இதைப்போலவே மற்றோரிடமுள்ளது. நான்காவது சுலோகத்திலேயே "யதாஸுகம்" என்னும் பதத்தை விவரிக்கும்போது "யதாஸுகம்—மநுஷ்யாதிஸஜாதீயாவதாரதஶாயாமபி அஸ்ய ஸ்வாபாவிக ஸுகாதிநிவ்ருத்திர் து:க்கம் வா நாஸ்தீதி பாவ:" என்று தேசிக பாஷ்யம் காண்கிறது. மூலமான நாயனாரின் பாஷ்யபங்க்திகள் "(யதாஸுகம்) மநுஷ்ய ஸஜாதீயனாய் அவதரித்த தஶையிலும், ஸ்வாபாவிக ஸுகாதிவ்ருத்தி (सुखातिवृत्ति) யென்ன, து:க்கபாக்த்வமென்ன இவையின்றிக்கே...." என்று மாறிக்கிடக்கின்றன. "ஸுகாதி (दि) நிவ்ருத்தி" என்பதே சரியான பாடம் என்பதை இருவருடைய வாக்யங்களையும் சேர்த்துப் பார்த்தால் உணரலாம்.

இப்படி லேககப்ரமாதத்தால் பற்பல தவறான பாடங்கள் ப்ராசீந க்ரந்தங்களில் வந்து புகுந்துவிடுகின்றன. இவற்றைத் தகுந்த யுக்தி

களையும் ப்ரமாணங்களையும் காட்டித் திருத்துவதால் தோஷமில்லை. மற்றும் இரு உதாஹரணம் காட்டுவோம். தேசிகபாஷ்யம் அச்சுப் பிரதிகளில் முதல் சுலோகத்திலுள்ள "தயாம் தேவிதந்" என்னும் பதங்களை விவரிக்குமிடத்தில் "அஷ்டோத்ர ஸஹஸ்ரநாமஸு ச பட்யதே * கருணும் வேதமாதரமிதி" என்று பாடம் காண்கிறது. 'கருணும் வேதமாதரம்' என்பது ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்திலில்லை; அஷ்டோத்தர சதநாமத்திலேயே உள்ளது. ஆகையால் இதுவும் திருத்தப்படவேண்டிய இடமே. இம்மாதிரியே நாயனருடைய பாஷ்யத்திலும் மூன்றுவது சுலோகத்தில் "ச்ரேய:" என்றவிடத்தை விவரிக்கும்போது "(ச்ரேய:) ச்ரேஷ்டதமஸுகம்; தத்ஸாதநஸுக்ருத விசேஷமாகவுமாய்; (ச்ரேயஸீ ஸுக்ருதம் விஷய:) என்றதிறே" என்று பாடம் காண்கிறது. இங்கு 'விஷய:' என்பது தவறென்பது கண்டவுடன் விளங்குகிறது. இப் பங்க்திகளையே தேசிகன் தம் பாஷ்யத்தில் "ச்ரேய:–ச்ரேஷ்டம் ஸுகம் தத்ஸாதநம் வா | 'புண்ய ச்ரேயஸீ ஸுக்ருதம் வ்ருஷ:' இதி ஹி படந்தி" என்று மொழி பெயர்த்திருக்கிறார். 'வ்ருஷ:' என்பதே நாயனரின் பாஷ்யத்திலும் சரியான பாடமென்பதை அறிகிறோம்.

நிற்க; மேலே காட்டிய பலவிடங்களிலிருந்து ஸ்ரீதேசிகர் நாயனாராச்சான்பிள்ளையினிடத்தில் சிறந்த ப்ரதிபத்தியுள்ளவராயிருந்தாரென்பதும் அவருடைய வாக்யங்களைப் பற்பலவிடங்களில் அப்படியே மொழிபெயர்த்தருளியிருக்கிறாரென்பதும் தெளிவாக விளங்கும். இவ்விருவர்க்குமிடையே சில விஷயங்களில் கிரந்தரூபமான விவாதம் நேர்ந்ததுண்டு. சது:ச்லோகீ பாஷ்யத்திலேயே இரண்டிடங்களில் இதைக் காண்கிறோம். ஆனால், அவர்கள் நண்பர்களாயிருந்தே விவாதம் செய்தார்கள் என்பது மேலே நாம் காட்டிய விஷயங்களிலிருந்து விளங்கும்.

"தேசிகருடைய பாஷ்யத்திற்குப் பின்பே நாயனருடைய பாஷ்யம் தோன்றியதாக ஏன் கொள்ளக்கூடாது?" என்று சிலர் வாதிக்கக் கூடும். மூன்றுவது சுலோக வ்யாக்கியானத்தின் கடைசியில் "ஸ்ரீஸாத்வதத்திலே அவனுக்கு மோக்ஷப்ரதத்வமும் தேவிக்கு ஐச்வர்யப்ரதத்வமும் விபஜித்து ஸ்வயமேவ ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே" என்று நாயனர் அருளியதை அப்படியே அநுவதித்துத் தம் அபிப்

ராயபேதத்தை தேசிகர் தெரிவித்திருக்கிறாராகையால் தேசிகருடைய பாஷ்யமே பிற்பட்டது என்பதில் ஐயமில்லை. இதற்குமேல் மற்றோரிடமும் காட்டுகிறோம். நான்காவது சுலோகவ்யாக்யானத்தின் கடைசியில் அதிசயிதஸ்தோத்ரஸித்திக்காகப் பிராட்டிக்கு ஸ்வரூப விபுத்வத்தை அங்கீகரிக்கவேணும் என்று ஒரு பூர்வபக்ஷத்தைச் செய்து, "அகடிதகடநா சக்திவசத்தால் பிராட்டிக்கு ஸ்வரூபவிபுத்வத்தை ஒப்புக்கொண்டால் போதும்; அத்தாலேயே அதிசயித ஸ்தோத்ரம் ஸித்திக்கும்" என்று நாயனார் ஸமாதானமருளியிருக்கிறார். "காடோபகூடாநி" என்றவிடத்தில் சொல்லப்படும் ஸ்வரூப ஸம்பந்தம் பிராட்டிக்கு ஔபாதிகமாகவாவது விபுத்வத்தை ஒப்புக்கொண்டாலொழிய இதர ஜீவவைலக்ஷண்யத்தைக்காட்டும் ஸ்தோத்ரமாகாது என்பது நாயனாரின் திருவுள்ளம். தேசிகர் இவ்வர்த்தத்தை அப்படியே அநுவதித்து, "இதர வைலக்ஷண்யத்தைக் காட்டும்படியாகவே ஸ்தோத்ரம் செய்யவேண்டுமென்று அவசியமில்லை; ஸர்வேச்வரனும் நித்யமுக்த ஸாதாரணமான ஸர்வஜ்ஞத்வாதிகளாலே துதிக்கப்படுகிறானன்றோ" என்று கூறுகிறார். இதிலிருந்து தேசிகபாஷ்யமே பிற்பட்டதென்று தெளிவாக விளங்குகிறது. நாயனாருடைய பாஷ்யம் பிற்பட்டதாயிருந்தால் இதையெடுத்து "இதர வைலக்ஷண்யத்தைக் காட்டுவதாக ஸ்தோத்ரத்தை நிர்வஹித்தால் ஸ்வாரஸ்யாதிசயம் உண்டன்றோ" என்று ஸமாதானமருளியிருப்பார். அவருடைய பாஷ்யம் முற்பட்டதாகையாலே இந்த ஸமாதாநம் அதிலில்லை. இரண்டு பாஷ்யங்களையும் ஊன்றிப் படிப்பவர்களுக்கு தேசிகருடைய பாஷ்யமே பிற்பட்டது என்பது மற்றும் பல ஹேதுக்களாலும் தெளிவாகும்.

பிராட்டி அணுஸ்வரூபையாயிருந்தபோதிலும், அகடிதகடநா சக்திவசத்தால் பகவத் ஸ்வரூபமுள்ளவிடமெல்லாம் வியாபித்திருக்கிறாள் என்னும் பக்ஷத்தைத் தம்முடைய பாஷ்யத்தில் ஆதரித்திருக்கிறார் நாயனார். இப்பக்ஷத்தைக் கண்டிக்கிறார் தேசிகன். இதைப் பூர்வாசார்யர்கள் எவராவது ஆதரித்திருக்கிறார்களா என்னும் கேள்வி எழுகிறது. பெரியவாச்சான்பிள்ளை பரந்தரஹஸ்யத்திலும் ப்ராசீநமான அஷ்டச்லோகீவ்யாக்யானத்தில் எடுக்கப்பட்டுள்ள அஷ்டாக்ஷர தீபிகா ஸ்ரீஸூக்திகளில் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் இதை ஆதரித்

திருக்கிறுர்கள். ஸ்ரீராமாநுஜருடைய ப்ரியசிஷ்யர்களில் ஒருவரான எங்களாழ்வானும், தம்முடைய விஷ்ணுபுராணவ்யாக்யானத்தில் "யதா ஸர்வகதோ விஷ்ணு:" என்னும் சுலோகத்தை வியாக்கியானம் செய்யும்போது "பகவாந் விபுத்வேந ஸர்வகத: அஸ்யாஸ்து (தச்) சக்திவஸாத் அணுத்வேபி தத்ர தத்ரஸந்நிதாநாத் ஸர்வகதத்வமுக்தம்" [பகவான்விபுவாயிருந்துகொண்டு ஸர்வகதன்; இவளுக்கோவெனில் அணுவாயிருந்தபோதிலும் (அகடிதகடநா) சக்திவசத்தால் ஆங்காங்கு வியாபித்திருப்பதால் ஸர்வவ்யாபித்வம் சொல்லப்பட்டது] என்று அருளிச்செய்வதன் மூலம் இப்பக்ஷத்தை ஆதரித்தருளியிருக்கிறுர். இப்பங்க்திகள் நிஷ்பக்ஷபாதிகளான வடநாட்டார் அச்சிட்ட ஸ்ரீகோசங்களிலுள்ளன. ப்ராசீநமான ஈட்டின் அரும்பதவுரைகளிலும், கீர்த்திமூர்த்தியான அயோத்யா ராமனுஜஜீயர் ஸ்வாமியின் ஸ்ரீதத்வப்ரகாசிகையிலும் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவ்வர்த்தம் ஸ்ரீபாஷ்யகாரர் உகந்ததாகவே இருந்திருக்கும்.

நிற்க; இந்தச் சது:ச்லோகீ பாஷ்யகர்த்தாவின் திருநாமம் அழகியமணவாளப்பெருமாள் நாயனுரென்பது. இவருடைய சிஷ்யரான பரகாலதாஸர் தம்முடைய பரகாலநல்லான் ரஹஸ்யத்தில் "அபயப்ரத குருஸூநுவான ஸுந்தரவரராஜாசார்யர்" என்று எடுத்துள்ளதைக் காண்க. இவருடைய மற்றொரு சிஷ்யரான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரும் இவரை ஓரிடத்தில் இப்பெயரையிட்டு நிர்த்தேசித்துள்ளார். இவருடைய ப்ரஸித்தமான திருநாமம் நாயனுராச்சான் பிள்ளை என்பது. ஸகலத்ராவிடாம்நாயஸாரவ்யாக்யானகர்த்தாவான பெரியவாச்சான்பிள்ளை இவருடைய தந்தையார். ஜ்ஞாநார்ணவம், அணுத்வபுருஷகாரத்வஸமர்த்தநம், சரமரஹஸ்யத்ரயம், முக்தபோகாவளி, சது:ச்லோகீவ்யாக்யாநம், சரமோபாயநிர்ணயம், தத்வஸங்க்ரஹம், கைவல்யநிர்ணயம் முதலானவை இவரருளிய கிரந்தங்கள். முதல் மூன்று நூல்களைத் தவிர மற்றவை இப்போதுமுள்ளன; (தெலுங்கு லிபியில்) அச்சிடப்பட்டுமிருக்கின்றன. இவற்றை க்ரமேண தமிழில் அச்சிடுவோம்.

நந்தன-ஹு
ஆவணியில் - ரோகிணி.

இங்ஙனம்,
கி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை குமாரர்
அழகியமணவாளப்பெருமாள் நாயனாராச்சான்பிள்ளை அருளிச்செய்த

சது:ச்லோகீ வ்யாக்யாநம்

நாயனாராச்சான்பிள்ளை தனியன்

ச்ருத்யர்த்த ஸார ஜநகம் ஸ்ம்ருதிபாலமித்ரம்
பத்மோல்லஸத் பகவதங்க்ரி புராணபந்தும் ।
ஜ்ஞாநாதிராஜமபயப்ரதராஜபுத்ரம்
அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி ॥

அவதாரிகை

* அபிஷ்டௌதி ஶ்ரியம் தேவீம் அகிலாத்மைகமாதரம் ।
விஷ்ணுபத்நீம் விஶாலாக்ஷீம் யாமுநார்யோ மஹாமதி: ॥

(1) (மாத்ருதேவோ பவ, பித்ருதேவோ பவ, ஆசார்யதேவோ பவ, அதிதிதேவோ பவ) என்று கொண்டு, "இச் சேதனனுக்கு ஸ்வரூபாநுரூபமாக உபகாரகராகிறார், அகிலஜகந்மாதாவான பிராட்டியும், 'அவ்வயய: பிதா' வான ஈச்வரனும், 'அறியாதன அறிவித்த' ஆசார்யனும், அதிதிஶப்தவாச்யரான அவனடியாரும்" என்று இந்நால்வர் பக்கலிலும் உபகாரஸ்ம்ருத்யதிஶயத்தாலே உத்தேச்யப்ரதிபத்தி பண்ணி உஜ்ஜீவிக்கக்கடவனென்று, வேதாந்தங்களிலே வ்யாக்யாதமாக விதிக்கையாலே, விசேஷஜ்ஞரெல்லாரும் விரும்பி அநுஷ்டிக்க வேண்டும்படி, விசேஷார்த்தங்களாயிறே இவ்வர்த்தங்கள்தான் இருப்பது. இந்நால்வர் பண்ணும் உபகாரமும் நவரத்னமாலையிலே நன்றாகக் காணலாமிறே. இப்படிப்பட்ட உபகாரங்களை அநுஸந்தித்து * "சீதையென்பதோர் தெய்வம்" § "திருமங்கை நின்றருளும் தெய்வமே நாவாழ்த்தும்" † "தேவுமற்றறியேன்" ‡ "குலதெய்வம்" என்று இந்

---

* இதன் பொருள்:-எல்லா ஆத்மாக்களுக்கும் ஒரே தாயாய், விஷ்ணு பத்னியாய், பரந்த திருக்கண்களை உடையவளான ஸ்ரீதேவியை மஹா புத்திமானான யாமுநாசார்யர் துதிக்கிறார்.

---

* பெரிய திரு (10-2-5) § இர・திருவ (57) † கண்ணி-2 ‡ திருவாய் (2-6-4)

நால்வர் பக்கலிலும் தேவதாப்ரதிபத்தியைப் பண்ணுநின்றார்களிறே ஆகையாலே, ஸகலவேதாந்தவிதக்ரகண்யராய், ஆஸ்திகாக்ரேஸரராய், பரபக்ஷ ப்ரதிக்ஷேப ஸ்வபக்ஷஸ்தாபகத்வத்தாலே "ஆளவந்தார்" என்று அகிலலோகப்ரஸித்தமான அபிதானத்தையுடையரான யாமுநாசார்யர், தாம் ஸதாசார்யச்ரேஷ்டரானமை தோற்ற (2) (ஆசரதீத்யாசார்ய:) (3) (ஸ்வயமாசரதே யஸ்து ஸ ஆசார்ய இதி ஸ்ம்ருத:) என்கிறபடியே "இவ்வர்த்தங்களை நாம் ஆசரிக்கவேணும்" என்கிற ஆதராதிசயத்தாலும், 'ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரான அஸ்மதாதிகளெல்லாரும் இவ்வர்த்தங்களை அநுஷ்டித்து, ஆத்மோஜ்ஜீவநத்திலே அத்யபிநிவிஷ்டராகவேணும்' என்கிற தம்முடைய ஆகஸ்மிகக்ருபையாலும், உபகாரகரான இந்நால்வர் பக்கலிலும் தமக்குண்டான ப்ரதிபத்திவிசேஷத்தை க்ரந்தஸ்தமாக ப்ரகாசிப்பிப்போமென்று திருவுள்ளம்பற்றி, ப்ரதமத்திலே (1) (மாத்ருதேவோ பவ) என்று, மஹோபகாரகையாகச் சொல்லப்பட்ட பெரியபிராட்டியாருடைய ஸ்வரூபகுணவிபூதிகளை அநுஸந்தித்து, அவ்வநுபவ ஜநிதப்ரீதிப்ரகர்ஷத்தாலே, தத்விஷய ஸ்தோத்ரத்திலே ப்ரவ்ருத்தராகிறார்,— "காந்தஸ்தே" இத்யாதியாலே.

(1) (பித்ருதேவோ பவ) என்று தொடங்கிச் சொல்லப்படும் மூவரிடத்திலுண்டான விசேஷப்ரதிபத்தியை ஸ்தோத்ரரத்னத்திலே வெளியிட்டருளினார். எங்ஙனேயென்னில்: ப்ரதமத்திலே (1) (ஆசார்ய தேவா பவ) என்று மஹோபகாரகராகச் சொல்லப்பட்ட ஆசார்ய விஷயத்தில் தமக்குண்டான பாவபந்தவிசேஷங்களை (4) (நமோऽசிந்த்யாத்புத) என்றும், (5) (தஸ்மை நம:) என்றும், (6) (பூயோ நம:) என்றும், (7) (ப்ரணமாமி) என்றும் ப்ரகாசிப்பித்தார். நிருபாதிக பிதாவான ஈச்வரவிஷயத்தில் தமக்குண்டான ப்ரதிபத்திவிசேஷத்தை (8) (யந் மூர்த்நி மே) என்று தொடங்கி பஹுப்ரகாரமாக ப்ரகாசிப்பித்தார். *"வருவிருந்தை" †"விருந்தாகும் பெருந்தக்கோர்" என்கையாலே அதிதிப்ரப்தவாச்யரான ததீயவிஷயத்தில் தமக்குண்டான விசேஷப்ரதிபத்தியை (9) (த்வதாச்ரிதாநாம்) என்றும் (10) (தவதாஸ்ய ஸுகைகஸங்கிநாம்) என்றும் (11) (ஸக்ருத் த்வதாகார) என்றும் வெளியிட்டாரிறே.

---

* பெரியாழ்-திரு (4-8-2) † பெரியதிரு (6-6-10)

ஆகில், (1) (மாத்ருதேவோ பவ) என்கிற பிராட்டி வைபவம் அங்கு ப்ரதிபாதிக்கவில்லையோவென்னில்: (12) (க: ஸ்ரீ: ஸ்ரிய:) என்றும், (13) (தயா ஸஹாஸீநம்) என்றும் ஸூசிப்பித்த மாத்ரமிறே ஸ்தோத்ரத்திலுள்ளது. 'அப்படியாகில் இவ்வளவு போராதோ? இதுக்காக ஒரு ப்ரபந்தம் நேரவேண்டுவானென்?' என்னில் * "பேரா ளன் பேரோதும்" § "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை" என்கிற பாகவதாநுவர்த்தனமாகிற பரமப்ராப்ய லாபம் ஆசார்யனாலேயாய், ஆசார்யலாபம் ஈச்வரனாலேயாய், ஈச்வரலாபம் பெரிய பிராட்டியாராலே யாகையாலே, இந்நால்வரிலும் மஹோபகாரகை யாயிறே இவள் தான் இருப்பது. ஆகையிறே (1) (மாத்ருதேவோ பவ) என்று ப்ரதமோபாத்தையாயிற்று. இப்படி ஸர்வவ்யாவ்ருத் தோபகாரஸீலையாகையாலே, ஸாமாந்யமான ஆகாரேண ப்ரதி பாதித்த வளவன்றிக்கே, தத்விசேஷமாக ஒரு ப்ரபந்தம் நேரவேணு மென்று நிர்ணயித்து, விஷயத்திலே தமக்குண்டான பாவபந்த மெல்லாம் தோன்றச் சது: ச்லோகியாலே உபச்லோகிக்கிறார்.

கர்மபரதந்த்ரனான ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே (14) (ஸோக: ச்லோகத்வமாகத:) என்கிறபடியே, ஸோகவேகஜநிதமான ச்லோகங் கள்போலன்றிக்கே, ஸுமங்களாகாரையான இவள் ப்ரஸாதமடியாக வந்ததாகையாலே ஸுச்லோகங்களாயிறே இச்லோகங்கள்தான் இருப்பது. இனி, அங்கு போனாலும் (15) (அஹம் ச்லோகக்ருத்) என்று உத்தமராஜகந்யையான இவள்விஷயமாக உத்தமச்லோகரசனை பண்ணி உஜ்ஜீவிக்கையிறே உள்ளது. (16) (க்ருத்ஸ்நம் ஸீதாயாஸ் சரிதம் மஹத்) என்று எல்லாம் ஸீதாசரிதமாயிருக்கவும், (17) (ரகுவர சரிதம்) என்று சொல்லப்படுவதாய், கங்கா ஸம்பவாத்யஸத்கதா வர்ணன முகத்தாலே அதிவிஸ்தரமாய், துர்ஜ்ஞேயமான ஸ்ரீ ராமா யணம்போலின்றிக்கே, விசேஷண விசேஷ்யோபயப்ரதானமான 'திருமாலவன்கவி' போலுமின்றிக்கே, விசேஷணபரமேயாயிருக்கவும் அதிஸங்க்ரஹமாகையாலே துரவகாஹமான ஸ்ரீஸூக்தம்போலுமின் றிக்கே, அநாக்ராதாவத்யமாய், வைதக்த்ய வர்ணகுண கும்பந கௌர வங்களாலே கண்டூலகர்ண குஹரராய்க் கொண்டு கர்ணாம்ருதமாகப் பானம் பண்ணலாம்படி பரமபோக்யமாய், ப்ரேமயுக்தர்க்கு ஸ்வார்த்த

* பெரியதிரு (7-4-4) § திருவாய் (10-9-11)

ப்ரகாசக சாதுர்யத்தையுமுடைத்தான சது:ச்லோகீ ஸூக்ரஹமா யிருக்கையாலே, அகிலப்ரபந்த விலக்ஷணமாயிருக்கும்.

பகவத் ஸ்தோத்ரம் பண்ணுவார்க்கெல்லாம் ஸ்தோத்ரரத்நம் முதலானுப்போலே, பிராட்டி விஷயத்தில் ஸ்தோத்ரம் பண்ணுவார்க் கெல்லாம் இப்ரபந்தம் மூலக்ரந்தமாகையாலே முக்யமாயிருக்கும். இவள்மூலமாகவிறே எல்லாம் உண்டாவது. ஆகையிறே ஸ்தோத்ர சது: ச்லோகிகளை அடியொற்றி, கத்யத்ரயமும், ஸ்ரீஸ்துதி முதலான பஞ்சஸ்தவமும், ஸ்ரீகுணரத்நகோஶமும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் முதலான திவ்யப்ரபந்தங்களும் அவதரித்தது.

ஆக, இத்தால் (1) (மாத்ருதேவோ பவ) என்கிற வாக்யார்த்த விவரணமான ஸ்ரீஸூக்தார்த்தத்தை இச்லோகரூபேண வெளியிடு கிறார். அதில், ப்ரதமச்லோகத்தால் (18) (ஶ்ரியம் தேவீமுபஹ்வயே ஸ்ரீர்மா) என்கிற வாக்யங்களாலும், (19) (விஷ்ணோ: ஸ்ரீ:) என்கிற வாக்யங்களாலும், (20) (ஸ்ரீவத்ஸவக்ஷா:) என்கிற ததுபப்ரும்ஹணங் களாலும் ப்ரதிபாதிக்கிற ததஸாதாரணமான திருநாமத்தை ஸார்த்த மாக அநுஸந்திக்கிறார்.

அவதாரிகை முற்றிற்று.

முதல் ச்லோகம் அவதாரிகை:—(காந்தஸ்தே இத்யாதி) "ஸ்ரீஞ்- ஸேவாயாம்" என்கிற தாதுவிலே நிஷ்பந்நமாகையாலே ஸேவாவாசி யான ஸ்ரீஶப்தத்தில் "ச்ரயத இதி ஸ்ரீ:" "ஸ்ரீயத இதி ஸ்ரீ:" என்கிற கர்த்தரிகர்மணி வ்யுத்பத்தி த்வய ஸித்தங்களான பகவதாச்ரயணத்தை யும், தத்ஹேதுகமான உபயவிபூதி ஶேஷத்வத்தையும் உடையையாய், அத்தாலே "ஸ்ரீ:" என்று ஸர்வோத்கர்ஷ ஹேதுவான திருநாமத் தையும் உடையையாய், ஜ்ஞாந ஶக்த்யாதி கல்யாணகுண பரிபூர்ணையு மான உன்னைப் பரிமிதஜ்ஞாநஶக்திகரான நாங்கள் பரிச்சேதித்துப் பேசுவது எங்ஙனே என்கிறார்.

வ்யாக்யானம்:—(காந்தஸ்தே புருஷோத்தம:) (21) (ஸஹஸ்ர ஶீர்ஷா புருஷ:) (22) (பூர்ணம் புருஷேண) (23) (புருஷம் மஹாந்தம்) (24) (புருஷ ஏவேதம் ஸர்வம்) (25) (ஸ யஶ்சாயம் புருஷே) (26) (ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே) (27) (மஹாபுருஷ பூர்வஜ) (28) (ஜாநாதி புருஷோத்தமம்) (29) (புருஷ: புண்டரீகாக்ஷஸம்ஜ்ஞக:)

பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த

சதுஃச்லோகீ

ஆளவந்தார் தனியன்

யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாஶேஷ கல்மஷ:।
வஸ்துதாமுபயாதோऽஹம் யாமுநேயம் நமாமி தம்॥

1\. காந்தஸ் தே புருஷோத்தம: பணிபதிஶ் ஶய்யாऽऽஸநம் வாஹநம்
வேதாத்மா விஹகேஶ்வரோ யவநிகா மாயா ஜகந்மோஹிநீ।
ப்ரஹ்மேஶாதிஸுரவ்ரஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸதாஸீகண:
ஶ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம்॥

1\. பதவுரை:—பகவதி—*கல்யாணகுணங்களால் நிறைந்தவளே!*, புருஷோத்தம:—*புருஷோத்தமனான பகவான்*, தே—*உனக்கு*, காந்த:—*பிரியனான கணவன்*; பணிபதி:—*நாகங்களுக்கு அரசனான ஆதிசேஷன்*, ஶய்யா—*படுக்கை*; வேதாத்மா—*வேதத்தை சரீரமாக உடையவனும்*, விஹகேச்வர:—*புள்ளரையனுமான பெரியதிருவடி*, ஆஸநம் வாஹநம்—*ஆஸனமாகவும், வாஹனமாகவுமிருப்பவன்*; ஜகந்மோஹிநீ—*உலகத்தை மோஹிக்கச்செய்வதான*, மாயா—*ப்ரக்ருதி*, யவநிகா—*(உனக்கு) முகத்திரையாயிருக்கிறது*; ஸதயித:—*தங்களுடைய மனைவிமாருடன் கூடிய*, ப்ரஹ்மேஶாதிஸுரவ்ரஜ:—*பிரமன், சிவன் முதலிய தேவஸமூஹம்*, த்வத்தாஸதாஸீகண:—*உன்னுடைய தாஸகணமாகவும், தாஸீகணமாகவும் இருக்கிறது*; தே நாம ச—*உன்னுடைய திருநாமமும்*, ஶ்ரீ: இதி ஏவ—*'ஶ்ரீ:' என்பதேயாயிருக்கிறது*; த்வாம்—*(இப்படிப்பட்ட பெருமைகள்பொருந்திய) உன்னை*, வயம்—*(அறிவிலிகளான) நாங்கள்*, கதம் ப்ரூம:—*எப்படிச் சொல்லுவோம்?*

---

(30) (தம் விநா புருஷோத்தமம்) (31) (உத்தம: புருஷஸ்த்வந்ய:) (32) (க்ஷமஸ்வ புருஷோத்தம) * "*புருடோத்தமனடி*" § "*புருடோத்தமன்*" † "*புருடோத்தமமே*" *என்னும் இத்யாதிப்ரமாண* ஶ*தங்களாலே ஸகல சேதனசேதந விலக்ஷணனான* ‡ '*பறவையேறு பரம்புருடன்*' *என்றவாறு. இத்திருநாமந்தான் த்ரிவிதசிதசித்ப்ருந்த வைலக்ஷண்யத்தை* ஶ*ாப்தமாகக் காட்டக்கடவதிறே. "புருஷ:" என்று அசித்*

---

*பெரியாழ்-திரு (4-7-11) § பெரியாழ்-திரு (4-7-2) † பெரியதிரு (4-2-1)
‡ பெரியாழ்-திரு (5-4-2)

வ்யாவ்ருத்தரான பத்தரையும், "உத்புருஷ:" என்று தத்வ்யாவ்ருத்தரான முக்தரையும், "உத்தர: புருஷ:" என்று அவர்களில் வ்யாவ்ருத்தரான நித்யரையும் சொல்லி, "உத்தம: புருஷ:" என்று தத்வ்யாவ்ருத்தனான ஈச்வரனைச் சொல்லிற்றிறே. ஹேயமூலமான அசித்தும், ஹேயஸஹிதரான பத்தரும், ஹேயரஹிதரான முக்தரும், ஹேயப்ராகபாவரான நித்யரும், ஹேயநிவர்த்தகனுக்கு ஸத்ருசரன்றிறே. ஸ்வரூபஸ்வபாவாந்யதாபாவயுக்தங்களான சேதநாசேதநங்களைப்பற்ற, ததுபயாநந்யதாபாவரூப வைலக்ஷண்யத்தாலே, ததுபய விலக்ஷணன் என்றுகொண்டு புருஷோத்தமன் என்கிறார். 33. (யஸ்மாத் க்ஷரமதீதோऽஹம் அக்ஷராதபி சோத்தம: । அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥) என்னக்கடவதிறே. 33. (த்வாவிமௌ) இத்யாதி.

ஆக, இப்படி ஸர்வோத்க்ருஷ்டனாக ப்ரதிபாதிக்கப்படுகிற பரமபுருஷன் ஸர்வாதிகையாக ப்ரமாணப்ரஸித்தையாயிருக்கிற உனக்கு அநுரூபனான பதி. அதவா; (புருஷோத்தம: தே காந்த:) "ஷணு—தாநே" என்று தாநவாசியாய், "புரு—ஸநோதீதி—புருஷ:" என்று அதிகதாதாவைச் சொல்லி, அவர்களில் உத்தமனென்று மோக்ஷாதி ஸகலபலப்ரதன், (34) (ஐச்வர்யம்) இத்யாதிப்படியே "பரமோதாரை" என்று ப்ரஸித்தையான உனக்குப் பதியென்னவுமாம்.

(புருஷோத்தமஸ் தே காந்த:) (35) (மங்களாநாஞ்ச மங்களம்) என்று சொல்லப்படுகிறவன், ஸகலமங்களாஸ்பதத்வேந ப்ரஸித்தையான உனக்குப் பதி. (புருஷோத்தமஸ் தே காந்த:) *நாரீணாமுத்தமைக்குப் பதியாம்போது புருஷோத்தமனாகவேணுமிறே. விச்வபதியானாலாயிற்று இவளுக்குப் பதியென்னலாவது. இவள்தான் லோகபர்த்தாவையிறே (36) (மம பர்த்தா) என்று வரிப்பது. அல்லாதாரை (37) (நீசஶஶவத்) என்று ஒரு நரியாகவிறே எண்ணுவது. "புருஷோத்தமஸ் தே" என்கையாலே, (38) (ராகவ:—துல்யஶீல வயோவ்ருத்தாமர்ஹதி) என்னும் அர்த்தமும், ஏதத்ப்ரதிகோட்யர்த்தம் "புருஷோத்தமஸ்ய த்வம்" என்று (38) (அஸிதேக்ஷணா தமர்ஹதி) என்னுமர்த்தமும் தோற்றுகிறது. § "உனக்கேற்கும்" என்று இவள்

§ திருவாய் (10-10-6.)

அவனுக்கு ஸத்ருஶையாயிருக்குமாபோலே, அவனும் * திருத்தக்க செல்வனுயிறே இருப்பது.

(புருஷோத்தமஸ் தே காந்த:) (39) (லக்ஷ்மீஶ்ச பத்நயௌ) என்று பத்நீ ஸம்பந்தத்தாலே அவனுக்கு உத்கர்ஷம் சொன்னப் போலே, "புருஷோத்தமஸ் தே காந்த:" என்று பதிஸம்பந்தத்தாலே இவளுக்கு உத்கர்ஷம் சொல்லுகிறுர். "ஶ்ரிய: பதி:" என்று அவனுக்கு உத்கர்ஷம்; "வரதவல்லபா" என்றிறே இவளுக்கு உத்கர்ஷம்.

(தே காந்த: புருஷோத்தம:) உனக்குக் காந்தனுன பின்பிறே அவன் புருஷோத்தமனுயிற்று. (12) (க: ஶ்ரீ: ஶ்ரிய:) என்ற பின்பிறே (12) (புருஷோத்தம: க:) என்றது. (42) (ஜகந்நாதோऽபி நாராயணோ தந்யம் மந்யத ஈக்ஷணாத்) என்று வேதாந்தங்கள் பரதத்வமென்று நிர்ணயித்ததும் உன்னுடைய பாதசிஹ்நங்களை அவன் மார்பிலே கண்டபின்பிறே. ஸஹதர்மசாரிணியான இவளைப் பாணிக்ரஹணம் பண்ணின பின்பாயிற்று, அவன் ஶ்ரீமானுமாய், ஸர்வாதிகனுமாய், அநுரூபாக்ஷனுமாய், முமுக்ஷூபாஸ்யனுமாய்த்து. ஆகையிறே † "திருநின்ற பக்கம் திறவிது" என்று ஸத்துக்கள் பரிக்ரஹித்தது. அல்லாதார் திருவில்லாத் தேவராகையாலே, நி:ஶ்ரீகராய், புருஷாதமராய், விரூபாக்ஷராய், அநுபாஸ்யராயிற்று. ஆகையிறே (43) (ஶ்ரீநிவாஸாப்தேந பாஶுபதாதிவ்யுதாஸ:) என்று அருளிச்செய்ததும், §§ "காணிலும் உருப்பொலார்" †† "திருவில்லாத் தேவரைத் தேறேன்மின் தேவு" என்று ஸத்துக்கள் பரித்யஜித்ததும்.

(தே காந்த: புருஷோத்தம:) ‡‡ "திருமகளார் தனிக்கேள்வன் பெருமையுடைய பிரானார்" என்று இவளுக்குக் கேள்வனுன வாசியிறே பெருமையுடைய பிரானாராயிற்று. 44. (ஶ்ரியா விஷ்ணுரதீவ ஶுஶுபே) என்று இவள் தனக்கென்ன இட்டுப் பிறந்த தத்வமாகையாலேயிறே அப்ரமேய தேஜஸ்ஸை உடையவனுய், அதீவ விளங்கிற்று. (45) (ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே) || "திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற" என்னக்கடவதிறே. (புருஷோத்தம:) "புருஷாணாமுத்தம:" என்று ஷஷ்டீஸமாஸமாதல்; "புருஷேஷூத்தம:"

† 4-திருவ 62. §§ திருச்சந் 69. †† 4-திருவ 54. ‡‡ திருவாய் 1-6-9.
|| திருவாய் 10-6-9.

என்று ஸப்தமீவிபக்தியாதல். "புருஷோத்தம:" என்று ஸர்வேச்வ ராபேக்ஷயா ப்ரஹ்மாதிகளுடைய அதமத்வம் ப்ரதிபாதிக்கையாலே, தத்பத்னிகளிற்காட்டில் இவளுடைய வ்யாவ்ருத்தியும் தோற்றுகிறது. * மலைமங்கையும், * நாமங்கையும் * பூமங்கைக்குப் போலியாகமாட்டார்களிறே. * நாபதியும், * உமாபதியும் * மாபதிக்கு உபமானமானவன்றிறே இவளுக்கு அவர்கள் ஒப்பாவது. ஆக, இத்தால் "தத்பத்நீத்வத்தாலும், நாரீகோடிகடிதையாகையாலும், அவனை ஆச்சரயித்துத் தச்சேஷபூதையாய், ஸத்தைபெற்றிருக்கும்" என்கிற கர்த்தர்யர்த்தம் சொல்லப்பட்டது. § "மலர்மகள் பிடிக்கும் மெல்லடி" † "திருமகளும் செம்பொற்றிருவடியினிணை வருட" என்கிறபடியே அகிஞ்சித்கரனுக்கு சேஷத்வமில்லாமையாலே, இவள்தான் கிஞ்சித்கரித்து ஸ்வரூபலாபமாயிருப்பாள் ஒருத்தியிறே. அவதாரதசையிலும் ‡ "திருமங்கை போத்தந்தாள்" என்று கிஞ்சித்கரித்தாளிறே.

இனிமேல், "ஸர்வலோகமாதாவாகையாலும், ஸர்வஸ்வாமினியாகையாலும், ஸகலசேதநர்க்கும் ஆச்ரயிக்கப்படாநின்றாள்" என்கிற கர்மணிவ்யுத்பத்தியில் ஸித்தமான உபயவிபூதிசேஷத்வத்தை அருளிச்செய்கிறார், (பணிபதி:) இத்யாதியால். 19. (நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ) 46. (ஸ்ரீயதே சாகிலைர் நித்யம் ஸ்ரயதேச பரம் பதம்) என்னும் இத்யாதிப்ரமாண ஸித்தங்களாயிறே இவ்யுத்பத்தித்வயமுமிருப்பது.

ஆகில், உபஜீவ்யப்ரமாணாநுஸாரேண வ்யுத்பத்தி த்வயத்தை அருளிச்செய்யாதே,வ்யுத்க்ரமமாக அருளிச்செய்வானென்?என்னில்: கடகையான இவளுக்குச் சேதநேச்வரர் பக்கல் ஸம்பந்தம் அவிசிஷ்டமாயிருந்ததேயாகிலும், பித்ருத்வ ப்ரயுக்தமான ஹிதஸ்ரோதோவ்ருத்தியாலே கலங்கி, ஸாபராதரான இச்சேதனரை நிக்ரஹிக்கத் தேடுமென்று 47. (கிமேதந்நிர்த்தோஷ: க:) என்று உசிதோபாயங்களாலே அவனை வசீகரித்து அநுக்ரஹைகபரனும்படி திருத்தும்போது தத்ஸம்பந்தம் அவச்யாபேக்ஷிதமாகையாலும்,இனித்தான் பிராட்டியை ஆச்ரயிக்கிறது, தத்ஸம்பந்த விசிஷ்டையென்றாகையாலும், "புருஷோத்தமஸ் தே காந்த:" என்று ப்ராதாந்யேந கர்த்தர்யர்த்

§ திருவாய் (9-2-10) † பெரியதிரு (7-8-1) ‡ பெரியாழ்-திரு (11-3-7)

தத்தை அருளிச்செய்து, அநந்தரம் தத்ஸம்பந்த ஸ்தாப்யமான கர்மண்யர்த்தத்தை அருளிச்செய்கிறார். 48. (மச்சேஷபூதா ஸர்வேஷாமீச்வரீ) என்று இவ்வர்த்தக்ரமத்தை ஸ்வயமேவ அருளிச்செய்தானிறே. 49. (தேவ தேவ திவ்யமஹிஷீமகிலஜகந் மாதரம்) என்று பாஷ்யகாரரும் இவருடைய திவ்யஸம்பந்தத்தை உட்கொண்டு, பகவத் ஸமாச்ரயணத்தை ப்ரதானமாக அருளிச்செய்தாரிறே. இனித்தான் பகவத்விஷயத்தைப் பற்றுகை * பவதீஸம்பந்த த்ருஷ்டியாலேயிறே. பிராட்டியைப் பற்றுமது பகவத்ஸம்பந்தவிஶிஷ்டையென்றிறே. இங்ஙனன்றிக்கே தத்ஸம்பந்தரஹிதமாகப் பற்றுமன்று, தலையும், செவியும் தரியுண்டு வைரூப்யவிநாஶங்களே பலித்துவிடுமிறே. ஆகையால் இவ்வாகாரத்தைப் பற்ற இங்ஙனே அருளிச் செய்யக் குறையில்லை.

ஆகில், 48. (மச்சேஷபூதா) என்று அருளிச்செய்தபடியே பிராட்டியும் பகவச்சேஷபூதையானல், சேஷபூதர்களெல்லாரும் ஸர்வஶேஷிக்கு ஶேஷமாயிருக்கையொழிய, உபயவிபூதியும் பிராட்டிக்கு ஶேஷமாயிருக்கும் என்கைக்கு ப்ரமாணமென்? என்னில்: 48. (ஸர்வேஷ்யாத்மாந:—தாஸபூதா:) என்று உபயவிபூதியும் பரமாத்மஶேஷமானல், தத்பத்னியான இவளுக்கும் அகிலசேதனரும் சேஷபூதரென்னுமிடத்தில் ப்ரமாணாந்வேஷணம் வேண்டாவிறே. பர்த்தாவுக்கு ஶேஷமான க்ருஹக்ஷேத்ரபுத்ராதிகள் பார்யைக்கும் ஶேஷமென்னுமிடம் லோகஸித்தமிறே. அவன்றான் உபயவிபூதியையும் இவளுக்குப் படுக்கைப்பற்றாக்கியிறே வைப்பது. 50. (ஈஶாநா தேவீ புவநஸ்யாதிபத்நீ) 51. (ஈச்வரீம் ஸர்வபூதாநாம்) 52. (மகாரஸ்து தயோர் தாஸ:) என்று இவ்வர்த்தத்தில் ப்ரமாணங்களும் உண்டிறே. 53. (அஸ்யா மம ச ஶேஷா ஹா விபூதிருபயாத்மிகா) 48. (ஸர்வேஷாமீச்வரீ மம வல்லபா) என்று இவ்வர்த்தத்தை ஸ்வயமேவ அருளிச்செய்தானிறே. § "திருநாரணன் தொண்டர்" † "திருமாலுக்குரிய தொண்டர்" ‡ "திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்" || "திருமாற்கரவு" என்று, மிதுநஶேஷத்வம் ஸர்வஸாதாரணமென்னுமிடத்தை, தத்வவித்துக்களான நம் ஆழ்வார்களும் அருளிச்செய்தார்களிறே.

---

§ திருவாய்(3-7 4) † திருவாய்(6-9-11) ‡ திருப்பல்-11. || முத-திருவ-53.

ஆக, இப்படி வேதங்களாலும், வேதாந்தவேத்யனாலும் * மிக்க வேதியராலும் ப்ரதிபாதிக்கப்பட்ட உபயவிபூதிசேஷித்வத்துக்கு ப்ரதி ஸம்பந்தி வக்தவ்யமாகையாலே உபவிபூதியிலுள்ளாரும் இவளுக்குக் கிஞ்சித்கரித்து சேஷபூதராயிருக்கும்படியை ப்ரயோகிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, அதில் ப்ரதமத்திலே நித்யஸூரிகளில் தலைவரான திருவனந்தாழ்வான் இவள் விஷயத்திலே கிஞ்சித்கரித்து, ஸ்வரூபம் பெற்றிருக்கும்படியை அருளிச்செய்கிறார்,—(பணிபதி:) இத்யாதியாலே.

அதாவது—§ "இருளிரியச் சுடர்மணிகளிமைக்கும் நெற்றி இனத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த" என்றும், † "வாயோரீரைஞ்ஞூறு" ‡ "மன்னிய பல்பொறிசேர் ஆயிரவாய் வாளரவின் சென்னிமணிக் குடுமி" என்றும் சொல்லுகிறபடியே, || "மதுரவாறு" என்றும், // "இன்பவாறு" என்றும் சொல்லும்படி நிரதிசயபோக்யமான பகவதநுபவத்துக்கு அநுபவபரீவாஹரூபமாக வாயாரப் புகழுகைக்கிடாகப் பலவாய்த்தலைகளை உடையனாய், 54. (அநந்ததா பவதி) என்கிறபடியே அநேகதேஹங்களைப் பரிக்ரஹித்து, அசேஷசேஷவ்ருத்தியிலும் அந்வயித்து, சேஷவ்ருத்திபரரான அசேஷர்க்கும் உபமான பூமியாய், †/ ஆங்காரவாரத்திற்படியே அஸ்தாநேபயசங்கை பண்ணி அழலுமிழ்ந்து அநவரத மங்களாசாஸநபரனாயிருக்கையாலே § "அரவரசப் பெருஞ்சோதி அனந்தன்" என்றும், 55. (யதோசிதம் சேஷ:) என்றும் திருநாமங்களை உடையனாய், * ப்ரக்ருஷ்ட விஜ்ஞாநபலைகதாமாவாய், உனக்குப் படுக்கையான முறையாலே :: "நாகணைமிசை நம்பிரான்" என்று எல்லார்க்கும் புருஷகாரபூதனாய், 56. (ஏவம்வித் பாதேநாத்யாரோஹதி) என்று, பர்யங்கவித்யையிற்படியே தன் மடியிலே அடியிட்டேறலாம்படி ஆஸனமாய், அந்தரங்கனாய், பகவத் ஸ்வரூப நிரூபகபூதையான உன்னைப்போலே ‡‡ "நாகணைமிசை நம்பிரான்" என்று அவனுக்கு ஸர்வஸ்மாத் பரத்வஸூசகனாய், 57. (ஆஸ்தே பாதாளமூலஸ்த: சேஷோऽசேஷ ஸுரார்ச்சித:। தஸ்ய வீர்யம் ப்ரபாவஞ்ச ஸ்வரூபம் ரூபமேவ ச। ந ஹி வர்ணயிதும் ஶக்யம் ஜ்ஞாதும் வா த்ரிதஶைரபி॥) என்கிறபடியே, அபரிச்சேத்ய ஸ்வரூப ரூபகுண விப

§ பெரு-திரு (1-1) † பெரு-திரு (1-2) ‡ பெரியதிரும-1. || திருமாலை-36 // திருக்குறு-2 †/ நான்-திருவ-10. § திருவாய் (5-10-11) :: திருவாய் (5-10-11)

வாதிகளை உடையவனுமான திருவனந்தாழ்வான், பள்ளிகொண்டருளினால் படுக்கையாய், * இருந்தால் சிங்காசனமாய், இப்படி உனக்கு பஹுமுகமாக அடிமைசெய்து லப்தஸ்வரூபனாயிருக்கும். * பணிபதிஶப்தத்தாலே, ஶைத்யமார்த்தவ ஸௌரப்ய விஶாலோந்நத்வாதியான பர்யங்ககுணங்கள் ப்ரகடிதங்களாகிறன. || "பஞ்சசயனம்" என்னக்கடவதிறே.

"ஶய்யா, ஆஸநம்" என்று த்வயத்தைச் சொன்னது, த்வயத்திற்படியே † "திருமாற்கரவு—சென்றால் குடையாம்" 55. (நிவாஸ ஶய்யாஸந) என்று தொடங்கி, இருவருமான சேர்த்தியிலே, 58. (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்று பண்ணும் ஸர்வவித கைங்கர்யங்களுக்கும் உபலக்ஷணம். 59. (யதா யதா ஹி கௌஸல்யா) என்று ஓர பலை அப்ராப்தவிஷயத்திலே பலபடியாகப் பரிசர்யை பண்ணினாள் என்றால் ப்ரக்ருஷ்டஜ்ஞாநஶக்திகளைஉடைய இவன், ப்ராப்த விஷயத்தில் பல வடிமைகளும் செய்கை ப்ரசிபந்நமிறே. இப்படிப் பரத்வத்திலே பல அடிமைகள் செய்யுமளவன்றிக்கே, 60. (தேவத்வே தேவதேஹேயம்) என்று அநுவர்த்தித்த இவளைப்போலே அவதாரந்தோறும் அடுத்த வடிவுகொண்டு, இதுக்கென்று * ஸ்ருஷ்டனாய், 61. (ஸீதா-முவாச) என்று இவள் புருஷகாரமாக, இவள் ஸமக்ஷத்திலே ஸ்வாபேக்ஷிதங்களைப் பேசி, 58 (வைதேஹ்யா ஸஹ) என்று இவள் சேர்த்தியிலேயிறே பாவஜ்ஞனாய், 58. (அஹம் ஸர்வம்) என்று ஸர்வவித கைங்கர்யங்களையும் ப்ரார்த்தித்து அடிமைசெய்யப்பெற்று, 61(a). (ப்ரஹர்ஷயிஷ்யாமி)யிற்படியே உகப்பித்து ‡ "உகந்து பணிசெய்து" என்னும்படி ரமித்து லப்தஸ்வரூபனாய் இருப்பானொருவனிறே. § "அணைவதரவணைமேல் பூம்பாவையாகம் புணர்வது" † "தீவாய் நாகணையில் துயில்வானே திருமாலே" ‡ "சுடர்ப்பாம்பணை நம்பரனைத் திருமாலை" என்று இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்து வாழும்படியை ஆழ்வார்கள் அநுஸந்தித்தார்களிறே. இவர் தாமும் 62. (ஶ்ரியாஸஹாஸீநமநந்தபோகிநி) என்று அருளிச்செய்தாரிறே. 63. (ஶேஷபோகே ஶ்ரியா ஸஹாஸீநம்) என்று பாஷ்யகாரர். 64. (ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ:—உத்ஸங்கேऽநந்தபோகிந:) என்று பட்டர்.

|| திருப்பாவை-19. † முத-திருவ-53. ‡ திருவாய் (10-8-10) § திருவாய் † (2-8-1) பெரியதிரு (7-7-9) ‡ திருவாய் (8-7-11)

(பணிபதி: ஶய்யாऽऽஸநம்) 65. (போகப்ரியா போகவதீ போகீந்-த்ரஶயாநாऽऽஸநா) என்று இவளுக்கு அஸாதாரணமாக ஆஸநஶயநாதியான அடிமை செய்யும்படியை, ஸ்ரீஸஹஸ்ரநாமத்திலே சொல்லிற்றிறே. "ஸ்ரீமதே" [த்வயம்] என்கிறபடியே, கைங்கர்யம் ஸித்திப்பதும், ரஸிப்பதும், கைங்கர்யவர்த்தகையாய், பரமப்ராப்யையான இவள் சேர்த்தியிலேயாகையாலே, இவள் சேர்த்தியிலே அடிமை செய்கையிறே ஸ்வரூபப்ராப்தம். ஆகையிறே ||"திருமாலே நின்றே ஆட்செய்ய நீ கொண்டருள நினைப்பதுதான் என்றே" என்று ப்ரபந்நஜந கூடஸ்தர் ப்ரார்த்தித்தருளிற்று. 66. (ஸ்ரீநிவாஸே—பக்திரூபா பவது), 67. (ஶ்ரிய: காந்தோ யஸ் தத் பதாப்ஜே பரிசரணஸக்தம் பவது மே) என்று கைங்கர்யோபகரணமான பக்தியையும், கைங்கர்யத்தையும், இவள் ஸந்நிதியிலே ப்ரார்த்தித்தருளினாரிறே.

// "அனந்தன்பாலும் கருடன்பாலும்" என்று, இவனுக்கு அனந்தரம் வ்யாமோஹ விஷயமான பெரியதிருவடி இவள் விஷயத்திலே கிஞ்சித்கரித்து ஸ்வரூபம் நிறம்பெறும்படியை அருளிச்செய்கிறார் மேல் (வேதாத்மா) என்று தொடங்கி. ஆஸநபதம் காகாக்ஷிந்யாயத்தாலே மேலோடும் அந்வயித்து, "வேதாத்மா விஹகேச்வர: ஆஸநம் வாஹநம்" என்று யோஜித்துக்கொள்வது. (வேதாத்மா) 68. (ஸுபர்ணோऽஸி கருத்மாந் த்ரிவ்ருத் தே ஶிரோ காயத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தநூர் வாமதேவ்யம் ப்ருஹத்ரதந்தரே பக்ஷௌ யஜ்ஞா யஜ்ஞியம் புச்சம் சந்தாம்ஸ்யங்காநி திஷ்ணியா: ஶபா யஜூம்ஷி நாம) என்கிற ஸௌபர்ண ச்ருத்யர்த்தத்தை விவக்ஷித்து, 'வேதாத்மா' என்கிறார். 69. (த்ரயீமய:) என்றாரிறே இவர்தாமே. (வேதாத்மா) [வேதாதிஷ்டாத்ருதயா வேதாநாமாத்மா] "வேதாऽதிஷ்டாத்ருதையினாலே வேதாநாம் ஆத்மா" என்று தத்புருஷனாதல். § தத்விஶிஷ்டத்வேந தத்ஸாமாநாதிகரண்யத்தாலே "வேத ஆத்மா யஸ்யேதி" என்று பஹுவ்ரீஹியாதல். இத்தால் இவனுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸூசிதமாயிற்று. அம்ருதாऽऽஹரணாதிகளிலே இவனுடைய ஶக்திமத்த்வம் ஸித்தமிறே.

(விஹகேச்வர:) † "புள்ளரையன் புகழ்குழறும்" என்கிறபடியே பக்ஷிராஜனென்று ப்ரஸித்தனாயிருப்பானொருவனிறே. இத்தால்

|| திருவாய் (8-3-8) // பெரியாழ்திரு (5-4-8) § (பா) ததாவிஷ்டத்வேந. † பெரியாழ்-திரு (4-9-5)

70. (ஸத்யஸ் [ப்ருத்யஸ்] ஸுபர்ணோ கருடஸ் தார்க்ஷ்யஸ்து விஹகேச்வர:) என்று ஸ்ரீஸாத்வதாதிகளிலே ப்ராணாதிபஞ்சகாதிபதித்வேந அவஸ்திதனான இவனுடைய வ்யூஹவிசேஷத்தைச் சொல்லுகிறது. இவன்றான் நித்யவிபூதியிலே ‡ "ஓடும்புள்ளேறி" என்று அடிமை செய்யுமளவன்றிக்கே, லீலாவிபூதியிலுங்கூடத் தொடர்ந்து நாகபாச விமோசனம் பண்ணுவது; அம்ருத ப்ரதாநம் பண்ணுவது. || "அருளாழிப்புட்கடவீர் அவர்வீதியொருநாள்" என்றும், // "அசுரருயிரெல்லாம் தகர்த்துண்டுழலும் புட்பாகன்" என்றும் சொல்லுகிறபடி ஆச்ரிதரக்ஷணத்துக்கும், தத் விரோதிநிரஸனத்துக்கும் அநுகூலனும்படி க்ருபாஸமுத்ரமாயிருப்பானொருவனிறே. ஏவம்விதவைபவனான பெரியதிருவடி, எழுந்தருளியிருந்தால் ஸிம்ஹாஸனமுமாய் உலாவியருளும்போது வாஹனமுமாய், கிஞ்சித்கரித்து லப்தஸ்வரூபனுமாயிருக்கும்.

(வாஹநம்) விச்லேஷதசையில் †† "வெஞ்சிறைப்புள்" என்று வெறுக்கும்படியும், ‡/ "அஞ்சிறைப்புள்" என்று ஸம்ச்லேஷதசையிலே ச்லாகிக்கும்படியும் அந்தலைக்கு அந்தரங்க வாஹனமாய், 71. (த்வதங்க்ரி ஸம்மர்த்த கிணங்கசோபி)யாய், விஜயத்வஜமாயிருக்கிற விநதாதநயன் § "ஊரும் புட்கொடியுமஃதே", 69. (தாஸஸ் ஸகா வாஹநமாஸநம் த்வஜ:) என்றும் சொல்லுகிற ஸர்வவித கைங்கர்யங்களிலும் அந்விதனாய், ஸத்தை பெற்றிருக்கும் என்கிற அர்த்தத்தை "ஆஸநம் வாஹநம்" என்கிற பதத்வயமும் ப்ரகாசிப்பிக்கிறது. † "பொருசிறைப் புள்ளுவந்தேறும் பூமகளார்" :: "திருவிருந்த மார்வன்" ||† "கருடன் மேற்கொண்ட" என்று சொல்லுகிறபடியே இவள் சேர்த்தியிலே இவர்கள் அடிமைசெய்யும்படியை தர்சிப்பித்து அநுபவித்தார்களிறே. இத்தால் 72. (கருடா கருடாஸநா) என்கிற ப்ரமாணார்த்தம் சொல்லப்பட்டது.

"வேதாத்மா வாஹநம்" என்கையாலே, ஸ்வகுணாநுகுணமாக ஸ்வஸ்வ (தாமஸ) வாஹனங்களையுடைய அதமதேவதாபார்யைகளில் இவளுக்குண்டான உத்கர்ஷம் தோற்றுகிறது. §/ "பறவையேறு

‡ திருவாய்(1-8-1) || திருவாய்(1-4-6) // திருவாய்(8-10-6) †† திருவாய் (1-4-1) ‡/பெரியதிரு(9-2-8) §திருவாய்(10-2-3) †திருவாய்(1-9-3) :: நான்-திருவ-92. ||† மூன்-திருவ-57. §/ பெரியாழ்-திரு (5-4-2)

பரம் புருடா" என்கிறபடியே, "கருடவாஹனன்" என்கை அவனுக்கு ஸர்வாதிகத்வத்யோதகமானாப்போலே, இவளுக்கும் ஸர்வோத்கர்ஷ ஹேதுவாயிருக்குமிறே. "பணிபதி: ஶய்யாஸநம் வாஹநம் வேதாத்மா" என்கையாலே, அந்யோந்யம் விருத்தஜாதீயரையும் யுகபத் அவிருத்தமாக அடிமைகொள்ளுகிற அகடிதகடநாஸாமர்த்யம் தோற்றுகிறது. / "புட்கொடியாய்! தீவாய் நாகணையில் துயில்வானே! திருமாலே!" என்று, ஸர்வாதிகத்வ லக்ஷணங்கள் மூன்றையும் சேர்த்து அநுபவித்தாப்போலே, இவரும் "காந்தஸ்தே" இத்யாதியாலே விஷ்ணுபத்நீத்வ ஶேஷஶாயித்வ கருடவாஹனத்வங்களை யுகபதேவ அருளிச்செய்தாராயிற்று.

ஆக, இப்படி அகிலஸூரிபரிப்ருடரான ஶேஷ ஶேஷாஶநருடைய ஶேஷத்வம் சொன்னபோதே, ஶேஷாஶநர் முதலான அஶேஷ ஶேஷவர்க்கத்தினுடைய ஶேஷத்வமும் கைமுதிகந்யாயஸித்தமிறே. 73. (த்வதீய புக்தோஜ்ஜித ஶேஷ போஜிநா) 74. (ஹதாகிலக்லேஶமலை:) என்கிற ச்லோகத்வயத்தாலும் அகிலஸூரிவர்க்கங்களும் அகிலஜகந்மாதாவான இவள் திறத்தில் அடிமை செய்யும்படியை, இவர்தாமே அருளிச் செய்தாரிறே. 62. (ஶ்ரியா ஸஹாஸீநம்) என்று இவளோட்டைச் சேர்த்தியிலேயிறே அஶேஷபரிஜனமும் அடிமைசெய்வது. இவருடைய திவ்யஸூக்தியிற்படியே, பாஷ்யகாரரும் 75. (ஸ்ரீவல்லப) என்று தொடங்கி 75. (ஶேஷஶேஷாஶநப்ரமுக நாநாவிதாநந்தபரிஜநபரிசாரிகா பரிசரிதசரணயுகள) என்று அனுஸந்தித்தருளினாரிறே. 76. (தந்யாஸ்தே பரிசாரகர்மணி ஸதா பஶ்யந்தி யே ஸூரய:) என்று பட்டர் அருளிச்செய்தாரிறே. இனித்தான் திருமகள் என்றிறே குற்றேவல் செய்வது. 77. (ஶேஷஶேஷாஶநாதிஸர்வம் பரிஜநம் பகவதஸ் தத்ததவஸ்தோசிதபரிசர்யாயாமாஜ்ஞாபயந்த்யா) என்று இவருடைய ஆஜ்ஞானுவர்த்தனபராராயிறே அஶேஷபரிஜனமுமிருப்பது.

அவன்றான், 78. (ஸஹ பத்ந்யா) என்று பத்நீஸஹிதனைப் ப்ராப்தவிஷய பரிசர்யை பண்ணுமென்கையாலும் ப்ரஹ்மாதிகள் ஸதயிதராய்க்கொண்டு தாஸதாஸீகணமாயிருப்பர்களென்று மேலே

/ பெரியதிரு (7-7-9)

சொல்லுகையாலும், இவர்களும் ஸபத்நீகராய்க்கொண்டு விஷ்ணு பத்னிக்கடிமையாயிருப்பர்களென்னுமிடம் ஸித்தமிறே. இவர்கள் தான் அஞ்ஜலிவிஶோகைகளோடும், காந்திவாருணிகளோடும், ருத்ராநுகீர்த்திகளோடும், ஸௌத்ரவதியோடும், ஸுதர்ஶனபத்னி விஜய பத்னியோடுங்கூட ஸகுடும்பமாகவிறே ஜகத்குடும்பியான ஶ்ரிய:பதிக்கு அடிமைசெய்வது. ஆகையிறே, 75. (பரிஜநபரிசாரிகா பரிசரிதசரண யுகள) என்று அருளிச்செய்தது. இவர்கள்தான் பாகவதஸத்கார தஶையிலும் * பதியினிற்பாங்கினில் பாதங்கள் கழுவி, * பூசித்து நல்குவது தம் தேவியரோடே சேறவிறே.

இனி, இவர்களிலும் இவர்கள் மஹிஷிகள் * தேவதேவதிவ்ய மஹிஷிக்கு அந்தரங்க பரிசாரகைகளாயிருக்கும்படியை 79. (ஸைந்ய துரீணப்ராணஸஹாயாம் ஸௌத்ரவதீமாஶிஶ்ரயமம்பாம் । ஸ்ரீபதலாக்ஷா-லாஞ்சிதஸேவாப்ரோதஸத்தோர்வல்லிவிலாஸாம் ॥) 80. (தார்க்ஷ்ய-பக்ஷதிவதஸ்ய வல்லபாம் ருத்ரயா ஸஹ ஸுகீர்த்திமர்ச்சயே । ஹர்ஷ பாஷ்பமபி கீர்த்திமர்த்திநாம் யந்முகேந கமலா கடாக்ஷயேத் ॥) என்று பட்டர் அருளிச்செய்தாரிறே.

இனி, பூமிநீளைகளும் இவளுக்கு ஶேஷபூதராய் ஸேவித்திருப்பர்கள். 81. (ஸ்ரீஸஹாய:—உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித:) என்றதிறே. 82. (மாதவ! த்வயி—அஹம் ஶிஷ்யா ச தாஸீ ச பக்தா ச) என்று தான் அருளிச்செய்தாளிறே. 83. (உத்புல்லபங்கஜதடாக-மிவோபயாநி ஸ்ரீரங்கராஜமிஹ தக்ஷிணஸவ்யஸீம்நோ: । லக்ஷ்மீம் விஹாரரஸிகாமிவ ராஜஹம்ஸீம் சாயாமிவாப்யுதயிநீமவநீஞ்ச தஸ்யா: ।) என்று இவளுக்குப் பதச்சாயைபோலே பரதந்த்ரர்களாயிருப்பர்களென்றும், * புஷ்பாங்கராகங்களோபாதி போகோபகரணங்களாய் * ஸ்தனபாஹுத்ருஷ்டிகள்போலே அவயவபூதராயிறே, அல்லாத மஹிஷீவர்க்கங்களிருப்பது என்றும் பட்டர் அருளிச்செய்தருளினாரிறே. / "குழற்கோவலர் மடப்பாவையும் மண்மகளும் திருவும் நிழல்போல்வனர்" என்னக்கடவதிறே.

ஆக, பூமிநீளைகள் முதலான மஹிஷிகளும், திருவடி திருவனந்தாழ்வான் முதலான ஸூரிவர்க்கமும், † "கரைகண்டோர்" என்கிற

/ திருவிரு-3. † திருவாய் (8-3-10)

முக்தரும் இவளுக்கு ஶேஷபூதரென்று சொல்லுகையாலே, நித்ய விபூதியடங்க இவளுக்கு ஶேஷமாயிருக்கும் என்னுமிடம் தர்ஶிப்பிக்கப்பட்டது. அனந்தரம், லீலாவிபூதியடங்க இவளுக்கு ஶேஷமாயிருக்குமென்னுமிடத்தை அருளிச்செய்ய உபக்ரமித்து, அதில் ப்ரதமம் லீலாவிபூதிகாரணமான மூலப்ரக்ருதி இவளுக்கு ஶேஷமாயிருக்கும்படியை தர்ஶிப்பித்தருளுகிறார்: (யவநிகா மாயா ஜகந்மோஹிநீ) என்று. (ஜகந்மோஹிநீ மாயா தே யவநிகா) அநாத்யஜ்ஞாநத்தாலே ஜகத்தை மோஹிப்பிக்கக்கடவதாய் விசித்ரகார்யகரணோபகரணமாகையாலே மாயாஶப்தவாச்யையாயிருக்கிற மூலப்ரக்ருதி, ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்தகுணகணவிஶிஷ்டமான உன்னுடைய திவ்யமங்களவிக்ரஹமும் ததாதாரமான திவ்யாத்மஸ்வரூபமும் ப்ரதிகூலர் த்ருஷ்டிகோசரமாகாமல் மறைக்கைக்குத் திரையாயிருக்கும். திரையாவது,—அந்தர்வர்த்தி பதார்த்தங்களை பஹிச்சரர்க்குத் தெரியாதபடி திரோதானம்பண்ணுவதாய், ஶுக்ல க்ருஷ்ண ரக்ததந்துக்களால் சமைக்கப்பட்டு நாநாவர்ணங்களாலே விசித்ரையாய், அத்யாச்சர்யவிஶிஷ்டையாய் இருப்பதொன்று. இதுவும் திவ்யதம்பதிகளுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் திவ்ய மங்களவிக்ரஹத்தையும், திவ்யாவயவங்களையும் அநாஶ்ரிதர்க்கு கோசரியாதபடி அஜ்ஞானத்தை விளைத்துத் திரோதாயகமான திரஸ்கரிணியாயிருக்கையாலும் 84. (லோஹிதஶுக்லக்ருஷ்ணம்) என்கிறபடியே குணத்ரயவிஶிஷ்ட விசித்ராகர்மஸூத்ரத்தாலே கட்டப்பட்டு விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே ஆஶ்சர்யதமையாயிருக்கையாலும், திரையாக நிரூபிக்கிறார்.

(ஜகந்மோஹிநீ) பரமாத்மவிஷயமாகவும், ப்ரத்யகாத்மவிஷயமாகவும், ஸ்வவிஷயமாகவும் அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்களைப் பிறப்பித்து, அத்தாலே ஜகத்தை மோஹிப்பிக்கையாலே "ஜகந்மோஹிநீ" என்கிறார். பரமாத்மாவினிடத்தில் அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்களைப் பிறப்பிக்கையாவது,—ஶ்ரிய:பதியாய், நிகில ஹேயப்ரத்யனீக கல்யாணகுணவிஶிஷ்டனாய், உபயவிபூதிநிர்வாஹகனாயிருக்கிற புருஷோத்தமனை "நிர்விஶேஷசிந்மாத்ரவஸ்து" என்று மாயாவாதம் சொல்லுதல்; "சிதசிதீச்வரர்கள் மூன்றும் ஏகத்ரவ்ய பரிணாமம்" என்று பேதாபேதம் சொல்லுதல்; "கர்மானுஷ்டானத்

துக்குச் சேதனனுண்டாகில், பலப்ரதானத்துக்குக் கர்மமுண்டாகில், இனி ஈச்வரன் ஏதுக்கு'' என்று தத்ஸத்பாவத்தை இசையா தொழிதல்; ஏவமாதிகளான புத்திகளைப் பிறப்பிக்கை. ப்ரத்யகாத்மாவி னிடத்தில் அந்யதாஜ்ஞான விபரீதஜ்ஞானங்களைப் பிறப்பிக்கையாவது, —85. (அநாத்மந்யாத்மபுத்திர்யா) என்கிறபடியே "தேஹமே ஆத்மா" என்னுதல், இந்த்ரியாதிகளை ஆத்மா என்னுதல், தேஹபரிணாமமென்னு தல், அந்யசேஷமென்னுதல், ஸ்வதந்த்ரமென்னுதல், ஏவமாதியான விப்ரதிபத்திகளை விளைக்கை. ஸ்வவிஷயமாக விபரீததீயை விளைக்கை யாவது,—ஸ்வகார்யமான ஶப்தாதிகளிலே போக்யத்வ புத்தியைப் பிறப்பிக்கை. இவ்வர்த்தத்ரயத்தையும் பாஷ்யகாரர், 86. (பகவத் ஸ்வரூபதிரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் ஸ்வவிஷயாயாஶ்ச போக்ய புத்தேர் ஜநநீம்) என்றருளிச்செய்தாரிறே.

'மாயா'ஶப்தத்தாலே 87. (மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்) என் கிறபடியே மூலப்ராக்ருதியைச் சொல்லுகிறது. இதுதான் மாயை யாகையாலேயிறே ஜகந்மோஹினியாயிற்று. 88. (அநாதிமாயயா ஸுப்த:) என்னக்கடவதிறே. அஜ்ஞாநஹேதுவாயிறே இதுதா னிருப்பது. ஆக, இப்படி மாயாஶப்தவாச்யையாய், ஜகன்மோஹினி யான மூலப்ரக்ருதி யவனிகாரூபேண கிஞ்சித்கரித்து ஶேஷமாயிருக் குமென்றதாயிற்று. யவனிகையாகில், அந்தர்வர்த்திகளோடு பஹிச் சரரோடு வாசியற த்ருஷ்டி ப்ரஸரண விரோதத்தாலே அந்யோந்யா ஽வலோகநரோதினியாயிறே இருப்பது. அப்படியே ப்ரக்ருதியை யவனிகையாக நிரூபிக்கும்போது பிராட்டிக்கும் கர்மவச்யத்வமும், அத்தாலே பகவந்மாயாதிரோஹிதஜ்ஞானத்வமும் அங்கீகரித்ததாய் விடுமிறே. ஆகையால் இது சேரும்படி என்னென்னில்: தச்சேஷ பூதையாய், தந்நியாம்யையாய், தததீநவ்யாபாரத்தையுமுடைத்தான ப்ரக்ருதி, ஸ்வாமினியாய், நியாமகையுமாயிருக்கிற இவளுடைய ஸர்வவிஷயத்ருஷ்டிதிரோதானம் பண்ணமாட்டாதிறே. 89. (மாயயா ஸந்நிருத்த:) என்றுகொண்டு கர்மவச்யையாகிலிறே மாயா திரோஹித்ஸ்வப்ரகாஶையாயிருப்பது. ஈஶ்வரனைப்போலே அகர்ம வச்யையான இவளுக்குத் திரோதானம் கூடாதிறே. ஆகையாலே ப்ரதிகூலர்க்கும் தத்ஸ்வரூபரூபாதிகள் யதாவாகத் தோற்றுதபடி

திரோதானம் பண்ணுமத்தைப் பற்றத் திரஸ்கரணியாக ரூபித்தவித்தால் ஒரு விரோதமில்லை.

ஆகக் கீழ் நித்யவிபூதியிலுள்ளார் இவளுக்கு ஶேஷபூதராயிருக்கும்படியை தர்ஶிப்பித்தருளி, லீலாவிபூதி காரணமான மூலப்ரக்ருதியினுடைய ஶேஷத்வத்தை அருளிச்செய்து, ததாரப்தாண்டாந்தர்வர்த்திகளாய், தாத்ருஶப்ரக்ருதிமோஹிதராய், கர்மவஶ்யருமான ப்ரஹ்மாதிகள் ஸபத்நீகராய்க்கொண்டு இவளுக்கு அடிமையாயிருக்கும்படியை அருளிச்செய்கிறார் மேல், (ப்ரஹ்மேஶாதீத்யாதியால்). திரைவளைத்திருக்கவேண்டும்படி லோகவிலக்ஷணரான திவ்யதம்பதிகளைச் சொல்லி, 58. (ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச) என்று கொண்டு திரைக்குள்ளோடு புறம்போடு வாசியற * உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து வாழும் அந்தரங்கரைச் சொல்லி, திரைதன்னைச் சொல்லி திரைக்குப் புறம்பு நின்று ஸேவித்திருக்குமவர்களைச் சொல்லுகிறது. § கடிக்கமலத்துள்ளிருந்தும் காண்கிலானிறே. ‡ "நீருடி தான் காணமாட்டாத" || "கார் செரிந்த கண்டத்தான் எண்கண்ணான் காணான், அவன் வைத்த பண்டைத் தானத்தின் பதி" என்றருளிச்செய்தார்களிறே ஸர்வஜ்ஞரான ஆழ்வார்கள். §§ நெற்றிமேல் கண்ணானும் நிறைமொழிவாய் நான்முகனும், நாட்டமாயிரத்தானும் தாந்தாம் கற்ற பெற்றியால் வணங்குமத்தனை போக்கி, கரையருகே நின்று கூப்பிடுகிறவர்கள் கரைகாணமாட்டார்களிறே. †† "சிவற்கும் திசைமுகற்கும் தரமறியலாமோ" என்னக்கடவதிறே.

(ப்ரஹ்மேஶாதீத்யாதி) 90. (யோ ப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்) என்கிறபடியே திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறக்கையாலே உனக்குப் புத்ரனான ப்ரஹ்மா, தஜ்ஜ்யேஷ்ட புத்ரனாகையாலே உனக்குப் பௌத்ரனான ருத்ரன், ஆதிஶப்தத்தாலே 91. (ஸேந்த்ர:) † "தனிரொளி இமையவர் தலைவன்" // "நின்ற சசிபதியை" §§ "வெண்பகட்டிலொருவன்" என்று இவர்களோடே ஸஹபடிக்கும்படியான நிலைமையுடைய இந்த்ரனையும், * இந்திரனுள்ளிட்ட தேவர் குழாத்தையும் சொல்லுகிறது. ஆக, இப்படி விபுதஶ்ரேஷ்டரான

§ முத-திருவ 56. ‡ நான்-திருவ 27. || நான்-திருவ 73. §§ பெரிய திரு (11-6-3)
†† திருவாய் (2-8-12) † திருவாசிரி 7. // திருவாய் (7-6-7)

ப்ரஹ்மருத்ரர்கள் முதலான தேவதாஸமூஹம் உனக்கு தாஸகணமாய், தத்பத்னிகளான ஸரஸ்வதீ ருத்ராணீ இந்த்ராணீ ப்ரப்ருதிகளும் தத்தாஸீபூதரான அப்ஸரஸ்ஸங்கங்களும், உனக்கு தாஸீகணமாய் தாஸக்ருத்யத்திலே அநவரதாந்வயத்தை உடையராய்க் கொண்டு ஸத்தை பெற்றிருப்பாகள். இத்தால் § நீலார் கண்டத்தம்மானும் நிறை நான்முகனும் இந்திரனும்—சேலேய் கண்ணார் பலர் சூழஸேவித்திருக்கும்படியைச் சொல்லிற்றாயிற்று.

வாக உடைத்தான கடாக்ஷலேஶாம்ருதோத்ரேகத்தாலே. (கருணா நிரீக்ஷணம்) கருணாஹேதுகநிரீக்ஷணம். கருணயா விஷயீகரணம், நிரீக்ஷணஶப்தத்தாலே உபசரிக்கிறதாகவுமாம்; கருணாப்ரேரிதமாயிறே நிரீக்ஷணம் உண்டாவது. 185. (காருண்யமாருதாநீதை:) என்றதிறே. (நிரீக்ஷணஸுதாஸந்துக்ஷணாத்) 186. (த்வதீக்ஷணஸுதாஸிந்து வீசி-விக்ஷேபஶீகரை:) என்கிறபடியே கடாக்ஷாம்ருதத்ருஷ்டிகளாலே யென்கை. ஏவம்பூதகடாக்ஷம் தான் ஸகலாத்மஸஞ்ஜீவனமாயிருக்கை யாலே ஸுதையாக நிரூபிக்கிறார். ஸுதையாலுண்டான ஸம்ய குல்லாஸத்தாலே; கடாக்ஷநிக்ஷேபத்தாலேயென்கை. (ரக்ஷ்யதே) உபத்ரவரஹிதமாக ஸ்தாபிக்கப்படுகிறது. (ப்ராக்) உன்னுடைய உபேக்ஷாகாலத்திலே. (த்வதலாபத:) உன்னுடைய நிரீக்ஷணாலாபத் தாலல்லது, உன்னுடைய கோபத்தாலன்றிறே. 176. (க: குப்யேத் வாநரோத்தம) என்று, சொல்மினுங்கனுக்கும் உபதேஶிக்கிற உனக்குக் கோபமுண்டாக ஸம்பாவனையில்லையிறே. (நஷ்டம்) * விநஷ்டப்ராய மான. (த்ரிபுவநம்) இத்தால், த்ரைலோக்யாந்தர்வர்த்தியான ஸகல ஜனங்களையும் உபலக்ஷிக்கிறது. "மஞ்சா: க்ரோஶந்தி" இதிவத். (ஸம்ப்ரதி) உன்னுடைய * கடாக்ஷவீக்ஷாக்ஷணலக்ஷ்யமான தஶை யிலே. (அநந்தோதயம் யதா பவதி) பூர்வகாலத்திலும் அதிஶயிதாப் யுதயமாம்படி. (ரக்ஷ்யதே) ப்ராக் த்வதலாபதோ நஷ்டம் த்ரிபுவநம், ஸம்ப்ரதி ஈஷத் த்வத் கருணாநிரீக்ஷணாத் அநந்தோதயம் ரக்ஷ்யதே.

துர்வாஸச்ஶாபத்தாலே நிச்ஶ்ரீகமாம்படி புவனத்ரயத்தையும் பரித்யஜித்து, பயோததியிலே பிராட்டி எழுந்தருளினபோது தத்கடாக்ஷாபாவத்தாலே "அஸந்நேவ" என்னும்படி நஷ்டமான த்ரிபுவநம், பின்பு 187. (க்ஷீரோதாச்ச்ரீஸ்ஸமுத்பந்நா ச்ரூயதேऽம்ருத-மந்தநே) ‡ "செழுங்கடலமுதினில் பிறந்த அவளும்" என்னும்படி * அமுதில் வரும் பெண்ணமுதாய் அவதரித்து, 188. (திவ்யமால்யாம் பரதரா ஸ்நாதா பூஷணபூஷிதா । பச்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷ:ஸ்தலம் ஹரே: ॥) என்கிறபடியே ஸ்நாதையாய், மஹார்ஹ வஸநையாய், சித்ரமால்யாநுலேபநையாய்க் கொண்டு * திகழ்கின்ற திருமார்பிலே சேர்ந்து † "அகலகில்லேனிறையும்" என்று திருக்கலந்து

‡ பெரியதிரு (2-7-1). † திருவாய் (6-10-10).

ஸம்ச்லேஷித்தவனந்தரம், உன்னுடைய காருண்ய ஶீதல கடாக்ஷ ஸுதாவர்ஷத்தாலே வழிய வார்க்க, அனந்தரம், அத்தாலே ஸத்தை பெற்று, ஸம்ருத்தையானபடியை இச்லோகத்திலே அருளிச்செய்கிறார். 189. (த்வயா தேவி பரித்யக்தம் ஸகலம் புவநத்ரயம்। விநஷ்டப்ராயமபவத் த்வயேதாநீம் ஸமேதிதம்॥) என்று இவ்வர்த்தம் இந்த்ரனாலே சொல்லப்பட்டதிறே. இப்படி அந்வயவ்யதிரேகங்களாலே ப்ரஹ்மேந்த்ரப்ரப்ருதிசேதனருடைய ஐச்வர்யம் பிராட்டியினுடைய கடாக்ஷாதீநமென்னுமிடம் தர்ஶிப்பிக்கப்பட்டது. 190. (ப்ரஹ்மாத்யாச்ச ஸுராஸ் ஸர்வே முநயச்ச தபோதநா:। ஏதந்தே த்வத்பதச்சாயாமாச்ரித்ய கமலேச்வரி॥) என்னக்கடவதிறே. 191. (யஸ்யா: கடாக்ஷணமநுக்ஷணம்) இத்யாதி.

அதவா, (ஈஷத் த்வதித்யாதி) 192. (ப்ருதிவ்யப்ஸு லீயதே) இத்யாரப்ய, 192. (ஆப: பரே தேவ ஏகீபவதி), 94. (ந ப்ரஹ்மா நேஶாந:), 193. (ஆஸீதிதம் தமோபூதமப்ரஜ்ஞாதமலக்ஷணம்। அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வதா) ‡ "ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று" இத்யாதிப்படியே, ஸர்வ ஸம்ஹாரகாலத்திலே உன்னுடைய கடாக்ஷாம்ருதவ்ருஷ்ட்யலாபத்தாலே "அஸந்நேவ" என்னும்படி நாமரூபவிபாகாநர்ஹமாய், நஷ்டமான த்ரிபுவனமானது, 193. (அப ஏவ ஸஸர்ஜாதௌ) 194. (தத் ஸ்ருஷ்ட்வா) என்று சொல்லுகிற ஸ்ருஷ்டிகாலத்திலே, 95. (நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே), 195. (ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே), 196. (ஸர்வாணி ரூபாணி விசித்ய தீர:), 197. (அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிச்ய நாமரூபே வ்யாகரவாணி) ‡ "நான்முகன் தன்னொடு தேவருலகொடு உயிர் படைத்தான்" § "நாராயணன் படைத்தான்" இத்யாதிப்ரமாணப்ரகாரேண அண்டங்களினுடையவும், ததந்தர்வர்த்தி தேவதிர்யங் மனுஷ்யஸ்தாவரரூப சதுர்விதபூதங்களுடையவும் ஸ்ருஷ்ட்யுன்முகனாய்க் கொண்டு, 198. (ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி), (தேஜ ஐக்ஷத), (ஆப ஐக்ஷந்த) என்று ஸ்ருஷ்டிக்குக் கடவனாகப் பார்த்தருளினபோது, 199. (யத்ப்ரூபங்கா: ப்ரமாணம் ஸ்திரசரரசநாதாரதம்யே முராரே:) 200. (ஸமஸ்தசிதசித்விதாநவ்யஸநம் ஹரே:, அங்கீகாரிபிராலோகைஸ் ஸார்த்தயந்த்யை), 201. (உல்லாஸபல்லவிதபாலித

‡ திருவாய் (4-10-1). § நான்-திருவ-1.

ஸப்தலோகீ நிர்வாஹகோரகிதநேமகடாக்ஷலீலாம்) 172. (அசேஷஜக தாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ: ஸ்வர்க்கம்) என்று தொடங்கி 172. (யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேऽகிலம்) இத்யாதி ப்ரமாணப்ரகாரேண உன்னுடைய ப்ருகுடிபடனாய், த்வதிங்கிதபராதீனனாய்க்கொண்டு ஸமஸ்தசிதசித்விதாநம் பண்ணுகிற அவனுடைய அந்தக் கடாக்ஷானுகுணமாகக் கருணாம்ருதகடாக்ஷநிக்ஷேபங்களை நீ பண்ணுகையாலேயன்றோ நாமரூபவிபாகார்ஹமாய்க் கொண்டு ரக்ஷிக்கப்படுகிறது. (ஈஷத் த்வத்கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத் ஸம்ப்ரத்யநந்தோதயம் யதா பவதி ததா ரக்ஷ்யதே)

(ப்ராக் ததலாபதோ நஷ்டம் த்ரிபுவநம் ஸம்ப்ரதி ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாதநந்தோதயம் ரக்ஷ்யதே) † "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள்" என்கிறபடியே கடுங்கோடையிலே கமர் பிளந்து உலர்ந்துபோந்த பயிரானது நினைவற மேகமேறி வர்ஷித்தால் ஸத்தைபெற்று தரித்து பலபர்யந்த மாமாப்போலே * மழைக்கண் மடந்தையான நீ குளிரக் கடாக்ஷிக்கை யாலேயன்றோ முன்பு நஷ்டமான ஜகத்து, இப்போது மஹீமஹீதர ஜலதிரூபமாய், தேவதிர்யங்மநுஷ்ய ஸ்தாவரரூபசதுர்வித தேஹப்ரவேசசதுரரான ஆத்மாக்களையுடைத்தாய், போக்யபோகோபகரண போகஸ்தானரூபேண அபிவ்ருத்தமாய்த்தென்று அப்யயபூர்விகையான ஸ்ருஷ்டியில் இவளுக்கு அந்வயம் சொல்லவுமாம். "இப்படி ஜகத்காரணத்வத்தில் இவளுக்கு அந்வயமுண்டோ?" என்று ப்ரச்நம் பண்ணின நடாதூரம்மாளைக் குறித்துப் பிள்ளான் அருளிச்செய்த வார்த்தையை இவ்விடத்திலே அநுஸந்திப்பது. அதாவது:—"இவ்வர்த்தத்தில் ஸந்தேஹமுண்டோ? 202. (ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யானி। ப்ரஜாச்சோத்பாதயிதவ்யா:॥) என்று ப்ரமாணம் சொல்லுகையாலே ஸஹதர்மசாரிணியான இவளுக்கும் அந்வயம் உண்டு" என்று அருளிச்செய்தது.

உத்தார்த்த ஸமர்த்தனவ்யாஜத்தாலே ஸகலபுருஷார்த்தங்களும் தத்ப்ரஸாதாதீநமாயிருக்கும் என்கிறார் (ச்ரேய) இத்யாதியாலே. [அரவிந்தலோசநமந: காந்தாப்ரஸாதாத்ருதே ந்ருணாம் ஸம்ஸ்ருத்ய

---

† பெரு-திரு (5-7).

க்ஷரவைஷ்ணவாத்வஸு ச்ரேய: கர்ஹிசித் ந ஸம்பாவ்யதே ஹி]
(அரவிந்தலோசந:) 203. (தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ-
மக்ஷிணீ) என்று * கம்பீராம்பஸ்ஸமுத்பூதமாய், * ஸம்ம்ருஷ்டநாள
மாய், *ரவிகரவிகஸிதமுமான புண்டரீகதளம்போலே அமலாயதே
க்ஷணனிறே அவன். ஏதத்துல்யஶீலையான * அஸிதேக்ஷணையிறே
இவள். "த்வத்ப்ரஸாதாத்ருதே" என்னவமைந்திருக்க, இவ்விஶே
ஷணமென்னென்னில்: 204. (ஜிதம் தே), / "தாமரைக்கண்ணனை"
என்று உபயவிபூதியையும் எழுத்துவாங்குகிற * அனைத்துலகு
முடைய அரவிந்தலோசனனையும், வசீகரிக்கவல்ல வால்ப்யப்ரஸித்தி
தோற்ற விஶேஷிக்கிறார். இத்தால் ஸர்வஸ்மாத்பரனாய், ஸ்வதந்த்ர
னான அவனும், இவள் ப்ரஸாதபாத்ரமானார்க்கொழியக் கார்யம் செய்
யானென்னுமிடமும் தோற்றுகிறது.

"அரவிந்தலோசநமந: காந்தா" என்கையாலே 205. (விஷ்ணோ:
கடாக்ஷம்) 206. (யம் பச்யேந் மதுஸூதந:) என்று சொல்லுகிற அவ
னுடைய ஸௌஹார்த்தப்ரகாஶகமான கடாக்ஷமும் ஏததீநம்
என்னுமிடம் ஸித்தமிறே. (மந: காந்தா) தததீயந்தாபிமதையென்ற
படி. கீழ் "காந்தஸ்தே" என்றும், இங்கு "மந: காந்தா" என்றும்
சொல்லுகையாலே பரஸ்பரானுகூலதயா ஸர்வாபிமதப்ரதத்வத்திலே
உபயர்க்குமுள்ள ஸௌஹ்ருதஸாமரஸ்யம் ஸ்பஷ்டமாயிற்று. 206.
(அஸ்யா தேவ்யா:) இத்யாதி. (ப்ரஸாதாத்) தயாவிஶேஷத்தாலே.
(காந்தாப்ரஸாதாத்) 207. (ப்ரஸாதபரமௌ) என்று சொல்லுகிற
அவனுடைய ப்ரஸாதத்துக்கும் அடியான ப்ரஸாதத்தாலே. * மழைக்
கண் மடந்தையாகையாலே அவனுடைய குளிர்ந்த அருளும் வெந்நீர்
என்னலாம்படி அதிஶீதளமாயிறே ஶீதளஸ்வபாவையான இவள்
தயையிருப்பது. (ருதே) அனுக்ரஹைகஸ்வபாவையான இவளுக்கு
ஓரிடத்திலும் நிக்ரஹம் ஸம்பவியாமையாலே, தந்நிவ்ருத்திரூபப்ர
ஸாதாயோகத்தால் '†ஒழிய' என்கை.

(ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு) பாரிஶேஷ்யப்ரமாணத்
தாலும், புருஷார்த்த ஸமபிவ்யாஹாரத்தாலும் * ஸம்ஸ்ருதிஶப்தம்

/ திருவாய்(2-6-3) † 'தயாவிஶேஷரூபப்ரஸாதத்தாலொழிய' என்றோ
வேறுவிதமாகவோ இருக்கவேண்டும்.

ஐச்வர்யபரம். 34. (ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா) என்று விஶதீகரித்தருளினாரிறே. ஆனால், ஐஶ்வர்யத்தை *ஸம்ஸ்ருதிஶப்தத்தாலே அருளிச்செய்வானென்? என்னில்; †"கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக" என்று சொல்லுகிறபடியே ஐஶ்வர்யம் அல்லலெனத் தோற்றி எரிதீயிற்சுடும்படியான வைராக்யத்தாலே, ‡"இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" ‡"பெற்றாலும் ஆதரியேன்", ‡"வானாளும் செல்வமும் இம்மண்ணரசும் யான் வேண்டேன்" என்று *ஐஹலௌகிகமான ஐஶ்வர்யத்தையும் *பாரலௌகிகமான ஐஶ்வர்யத்தையும் பரித்யஜித்து, 10. (மா ஸ்மபூத்) என்றிருக்கும் ஸ்வாபிப்ராயத்தாலும், 208. (அநர்த்தாக்யம்) என்னும்படி அநர்த்தாவஹமாகையாலும், அல்பாஸ்திரத்வாதிதோஷ துஷ்டமாகையாலும், 209. (தநம் ப்ராப்ய மாத்யந் உச்சைர் ந மாம் ஸ்மரேத்) என்கிறபடியே, மதஹேதுவாய், பகவத்ஸ்மரணவிரோதியாய், இவ்வாகாரங்களினாலே ஸம்ஸாரம் அவத்யகரமாயிருக்கையாலும் *ஸம்ஸ்ருதிஶப்தத்தாலே ஐஶ்வர்யத்தை அருளிச்செய்கிறார். *அக்ஷரஶப்தத்தாலே ஆத்மாநுபவத்தைச் சொல்லுகிறது. *வைஷ்ணவாத்வஶப்தத்தாலே 210. (ஸோऽத்வந: பாரமாப்நோதி) என்கிற கதிவிஶேஷத்வாரா பகவத்ப்ராப்தியை லக்ஷிக்கிறது. இவற்றில், (ஶ்ரேய:) ச்ரேஷ்டதமஸுகம்; தத்ஸாதநஸுக்ருதவிஶேஷமாகவுமாம். 211. (ச்ரேயஸீ † ஸுக்ருதம் வ்ருஷ:) என்றதிறே.

(ந்ருணாம்) அகிலக்ஷேத்ரஜ்ஞர்க்கெல்லாம் என்றபடி. (ந ஸம்பாவ்யதே) 'ந லித்யதி' என்றபடி. §"திருமாமகள் தன்னருளாலுலகில் தேர் மன்னராய்" என்றும், ||"செடியாராக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமால்" என்றும், ::"திருமகளால் அருள்பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்தாமே" என்றும், அருளிச்செய்தபடியே ஐச்வர்யகைவல்ய பகவல்லாபரூப புருஷார்த்தங்களெல்லாம் பெரியபிராட்டியாருடைய ப்ரஸாதத்தாலல்லது பெற அரிதாகையாலே, "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு ச்ரேய: ப்ரஸாதாத்ருதே

---

† திருவாய் (4-9-4) ‡ பெரு-திரு-4. † (பா) (1) ஸுக்ருதம் விஷய: (2) ஸுக்ருதவிஶேஷ: § பெரியதிரு (2-9-10) || திருவாய் (1.5-7) :: பெரியதிரு (11-6-10)

ந்ருணாம் ந ஸம்பாவ்யதே ஹி” என்கிறார். 212. (பத்மயோநிரிதம் ப்ராப்ய படங் ஸ்தோத்ரம் தத: பரம்। திவ்யம் சாஷ்டகுணைச்வர்யம் தத் ப்ரஸாதாச்ச லப்தவாந்), 213. (ப்ரஹ்மாதீநாம் யதாயத்தம் வைபவம் யஸ்ய ஸா ஸ்வயம்। தஸ்ய கைமுத்யநிர்த்தார்யமீச்வரத்வம் ஶ்ரிய: பதே:॥) என்று ப்ரஹ்மாத்யைச்வர்யத்தோடு, ப்ரஹ்மஜனகனான ஈச்வரனுடைய ஐச்வர்யத்தோடு வாசியற தத்ப்ரஸாதாதீநமாயிருக்கும் படியை ப்ரதிபாதித்ததிறே. 214. (ஆ குக்ராமநியாமகாத்) என்றும், 215. (ஏகோ முக்தாதபத்ரப்ரசலமணிகணாத்காரி) என்றும், 34. (ஐச்வர்யமக்ஷரகதிம்) என்றும் பட்டரும் இவ்வர்த்தத்தை ப்ரகடீகரித்தருளினாரிறே.

(ப்ரஸாதாத்ருதே ச்ரேயோ ந ஸம்பாவ்யதே) என்கையாலே அவனுடைய ஸகலபலப்ரதத்வமும் ஏததீநமென்னுமிடம் தோற்றுகிறது. 172. (அசேஷஜகதாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ: ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிகபதம் ஸர்வஞ்ச குர்வந் ஹரி:। யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேऽகிலம்) என்று ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளும் புருஷார்த்த ஸ்ருஷ்டியும் ததிங்கிதபராதீனமானால், புருஷார்த்தப்ரதத்வம் தததீநமென்னச் சொல்லவேண்டாவிறே. * ஹிரண்ய ப்தம் ஸ்ரீஸூக்தாதி ப்ரஸித்திபரம். இவளுடைய †ப்ரபாவமும் இந்த்ராதிகள் †ப்ரபாவம் போலே காலபேதபேத்யமாயிருக்குமோவென்னில்: அங்ஙனன்றிக்கே, ஏகரூபமாயிருக்குமென்கிறார் (கர்ஹிசித்) என்று; கதாசித் இத்யர்த்த:; கர்மாதீந †ப்ரபாவமாகையாலே, காலபேதபேத்யமாயிருக்கும் அது; ஸத்யஸங்கல்பாதீந †ப்ரபாவமாகையாலே இது ஏகரூபமாயிருக்குமென்றபடி.

நநு, 216. (அம்ருதஸ்யைஷ ஸேது:), 217. (ஸ ப்ரீதோऽலம் பலாய), 218. (பலமத உபபத்தே:) 219. (மோக்ஷமிச்சேஜ்ஜநார்த்தநாத்) இத்யாதிப்ரமாணங்கள் மோக்ஷப்ரதத்வத்தை முகுந்தனுக்கே அஸாதாரணமாக ப்ரதிபாதியாநிற்க, இங்கே பிராட்டிக்கு மோக்ஷோபாயத்வம் சொல்லுகை, ஸ்வேதரஸமஸ்தஸஹாயாநபேக்ஷோபாயத்வத்துக்குச்சேருமோவென்னில்: “இவள் புருஷகாரமானாலல்லது ஈச்வரன் கார்யம் செய்யான்” என்கிற நிச்சய நிபந்தனமாகப் பரம்பரயா மோக்ஷப்ரதத்வம் சொன்ன இத்தால், தந்நிரபேக்ஷோபாயத்வவிரோதம்

† (பா) ப்ரஸாத

ப்ரஸங்கியாதிறே. 202. (உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம்) என்று உபாயத்வம் ஸ்வதஸ்ஸித்தமானாலும், இவள் புருஷீகரியாதவிடத்தில் அது கார்யகரமாகாதிறே. அந்வயவ்யதிரேகங்களாலே தலை பெற்றாரும் தலை அறுப்புண்டாருமாயிறே இருப்பது.

அதில், புருஷகாரஸாபேக்ஷத்வம் உபாயநைரபேக்ஷ்யபஞ்ஜகமாகாதோ? என்னில்: ஸ்வீகாரதசையில் ஸ்வீகர்த்தவ்யஸாபேக்ஷமானவோபாதி புருஷகாரஸாபேக்ஷமானாலும், பலப்ரதாநதசையில் பலப்ரதத்வஹேதுவான ஜ்ஞானசக்த்யாதிகளால் பூர்ணனாகையாலே, உபயநிரபேக்ஷமாகக் கார்யம் செய்ய வல்லனாகையாலே புருஷகார-ஸாபேக்ஷத்வம் உபாயநைரபேக்ஷ்யபஞ்ஜகமாகாதிறே. இத்தால் கார்யகாலத்தில் ஸாபேக்ஷத்வம் நிரபேக்ஷத்வபஞ்ஜகமாமித்தனையல்லது வரணகாலத்தில் ஸாபேக்ஷத்வம் நிரபேக்ஷத்வபஞ்ஜகமாகாது என்றதாயிற்று. ஆகையிறே "உபாயஸ்வீகாரத்தில் புருஷஸாபேக்ஷமுமாய் புருஷகாரஸாபேக்ஷமுமாயிருக்கும்; கார்யகாலத்தில் உபயநிரபேக்ஷமாயிருக்கும்" என்று ஆசார்யாக்ரேஸரரான பிள்ளை லோகாசார்யரும் அருளிச்செய்தது. 221. (லக்ஷ்ம்யா ஸஹ ரக்ஷக:) என்கிறவிடத்தில் இவளுக்கும் உபாயாந்வயம் சொல்லிற்றிறேயென்னில்: அங்கும் அப்ரதாநார்த்தே த்ருதீயையாகையாலே, அப்ரதான ரக்ஷணமான புருஷகாரபாவம் சொல்லுகிறது. உபாயவரணப்ரதிபாதகமான பூர்வவாக்யத்திலே வாத்ஸல்யாதிவத், ஜ்ஞானசக்த்யாதிவத், விக்ரஹவத், இவளையும் உபாயவிசேஷணமாகச் சொல்லுகையாலே, இவளுக்கும் குணாதிவத் உபாயத்வம் ஸித்தமிறே என்னில்: வாத்ஸல்யாதிகள் ஆஸ்ரயண ஸௌகர்யாபாதகங்களாயும், ஜ்ஞாநசக்த்யாதிகள் ஆஸ்ரிதகார்யாபாதகங்களாயும், விக்ரஹம் சுபாஸ்ரயமாயும் உபயோகிக்குமவையாகையாலே, இவற்றுக்குத் ததநுவிதாயித்வமாத்ரமேயிறே உள்ளது. இப்படியே இவளும் ததநுவிதாயியாயிருக்கையாலே புருஷகாரபாவமே இவளுக்கு நியதமாயிருக்கும் என்றிறே த்வயத்திலும் நிர்ணயித்தது. கிஞ்ச, குணாதிகளுக்கு உபாயத்வம் உண்டாகிலும், இவளுக்குப் புருஷகாரபாவம் நியதமாயிருக்கும் என்றிறே ஆசார்யர்கள் நிர்வஹித்தது. ஆகையால் இவளுக்குப் புருஷகாரபாவமே அங்கீகார்யம் என்றதாயிற்று.

லக்ஷ்மீகுணாதிகளுக்கு விஶேஷணத்வம் அவிஶிஷ்டமாயிருக்க, குணங்களுக்கு உபாயத்வம் அங்கீகரித்துப் பிராட்டிக்குப் புருஷகாரத்வம் அங்கீகரிக்கைக்கு ஹேதுவென்னென்னில்: குணங்கள் கார்யோபயோகிகளாகையாலேயும், இவளுக்குக் கார்யோபயோகித்வம் இல்லாமையாலும், குணங்களுக்கு உபாயத்வமும், இவளுக்குப் புருஷகாரத்வமும் அங்கீகரிக்கத் தட்டில்லை. நநு, பிராட்டிக்கு உபாயத்வம் கொள்ளில் உபாயநைரபேக்ஷ்யம் ஸித்தியாதவோபாதி, குணங்களுக்கு உபாயத்வம் கொள்ளில் தந்நைரபேக்ஷ்யஹானி வாராதோ? என்னில்: குணங்கள் ப்ருதக்புத்திப்ரவர்த்தகமல்லாமையால், குணத்வாரா குணி கார்யம் செய்கை நைரபேக்ஷ்யபஞ்ஜகமன்று. த்ரவ்யத்வேந பிராட்டிக்கு ப்ருதக்புத்திப்ரவ்ருத்தி யோக்யதை உண்டாகையாலே, ததுபாயத்வே உபாயநைரபேக்ஷ்யம் ஜீவியாதிறே. ஆகையிறே உபாயாநுஷ்டாநப்ரகாஶகமான பூர்வவாக்யத்திலே, "சித்ரகுமாநய" என்கிறவிடத்திற்போலே பிராட்டிக்கு உபலக்ஷணத்வமும், உபேயப்ரார்த்தநாப்ரகாஶகமான உத்தரவாக்யத்தில் "தண்டிநமாநய" என்கிறவிடத்திற்போலே விஶேஷணத்வமும் நிர்ணயித்து அநுஸந்தித்ததும். இரண்டு இடத்திலும் ஶப்தம் ஒத்திருக்கையாலே, ஏகப்ரகாரமாக உபயத்ர நிர்வாஹம் பண்ண ப்ராப்தமாயிருக்க, ஏகத்ர உபலக்ஷணத்வமும், அந்யத்ர விஶேஷணத்வமும் என்று இப்படி விபஜிக்கிறதுக்கு கமனிகையென்? என்னில்: வாக்யத்வயத்திலும் விஶேஷ்யப்ரதிபாத்யஶப்தங்கள் ஸமானமாயிருக்கச் செய்தேயும், 222. (அர்த்தாத் ப்ரகரணல்லிங்காத்ஔசித்யாதர்த்தநிர்ணய:) என்கிற ந்யாயத்தாலே, பூர்வவாக்யம் உபாயப்ரகரணமாகையாலே வாத்ஸல்யாதிகுணவிஶிஷ்டன் உபாயமென்றும், உபேயப்ரகரணமான உத்தரவாக்யத்தில் ஸர்வஶேஷியான வஸ்துவே உபேயமென்றும் விபஜித்து அர்த்தநிர்ணயம் பண்ணினாப் போலே, விஶேஷணப்ரதிபாதக ஶப்தங்கள் உபயத்ர ஸமானமாயிருந்ததேயாகிலும், உபாயப்ரகரணத்தில் பகவதுபாயத்வநைரபேக்ஷ்யஸித்திக்காக பிராட்டிக்கு உபாயத்வாநங்கீகாரேண புருஷகாரத்வம் கொள்ளுகை உசிதமாகையாலும், உபேயப்ரகரணத்தில் மிதுநவிஷயகைங்கர்யமே ஸ்வரூபாநுரூபமாகையாலும், பிராட்டிக்கு விஶேஷணத்வம் கொள்ளுகை உசிதமாகையாலும், ஆகிற இவ்வர்த்தஸ்வாரஸ்யத்தைப் பற்ற இப்படி விபஜிக்கத் தட்டில்லை.

உபலக்ஷணமாவது:—உபலக்ஷ்யாத் பஹிர்ப்பூதமாப், உபலக்ஷ்ய ப்ரதீத்யுபாயமான தர்மவிஶேஷம். "ஶாகாயாம் சந்த்ர:" இத்யாதி. பிதாவுக்கு ஹிதபரத்வம் அஸாதாரணமாய், ப்ரியபரத்வம் இருவருக்கும் அவிஶிஷ்டமாயிருக்கை லோகஸித்தமிறே. மாதாவுக்கு ப்ரஜா ஹிதபரத்வம் பாரதந்த்ர்யபஞ்ஜகமிறே. கிஞ்ச, "சரணம்" என்று ஏகவசனப்ரயோகம் பண்ணினுல் உபலக்ஷணமாய், விஶேஷணத்துக்கும் உபாயாந்வயம் ஸம்பவித்துவிடுமென்று தத்வ்யாவ்ருத்யர்த்தமிறே த்விவசனப்ரயோகம்பண்ணுகிறது. த்விவசனம், மற்றொன்றையும் ஸஹியாதிறே. விஶேஷ்யப்ராதாந்யத: சொன்ன த்விவசனம் பத்னீவிஶேஷணத்துக்கும் அவிஶிஷ்டமென்னில்: அப்போதும் ப்ராதாந்யம் விஶேஷ்யத்துக்கேயாய், விஶேஷணத்துக்கு அப்ராதாந்யமாகையாலே, அப்ரதாநோபாயமான புருஷகாரபாவமே ஸித்தித்துவிடுமிறே. இருவரும் ப்ரத்யேகோபாயமென்னுமது "லக்ஷ்மீவிஶிஷ்டம் உபாயம்" என்கிறத்தோடு சேராது. விஶிஷ்டம் உபாயமென்று அங்கீகரித்து இவளுக்கும் பலப்ரதத்வம் சொல்லும்போது ஈச்வரனுக்குப் பலப்ரதானஹேதுவான ஜ்ஞாநஶக்த்யாதிகளின்றியிலேயொழியவேணும். ஜ்ஞானஶக்திகள் உண்டு என்னில்: அப்போது ஏததுபாயபாவநிரபேக்ஷமாக ஸ்வயமேவ பலப்ரதக்ஷமனிறே. பலப்ரதானஹேதுவான ஜ்ஞானஶக்த்யாதிகளை உண்டாக்குகிறுளென்னில்: குணங்கள் வந்தேறியாய், ஸ்வாபாவிகங்களின்றியிலேயொழியும். ஸ்வாதந்த்ர்யதிரோஹிதங்களான வாத்ஸல்யாதிகளை ப்ரகாஶிப்பிக்கிறுப்போலே திரோஹிதஜ்ஞானஶக்திகளை ப்ரகாஶிப்பிக்கிறுளென்னில்: அவற்றுக்கு ஸ்வாதந்த்ர்யம்போலே, இவற்றுக்கு, ஒரு திரோதாயககுணமில்லையே. உண்டென்னில், † "ஞானமஃதேகொண்டு எல்லாக் கருமங்களும் செய்" என்கிறபடியே ஜ்ஞானங்கொண்டு சோம்பாதே நிரந்தரஸ்ருஷ்டிபண்ணக் கூடாதிறே. யேந கேந ப்ரகாரேண உபாயாந்வயம் சொல்லில், 222. (ஶ்ரீதோ பவ) என்னவல்ல திவ்யஶக்தி உண்டாயிருக்க, ஸ்வபாரதந்த்ர்யஹானி வாராமல், 224. (அந்தராத்மா ச மே ஶக்த:) என்று ஸ்வரக்ஷணே ஸ்வப்ரவ்ருத்தியாகிற அஶக்தி இத்தலையில் இல்லையென்றும், 224. (தஸ்மிம்ச்ச பஹவோ குண:) என்று உபாயபூர்த்திக்கு அடியான குணபூர்த்தி அத்தலைக்கே உள்ள

† திருவாய் (3-10-8).

தென்றும் தர்ஶிப்பித்து ஸ்வப்ராப்திக்கும் 105. (த்த் தஸ்ய ஸத்ருஶம் பவேத்) என்று ஸ்வஸ்வரூபானுரூப பாரதந்த்ர்யானுஸந்தானமாகத் தந்நிரபேக்ஷோபாயத்வத்தைப் பார்த்திருக்கும்படியான இவள் பரிஶுத்தப்ரக்ருதிக்கு அது சேராதிறே.

நநு, ஶ்ரிய:பதியே உபாயமென்று அங்கீகரிக்கவேண்டுமாகை யாலே, நிரூப்யஸ்வரூபத்துக்குச் சொன்ன உபாயத்வம் நிரூபகஸ்வரூபத்துக்கும் 225. (யத்யபி ஸச்சித்த:) என்கிற ந்யாயத்தாலே அநிவர்த்யமாய்க்கொண்டு தன்னடையே வாராதோ? என்னில்; ஸ்வரூப நிரூபகத்வேந நிரூப்ய நிரூபகங்களுக்கு அவர்ஜனீயஸம்பந்தம் உண்டேயாகிலும், உபாயவரணதஶையில் ஸ்வரூப நிரூபகங்களான ஜ்ஞாநாநந்தங்கள் உபயோகமில்லாமையாலே நிரூபகமாத்ரமாய் நிற்கிறாப்போலே பகவத்ஸ்வரூபநிரூபகமான லக்ஷ்மீஸ்வரூபமும், காரணத்வதஶையிற் போலே உபாயதஶையில் தன்னால் கொள்வதொரு ப்ரயோஜனமில்லாமையாலே, தத்ஸ்வரூப நிரூபகத்வமாத்ரத்திலே அந்வயித்து, தத ஸாதாரணோபாயத்வத்தில் அந்வயியாமலிருக்கையாலே, நிரூபகமான ஏதத்ஸ்வரூபத்துக்கு உபாயத்வம் வாராதிறே. கிஞ்ச, உபாயவிஶேஷணமான குணவிக்ரஹங்களுக்கு ஸௌகர்யாபாதகத்வேநவும், கார்யாபாதகத்வேநவும், ஶுபாச்ரயத்வேநவும் கார்யபேதமுண்டாகிறாப்போலே, தத்விஶேஷணபூதையான பிராட்டிக்கும், உபாயதஶையில் உபாயத்வரஹிதமாகப் புருஷகாரத்வரூப கார்யபேதமுண்டாக்த தட்டில்லை. 226. (லக்ஷ்மீபர்த்துர் தாஸதாஸஸ்ய தாஸ:), † "திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்" என்கிறபடியே ஸ்வரூபதஶையில் ஶேஷத்வ ஸ்வரூபத்துக்கும், 227. (ஶ்ரியா ஸார்த்தம்) ‡ "திருமாலே நின்றே ஆட்செய்ய" என்கிறபடியே ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யதஶையில் கைங்கர்யத்துக்கும் மிதுனமே ப்ரதிஸம்பந்தியாகவேண்டினவோபாதி உபயானுரூபமான உபாயதஶையிலும் அவச்யாபேக்ஷிதமான உபாய ப்ரதிஸம்பந்தித்வத்தில், ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தஸஹாயாநபேக்ஷமான உபாயத்தினுடைய 131. (மாமேகம்) என்கிற நைரபேக்ஷ்ய பஞ்ஜகமான உபாயத்வத்தில் அந்வயமற்று, தத்விரோதமாகப் புருஷகாரத்வரூபப்ரதிஸம்பந்தித்வத்திலே இவளுக்கு அந்வயமாகக்கடவது.

† திருப்பல்லா-11. ‡ திருவாய்(8-3-8)

ந்து, ஸ்வாயம்புவே 228. (ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸா-ரார்ணவதாரிணீம் । க்ஷிப்ரப்ரஸாதிநீம் தேவீம் ஶரண்யாம் சிந்தயேதிதி॥) என்றும், வைஷ்ணவே, 229. (ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபல தாயிநீ) என்றும், ப்ராஹ்மே, 230. (ஸக்ருத் விபாதா ஸர்வார்த்தி ஸமுத்ரபரிஶோஷிணீ। பவபங்காபஹாரிணீ பரநிர்வாணதாயிநீ) என்றும், § இத்யாதிப்ரமாணங்கள் இவளுடைய உபாயபாவத்தைச் சொல்லிற்றேயாகிலும், அவை ஶரண்யனுடைய இச்சானுவிதாயித்வ ஸூசகங்களாகக்கடவது. இதுக்கு நியாமகமென்னென்னில்: 231. (லக்ஷ்மீம் புருஷகாரேண வ்ருத்தவந்த:) என்றும், 232. (லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லபா ப்ராப்தியோகிநீ। ஏதஸ்யாச்ச விஶேஷோऽயம் நிக-மாந்தேஷு ஶப்த்யதே॥) என்றும், 233. (லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா—நாந்யதா லக்ஷணம் பவேத்) என்றும், புருஷகாரத்வத்தையே லக்ஷணமாகச் சொல்லி, அந்யதா லக்ஷணம் இல்லையென்று உபாயத்வத்தை நிஷேதித்ததிறே. அந்வயத்திலும், வ்யதிரேகம் அர்த்ததார்ட்யத்துக்கு உறுப்பாகையாலே, இதுவே ப்ரபலப்ரமாண ப்ரஸித்தமாகையாலும், பகவதபிமதமாகையாலும், பிராட்டிக்கு அத்யந்தம் அபிமதமாகையாலும், ஸம்ப்ரதாயஸித்தமாகையாலும் ஏததனுகுணமாக அவற்றை யோஜிக்கத் தட்டில்லை. ததனுகுணமாக இவற்றை யோஜிக்குமிடத்தில், ப்ரபலப்ரமாணவிரோதமும், பகவதநபிமதத்வமும், லக்ஷ்ம்யநபிமதத்வமும், ஸம்ப்ரதாய விரோதமும் ஸம்பவிக்கும். ஆகையாலே, ஸகலப்ரமாணப்ரமாத்ரு பரிக்ருஹீதமான புருஷகார பாவமே ஸாராஸாரவிவேகசதுரர்க்குப் பரிக்ராஹ்யம் என்றதாயிற்று. 234. (தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாச்ச), 235. (யத்யதாசரதி ச்ரேஷ்ட:) † "மேலையார் செய்வனகள் வேண்டுவன" என்னக்கடவதிறே.

ஆக, இச்லோகத்தாலே பெரியபிராட்டியார் ஸ்வகருணாகடாக்ஷ லேஶத்தாலே ஸ்வாச்ரிதர்க்கு ஸகலபுருஷார்த்தங்களையும் ப்ரஸாதித்தருளுவர்; ஸகலபுருஷார்த்த விலக்ஷணமோக்ஷத்தை, தத்ஸாதாரணோபாயபூதனுய், ஸ்வவஶவர்த்தியாய், ஸ்வாபாங்கேங்கிதபராதீநனான ஈச்வரனைக்கொண்டு கொடுப்பித்தருளுவர்; ஆனபின்பு, புருஷார்த்தாந்தரங்களோடு விலக்ஷணபுருஷார்த்தத்தோடு விஶேஷமற ஸகல ச்ரேயஸ்ஸும் தத்ப்ரஸாதத்தாலல்லது ஸம்பவியாது என்னுமிடத்தை

§ இங்கு சில வாக்கியங்கள் நழுவியுள்ளன. † திருப்பாவை-26.

4. ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம் ஹரே:
மூர்த்தம் ப்ரஹ்ம ததோऽபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்।
யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்-
யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவைர் காடோபகூடாநி தே॥

4. பதவுரை:—ஶாந்த—ஷடூர்மிகளற்றதாய், ஆநந்த—ஆநந்தமயமாய், மஹாவிபூதி—பெரிய விபூதிகளை உடைத்தாய், பரமம்—தனக்கு மேலானதற்றதாய், ப்ரஹ்ம—பெரிதாயிருப்பதாலும், (பிறரைப்) பெரிதாகச் செய்வதாலும் ப்ரஹ்மஶப்தத்தாலே சொல்லப்படுவதாயிருக்கும், ஹரே: யத் ரூபம்—ஹரியினுடைய யாதொரு ஸ்வரூபமுண்டோ, தத: அபி—அதைக்காட்டிலும், தத் ப்ரியதரம்—அந்த பகவானுக்கு மிகவும் பிரியமாயிருப்பதும், மூர்த்தம்—கண்ணால் காணக்கூடியதும், ப்ரஹ்ம—ப்ரஹ்மஶப்தத்தால் சொல்லப்படுவதும், அத்யத்புதம்—மிகவும் அத்புதமானதுமான, ரூபம் யத்—யாதொரு ரூபம் உண்டோ, யதாஸுகம் விஹரத:—இஷ்டப்படி விளையாடும் எம்பெருமானுக்கு, அந்யாநி ரூபாணி யாநி—மற்றும் யாவை சில ரூபங்களுண்டோ, தாநி ஸர்வாணி—அந்த ரூபங்களெல்லாம், தே—உனக்கு, ஸ்வை: அநுரூப ரூபவிபவை:—அஸாதாரணங்களாய் தகுந்தவையாயிருக்கும் திவ்ய ரூபங்களால், காடோபகூடாநி ஆஹு:—நன்றாக ஆலிங்கனம் செய்யப்பட்டவையென்று (ப்ரமாணங்கள்) சொல்லுகின்றன.

ஸ்த்திரீகரித்தருளினாராய்த்து. ஸ்ரீஸாத்வதத்திலே, அவனுக்கு மோக்ஷப்ரதத்வமும், தேவிக்கு ஐச்வர்யப்ரதத்வமும் விபஜித்து ஸ்வயமேவ ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே.—(3)

4. அவதாரிகை:(ஶாந்தேத்யாதி) 236. (த்ரயாணாம் பரதாதீநாம் ப்ராத்ரூணாம் தேவதா ச யா। ராமஸ்ய ச மந: காந்தா ப்ராணேப்யோऽபி கரீயஸீ॥) என்கிற ப்ரமாணாநுஸாரேண "காந்தஸ்தே புருஷோத்தம:" என்று கர்த்தர்யர்த்தத்தையும், "பணிபதி:" என்று தொடங்கிக் கர்மண்யர்த்தத்தையும் அநுஸந்தித்து, ஆக, "இப்படி உபயவிபூதியிலுள்ளார்க்கும் ஆச்ரயணீயையாய், உபயவிபூதிநாதனை ஆச்ரயித்துக்கொண்டு இருக்கையாலே "ஸ்ரீ:" என்ற அஸாதாரணமான திருநாமத்தை உடையையாய், அவனுக்கும் பூஜ்யையாம்படியான குணபூர்த்தியை உடைய உன்னை ஜ்ஞானஶக்த்யாதிகுணஹீனனான நான்

ஸ்தோத்ரம் பண்ணுவது எங்ஙனே?" என்று பீதபீதராய், ஸ்தோத்ராந்நிவ்ருத்தரானார் ப்ரதமஶ்லோகத்திலே.

இப்படி நிவ்ருத்தரானபடியைக் கண்டு இவர் பண்ணுகிற ஸ்தோத்ரத்தை ஶ்ரவித்து, ஶ்ரவிப்பித்தாலன்றோ "ஶ்ருணோதீதி—ஸ்ரீ:" "ச்ராவயதீதி—ஸ்ரீ:" என்கிற நிருக்த்யனுரூபாஸாதாரணநாமம் நமக்கு நிலைநிற்பது. ஆனபின்பு இவர் யதாஸ்தோத்ரம் பண்ணவல்லராம்படி கடாக்ஷிப்போம் என்று கணிசித்து, இவர் பக்கலிலே கருணாகடாக்ஷத்தைப் பண்ண, "இதொரு தயாவிஶேஷமிருந்தபடியென்?" என்று தத்ஸௌலப்யாநுஸந்தானத்தாலே ஸமாஹிதராய், ஸம்பந்தஜ்ஞானபூர்வகமாக ஶரணம் புகுந்து, கீழ், "ஸ்ரீயதே" "ஶ்ரயதே" என்று சொன்ன வ்யுத்பத்தித்வயார்த்தமும் 163. (அஸ்யேஶாநா) இத்யாதி வேதாந்தஸித்தமென்னுமிடத்தை "லோகைகேச்வரி லோகநாததயிதே" என்று ஸூசிப்பியாநின்றுகொண்டு ஸமாஹிதராய், பயமும் சமித்து ஸ்தோத்ரத்திலே ப்ரவ்ருத்தரானார் த்விதீயஶ்லோகத்திலே.

இப்படி ஆக்ஷேபஸமாதானவ்யாஜேந ப்ரவ்ருத்தமான ஶ்லோகத்வயத்தாலும், தத்பரத்வஸௌலப்யங்களை அநுஸந்தித்து, திருவடிகளை ஆச்ரயித்தார்க்குத் தத்கடாக்ஷலேஶத்தாலே ஸகல புருஷார்த்தங்களும் ஸம்பவிக்கும்; அதில்லாதார்க்கு ஒரு ச்ரேயஸ்ஸும் ஸித்தியாது என்று கொண்டு பிராட்டியினுடைய ஸர்வஸமாச்ரயணீயத்வக்யாபநார்த்தமாக ஸகல புருஷார்த்தப்ரதத்வத்தை அருளிச்செய்தார் த்ருதீயச்லோகத்தாலே. ஆக, இப்படி ச்லோகத்ரயத்தாலும் ப்ரக்ருதியான ஸ்ரீஶப்தார்த்தத்தை அருளிச்செய்து, அனந்தரம் ப்ரத்யயமான மதுப்பின் அர்த்தத்தை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, பகவத்ஸ்வரூபரூபகுணாதிகளில் தத்ஸஹதர்மசாரிணியான இவளுடைய ஸ்வரூபாதிகளுக்கு உண்டான அயோகவ்யவச்சேதத்தை அநுஸந்தியாநின்றுகொண்டு, 221. (லக்ஷ்ம்யா ஸஹ....ரக்ஷக:) 227. (ஶ்ரியா ஸார்த்தம்) என்கிறபடியேஉபய விபூதிக்கும் நித்யரக்ஷகமாய், நித்யப்ராப்யமான நித்யயோகத்தை அனுபவித்து நிரஸ்தஸமஸ்தப்ரதிபந்தகராய், ப்ராப்தபரிபூர்ணமநோரதராய், † "திருமாலால் எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர்" என்கிறபடியே ஶ்ரிய:பதியினுடைய

† திருப்பாவை-30.

நிர்ஹேதுகக்ருபையாலே நிரதிஶயானந்தத்தை ப்ராபித்து ஸ்தோத்ரத்தைத் தலைக்கட்டுகிறார் துரீயச்லோகத்தாலே.

(ஶாந்தாநந்த மஹாவிபூதி பரமம் யத் ப்ரஹ்ம ரூபம்) என்கிற இவ்வளவாலே திவ்யாத்மஸ்வரூபத்தை அனுபவிக்கிறார். 237. (ஶாந்தாநந்தம் சிதாநந்தம் யத் ப்ரஹ்ம பரமம் த்ருவம்। மஹாவிபூதிஸம்ஸ்தாநம் ஸர்வதஸ் ஸமதாம் கதம்॥) என்கிற திவ்யாத்மஸ்வரூபநிர்ணயகப்ரமாணத்தை உட்கொண்டாய்த்து இவர் இப்படி அருளிச்செய்தது. (ஶாந்தேதி) ஶாந்தியாவது:—238. (அஶநாயாऽபிபாஸே ச ஶோகமோஹௌ ஜராம்ருதீ। ஷடூர்மிபிர்விஶுத்தா) என்று ச்ருதிஸித்த ஷடூர்மிரஹிதமாய், 239. (அபக்ஷயவிநாஶாப்யாம் பரிணமர்த்திஜந்மபி:। வர்ஜிதச் ஶக்யதே வக்தும் யஸ்ஸதாऽஸ்தீதி கேவலம்॥) என்று புராணரத்நோக்தப்ரகாரத்தாலே ஷட்பாவ விகாரரஹிதமுமாயிருக்கை. இத்தால் அகிலஹேயப்ரத்யநீகமாயிருக்கும் திவ்யாத்மஸ்வரூபம் என்றதாய்த்து. ஸ்வயம் ஹேயரஹிதமாயிருக்கையன்றிக்கே, ஹேயப்ரதிபடமுமாய், ஸ்வாச்ரிதஹேயநிவர்த்தகமுமாயிறே இருப்பது. ஹேயப்ரத்யநீகத்வம் சொன்ன இப்பதத்தாலே கல்யாணைகதாநத்வமும் அர்த்தத: ஸித்தமாகிறது. "ஹேயப்ரத்யநீகத்வம் புக்கவிடத்தே கல்யாணைகதானத்வமும் புகும்" என்றிறே அருளிச்செய்தது. ‡ "அருகலிலாய பெருஞ்சீர்" என்கிறபடியே, 240. (அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந) என்று உபயலிங்கவிஶிஷ்டவஸ்துவை அனுபவித்தருளினாரிறே பாஷ்யகாரர். "ஈச்வரன் அகிலஹேயப்ரத்யநீகாऽநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய்" என்று தத்திவ்யஸூக்தியைப் பின்சென்று அனுபவித்தருளினாரிறே பிள்ளைலோகாசார்யரும். 237. (ஶாந்தாநந்தம் சிதாநந்தம்) என்று முக்தகண்டமாகச் சொன்ன லக்ஷணத்வயத்தில் இங்கு ஒன்றை ஒன்று லக்ஷிக்கிறது. இத்தால் 241. (அபஹதபாப்மா விஜர:) என்று தொடங்கி (ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:) என்கிற ப்ரமாணார்த்தம் சொல்லிற்று.

* அநந்தபதத்தாலே த்ரிவிதபரிச்சேதரஹிதமாயிருக்கும் என்றபடி. அதவது:—விபுத்வாத் தேஶத: பரிச்சேதரஹிதமுமாய், நித்யத்வாத் காலத: பரிச்சேதரஹிதமுமாய், ஸமஸ்தவஸ்துப்ரகாரித்வாத் ஸ்வஸத்ருஶவஸ்து பரிச்சேதரஹிதமுமாயிருக்கும் என்றபடி. அதவா, "ஶாந்தாநந்த(ம்)" என்று பாடமாய், 242. (ஜ்ஞாநாநந்தமயம்

‡ திருவாய் (1-9-3)

யஸ்ய ஸ்வரூபம் பரமாத்மந:) என்கிறபடியே ஆநந்தமயனாயிருக்கும் என்னவுமாய். § "உணர் முழுநலம்" என்னக்கடவதிறே. முழு உணர்வும், முழுநலமுமாய், 242*. (யதா ஸைந்தவகந:) என்னுமாப் போலே விஜ்ஞானகனமுமாய், ப்ரஜ்ஞானகனமுமாயிறே ஸ்வரூபமிருப்பது. இத்தால் ஸ்வானுபவதசையில் ப்ரகாசமுமாய் ஸுகரூபமுமாய் இருக்கும் என்கை. "சாந்தாநந்த" என்று ஸ்வரூபநிரூபகங்களான ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளைச் சொன்ன இத்தால், நிரூபித ஸ்வரூபவிசேஷணங்களான ஜ்ஞானசக்த்யாத்யஸங்க்யேய கல்யாண குணகணங்களும் உக்தப்ராயங்கள். ஸ்வரூபானுபந்திகளாயிறே இவை இருப்பன. 21· (ஸஹஸ்ராக்ஷ:), 15. (ஸர்வஜ்ஞ:), 21. (ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:), 152. (பராऽஸ்ய சக்தி:) இத்யாதிப்ரமாணஸித்தமிறே.

(மஹாவிபூதி) மஹத்துக்களாய், சுத்தாऽசுத்தங்களான விபூதித்வயத்தை உடைத்தாய், † "அகல்விசும்பும் நிலனும் இருளார் வினை கெட", ‡ "அங்காதும் சோராமே ஆள்கின்ற", 243. (பாதோऽஸ்ய விச்வா பூதாநி। த்ரிபாதஸ்யாऽம்ருதம் திவி॥) என்கிறபடியே உபய விபூதியோகமும் சொல்லுகிறது. (பரமம்) "பரோ மா யஸ்மாத் ஸ:- பரம:" என்று நிருபமமாகையாலே ஸர்வோத்க்ருஷ்டமாய். (யத்) 244. (ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம), 245. (ஆநந்தோ ப்ரஹ்ம), 246. (ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்), 247. (நிஷ்களங்கோ நிரஞ்ஜந:) 157. (ந தத் ஸமச்சாऽப்யதிகச்ச த்ருச்யதே), / "ஒத்தார் மிக்காரை இலையாய", 248. (ஸம்ஜ்ஞாயதே இத்யாதி) || "மனனுணர் வளவிலன்" இத்யாதிப்ரமாணஸித்தியை * யச்சப்தம் ஸூசிப்பிக்கிறது. (ப்ரஹ்ம) 249. (ப்ருஹத்த்வாத் ப்ரும்ஹணத்வாச்ச ப்ரஹ்ம இத்யபிதீயதே) என்று நிரதிசயப்ருஹத்த்வப்ரும்ஹணத்வம் உக்தமாய், இத்தால் ஸ்வரூபவிபுத்வம் சொல்லுகிறது. (ரூபம்) ஸ்வரூபம். ஆக, அகிலஹேயப்ரத்யனீககல்யாணைகதானமாய், த்ரிவிதபரிச்சேத ரஹிதமாய், விபூதித்வயநிர்வாஹகமுமாய், நிருபமமுமாய், விபுவாய், ஸகலோபனிஷத் ப்ரஸித்தமான திவ்யாத்மஸ்வரூபத்தை அனுபவித்தாராய்த்து. (சாந்த) என்கையாலே 250. (அவிசாராய சுத்தாய)

---

† திருவிரு-33. ‡ நாச்-திரு (11-3). / திருவாய் (2-3-2).
|| திருவாய் (1-1-2).

என்கிற பதத்வயார்த்தமும், * அநந்தபதத்தாலே 250. (நித்யாய) என்கிற பதார்த்தமும், "பரம் ரூபம்" என்கையாலே 250. (பரமாத்மநே) என்கிற பதார்த்தமும், மேலே "ரூபம்" என்கையாலே 250. ஸதைக ரூபரூபாய) என்கிற பதார்த்தமும், "ஹரேர் ப்ரஹ்ம" என்கையாலே 250. (விஷ்ணவே ஸர்வஜிஷ்ணவே) என்கிற பதார்த்தமும் ஸ்பஷ்டமாயிற்று.

(ஹரே:) 251. (ஹரிர் ஹரதி பாபாநி) என்கிறபடியே ஸ்வாச்ரிதருடைய ஸ்வப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபநிவர்த்தகனானவனுடைய. அதவா, (ஹரே:) 252. (தேவதேவோ ஹரி: பிதா) என்கிறபடியே ஸகலசேதனர்க்கும் ஸாக்ஷாத்பிதாவானவனுடைய என்றாகவுமாம். 253. (பித்ருமாத்ருஸுத) இத்யாதி. 253 *. (நாமஸஹஸ்ரவாந்) என்கிறபடியே * ஆயிரம் பேருடைய பிரானாயிருக்கவும், இவ்விடத்தில் "ஹரி:" என்ற திருநாமத்தை அருளிச்செய்ததுக்குக் கருத்தென்னென்னில்: பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகப் பற்றின ப்ரீத்யதிசயத்தாலே :: "அவாவறச் சூழரியை" என்றாப்போலே, ஸ்வானுபவஸகலப்ரதிபந்தகநிவ்ருத்திபூர்வகமாக ஸ்வாபேக்ஷிதமான இருவருமான சேர்த்தியை யதாமநோரதம் அபிநிவேசம் தீர அனுபவிப்பித்தபடியை ஸ்பஷ்டமாக்குகைக்காக "ஹரி:" என்ற திருநாமத்தை அருளிச்செய்கிறார். "ஸர்வாபேக்ஷிதப்ரதனை ஸர்வேச்வரனை" என்றிறே அருளிச்செய்தது. "ஆர்த்திஹரத்வவிசிஷ்டன்" என்றிறே நிகமத்திலும் அருளிச்செய்தது.

254. (ப்ரஹ்மாணமிந்த்ரம் ருத்ரஞ்ச யமம் வருணமேவ ச । ப்ரஸஹ்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத்தரிரிதீர்யதே ॥) என்கிறபடியே † "நெற்றிமேல் கண்ணானும் நிறைமொழி வாய் நான்முகனும் நீண்ட நால் வாய் ஒற்றைக்கை வெண்பகட்டில் ஒருவனையும் உள்ளிட்ட அமரரோடும் கடலரையன் விழுங்காமல் தான்விழுங்கி" 192. (தம: பரே தேவ ஏகீபவதி) என்கிறபடியே தன் ஸங்கல்பத்தில் ஏகீபவிக்கும்படியான ஸர்வஸம்ஹர்த்ருத்வத்தையும் 255. (அசேஷாணாம் ஹி பூதானாம் ப்ரபவோ ஹரி:), 256. (யஸ்ய நாபிஸமுத்பூதபங்கஜாதபவஜ்ஜகத்) என்கிறபடியே அப்யயபூர்வகமான ஜகத்காரணத்வத்தையும் ப்ரதிபாதிக்கிற

:: திருவாய் (10-10-11). † பெரியதிரு (11-6-3).

இத்திருநாமத்தை அருளிச்செய்கையாலே நாராயணஶப்தார்த்தத்தை விவக்ஷித்து அருளிச்செய்தார் என்னுமிடம் தோற்றுகிறது. 257. (நராஜ்ஜாதாநி தத்த்வாநி), 193. (ஆபோ நாரா இதி ப்ரோக்தா:) என்கிற படியே ஜகத்காரணத்வவாசகமாயிறே நாராயணஶப்தம்தான் இருப்பது. அந்த ஜகத்காரணத்வந்தான் ‡ "ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமில்லா அன்று நான்முகன் தன்னொடு தேவருலகொடு உயிர் படைத்தான்" என்கிறபடியே அப்யயபூர்வகமாயிருக்குமிறே; அந்த அப்யயபூர்வகமான ஜகத்காரணத்வத்தை இத்திருநாமம் ப்ரதிபாதிக்கையாலே நாராயணபதபர்யாயமென்னுமிடம் ஸித்தமிறே. ஆகையாலேயிறே 258. (விச்வம் நாராயணம் ஹரிம்) என்றும், § "அற்புதன் நாராயணனரி" என்றும் வேதாந்தத்வயத்திலும் ஸஹபடித்தது. பட்டரும், 259. (அங்க்ரீ ஹரேராச்ரயே), 260. தஸ்யைவேதி ஹரேர் விவிச்ய கதிதம்) என்று வாக்யத்வயத்திலும் நாராயணபதத்வயபர்யாயமாக ஹரிஶப்தத்தை அருளிச்செய்தாரிறே.

அனந்தரம் கீழ் அனுபூதமாய் அமூர்த்தமுமான ஸ்வரூபத்துக்கு ஆச்ரயமாய், மூர்த்தமான திவ்யமங்களவிக்ரஹத்தை அனுபவிக்கிறார் (மூர்த்தம் ப்ரஹ்ம) என்று தொடங்கி, (யதத்யத்புதம்) என்னுமளவாக. (மூர்த்தம்) ஸ்பர்ஶரூபாதிகுணங்களோடே கூடி பரமபதபர்யங்காதிதேஶபரிச்சிந்நவிக்ரஹமாயிருக்கை. (மூர்த்தம்) 261. (ஶக்தய: பஞ்ச விக்யாதா: பஞ்சோபநிஷதாக்யயா) என்கிறபடியே, பஞ்சோபனிஷத்துக்களாவன:—262. (பரமேஷ்டீ புமாந் விச்வோ நிவ்ருத்திஸ் ஸர்வ ஏவ ஹி) என்கிறபடியே, பரமேஷ்டி புருஷ விச்வ நிவ்ருத்தி ஸர்வஸஞ்ஜ்ஞிகங்களான அப்ராக்ருதபூதபஞ்சகங்கள். ஏவம்வித பஞ்சோபனிஷத்துக்கள்தான் ஶப்தாதி பஞ்சகுணவிஶிஷ்டங்களாயிருக்கையாலே 262. (பரமேஷ்டீ ஸ்ம்ருதச்ஶப்தே ஸ்பர்ஶே து புருஷ: ஸ்ம்ருத:। விச்வாத்மா தேஜஸி ப்ரோக்தோ நிவ்ருத்யாத்மா ரஸே ஸ்ம்ருத: ஸர்வாத்மா கதிதோ கந்தே விஷயே புருஷஸ் ஸ்ம்ருத:॥) என்கிறபடியே பரமேஷ்ட்யாதிஸஞ்ஜ்ஞிகங்களான பூதபஞ்சகமும், ஶப்தஸ்பர்ஶரூபரஸகந்தஸம்ஜ்ஞிகபஞ்சகுணத்வேந ப்ரமாண ப்ரஸித்தங்களாயிருக்குமே. ஆகையாலே ஏதாத்ருஶபஞ்சகுணகாऽऽகாஶாத்யப்ராக்ருத பூதபஞ்சகமயமாய் இருக்கையாலே "மூர்த்தம்" என்கிறார்.

‡ திருவாய் (4-10-1). § திருவாய் (8-6-10).

இச்சேதனன் கர்மானுகுணமாகப் பரிக்ரஹிக்கும் தேஹமாகி லிறே || "மண்ணாய் நீரெரி கால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம்" :: "மஞ்சு சேர் வானெரி நீர் நிலம் காலிவை மயங்கி நின்ற அஞ்சு சேராக்கை" என்கிறபடியே ப்ராக்ருதபஞ்சபூதமயமாயிருப்பது. இங்ஙனன்றிக்கே 263. (பஞ்சைதாச் ஶக்தய: ப்ரோக்தா: பரஸ்ய பரமாத்மந:।அஶேஷஜகதாதாரா: பதே திவ்யே வ்யவஸ்திதா: ॥) என்று பகவச்சக்தித்வேந ஸமஸ்தகார்ய பதார்த்தாதாரங்களாய்க்கொண்டு பரமபதத்திலே ஏதத்விக்ரஹமாயும் ததீயவிக்ரஹங்களாயும், விமான மண்டப கோபுர ப்ராஸாதாதிரூபேணவும் பரிணமிக்கிற அப்ராக்ருத பூதபஞ்சகமயமாயிறே இருப்பது. ஆகையாலேயிறே 264. (ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திர் மாம்ஸமேதோऽஸ்திஸம்பவா) 265. (ந பூதஸங்கஸம்ஸ்தாநோ தேஹோऽஸ்ய பரமாத்மந:) 266. (பஞ்சஶக்திமயோ தேவ:) என்று ப்ராக்ருதத்வநிஷேதபூர்வகமாக அப்ராக்ருதத்வத்தை ப்ரதிபாதிக்கிறது. இப்படி அப்ராக்ருதமாகையாலே ஶுத்தஸத்வமயமுமாயிறே விக்ரஹம் இருப்பது. ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதே ஶுத்தியோகத்தாலே கேவலஸத்வமாய் 267. (ஸத்த்வம் விஷ்ணுப்ரகாஶகம்) 268. (தத்ர ஸத்த்வம் நிர்மலத்வாத் ப்ரகாஶகமநாமயம்) என்று அதிப்ரகாஶக வஸ்துவாகையாலே ஜ்ஞாநாநந்தமயசேதந தத்குண திரோதாயக த்ரிகுணாத்மக ப்ராக்ருதஶரீரம்போலன்றிக்கே, ஸ்வவைலக்ஷண்யத்தாலே ஸ்வாந்தர்க்கதஸாமீகரப்ரகாஶக மாணிக்யமஞ்ஜூஷை போலே ஸ்வாந்த:ஸ்தித திவ்யாத்மஸ்வரூப தத்குணகண ஸம்யக்ப்ரகாஶநசாதுர்யஸஹிதமுமாயிருக்கும்.

இப்படி அப்ராக்ருதமாய், ஶுத்தஸத்வாத்மகமாயிருந்ததேயாகிலும் 269. (ஸவ்யம் பாதம் ப்ரஸார்ய ஶ்ரிததுரிதஹரம்) இத்யாதிப்படியே சரணகமல கரகமல நயநாரவிந்த வக்த்ராரவிந்த ப்ரமுக திவ்யாவயவஸங்காதாத்மகமாயிருக்கையாலே 270. (யத்ர தூமஸ் தத்ராக்நி:) இதிவத், அநித்யத்வவ்யாப்த ஸாவயவத்வ ஹேதுவாலே அநித்யத்வவ்யாப்ய ஸாவயவத்வ ப்ரயுக்த ப்ராக்ருதஶரீரவத் அநித்யத்வம் ப்ரஸங்கிக்குமே என்னில்: ந ப்ரஸங்க:; ஸர்வத்ர அநித்யத்வே ஸாவயவத்வம் ஹேதுவாகமாட்டாது. பின்னையேதென்னில்;

|| பெரியதிரு (1-9-6). :: பெரியதிரு (9-7-8).

அவயவாரப்தத்வமே அநித்யத்வே ஹேதுவாகக்கடவது. இங்ஙனன்றாகில், ஹஸ்தபாதாத்யவயவஸம்யுக்தனான சேதநனுக்கும் அநித்யத்வம் ப்ரஸங்கிக்கும். ஆகையால் திவ்யவிக்ரஹத்துக்கு அவயவாரப்தத்வே ப்ரமாணமில்லாமையாலும், 271 (ஸதா பஶ்யந்தி ஸூரய:), 272. (பஶ்யந்தி ச ஸதா தேவம் நேத்ரைர் ஜ்ஞாநேந) இத்யாத்யுபப்ரும்ஹ்யோபப்ரும்ஹணங்களாலே நித்யத்வேந ப்ரதீதங்களாகையாலும், விக்ரஹநித்யத்வம் ஸித்தமிறே.

இங்ஙனேயாகிலும் இதுதான் அநந்தாவதாரகந்தமாகையாலே இந்த விக்ரஹத்தினின்றும் ஸாதுபரித்ராணார்த்தமாக, 273. (பஹுதா விஜாயதே), 274. (பஹூநி), † "பிறப்பில் பல் பிறவிப் பெருமான்" என்னும்படி * யுகே யுகே ஸம்பவிக்கிற பஹுதிவ்யஜன்மங்கள் தோறும் அஸங்க்யாதங்களான * அபிமதோருதேஹங்கள் உண்டாகையாலே உபசயாத்மகப்ராக்ருததேஹம்போலே ஸததவிகாராஸ்பதமாயிருக்குமோ? என்னில்: 275. (யஸ்ய திவ்யம் ஹி தத் ரூபம் ஹீயதே வர்த்ததே ந ச), ‡ "சுருக்குவாரையின்றியே சுருங்கினாய் சுருங்கியும், பெருக்குவாரையின்றியே பெருக்கமெய்து பெற்றியோய்" என்கிறபடியே கர்மானுகுணவிகாரரஹிதமாகவும் 276. (ஸம்பவாம்யாத்மமாயயா) § "தேவரிரக்கவேண்டி வந்து பிறந்ததும்" 277. (தேவைரர்த்திதோ ஜஜ்ஞே) என்று * இச்சாக்ருஹீதமாகவும் சொல்லுகையாலே ஏகரூபமாயிருக்கும்; கர்மக்ருதவிகாரம் தோஷாயவும், இச்சாக்ருஹீதவிகாரம் குணாயவுமாகையாலே ஏகரூபமாயிருக்கத் தட்டில்லை. அநேகவிக்ரஹம் பரிக்ரஹிக்கச்செய்தேயும் 250. (ஸதைகரூபரூபாய) என்றதிறே.

278. (கிமாத்மிகா பகவதோ வ்யக்தி:) என்று ப்ரஶ்னம் பண்ண, 278. (யதாத்மகோ பகவாந்) என்று உத்தரம் உக்தமானவனந்தரம், 278. (கிமாத்மகோ பகவாந்) என்று ப்ரச்னம் பண்ண, 278. (ஜ்ஞாநாத்மகோ பகவாந்) என்று அஜடத்வாபிப்ராயேண ஜ்ஞாநாத்மகத்வம் உத்தரமாகச் சொல்லுகையாலே, ஜ்ஞாநாத்மகமான பகவத்ஸ்வரூபம் ஸ்வரூபானுரூபமுமாய், 279. (வித்யுல்லேகேவ பாஸ்வரா), || "நிலவும்

---

† திருவாய் (2-9-5). ‡ திருச்ச-109.
§ திருவாய் (6-4-5). || திருவாய் (6-10-1).

சுடர் சூழொளிமூர்த்தி" :: "ஒண் சுடர்க்கற்றை" 280. (தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்) இத்யாதிப்ரமாணப்ரகாரேண நிரவதிகதேஜோரூபமுமாயிருக்கும். பகவத்விக்ரஹமும், நித்யமுக்தர் விக்ரஹங்களும் பஞ்சோபநிஷண்மயமாகையாலே, உக்தவிஶேஷணவிஶிஷ்டத்வம் அவிஶிஷ்டமாய், ஏகஜாதீயத்ரவ்யமயமாயிருந்ததேயாகிலும், ஏகஜாதீயத்ரவ்யாத்மக மணித்யுமணிமஹோமத்யே கத்யோதகாந்திவத், ஸாவதிகதேஜோரூப ததீயவிக்ரஹத்தை கத்யோதகல்பம் என்னலாம்படி நிரவதிகதேஜோரூபமாயிருக்கை—ஏதத்விஷயம். இனி அவ்வளவன்றிக்கே நிரவதிகஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யலாவண்ய யௌவநாத்யநந்தகுணகண ஸமவேதமாய், 281. (ஸ்புரத்கிரீட) 282. (ஸ்வோசித விசித்ர) இத்யாத்யுக்தப்ரக்ரியயா * ஸ்புரத்கிரீடமகுடாத்யஸங்க்யேய திவ்யபூஷணபூஷிதமாய், ஆபரணகோடியிலும் ஆயுத கோடியிலும் அந்விதங்களான ஶங்க சக்ர கதாஸிஶார்ங்காத்யஸங்க்யேய திவ்யாயுதஶோபிதமாய், 283. (ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோऽஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்) என்கிறபடியே ஸகலதாபஹரமாய், // "இன்பம்....சிற்றின்பம்....ஒழிந்தேன்" என்னலாம்படி ஸமஸ்த போகவைராக்யஜனகமாய், யோகித்யேயமாய், ஶுபாச்ரயமுமாயிருக்கிற விக்ரஹவைலக்ஷண்யத்தை அநுஸந்தித்து "மூர்த்தம் ப்ரஹ்ம" என்கிறார்.

இதில் ஸௌந்தர்யமாவது:—ஸர்வதா அநுபவியாநின்றாலும் அப்பொழுதைக்கப்பொழுது ஏகைகாவயவமே அபூர்வவத் விஸ்மயகராநேக போகபரம்பராஜனகாத்யந்தஶக்தியாலே * ஸதா பஶ்யந்தி பண்ணுகிற ஸூரிகளை நிரதிஶயகாந்திஸாகர ஸ்வதரங்கதாடன தரளசித்தவ்ருத்திகராம்படி தத்த்ருஷ்டிநிமஜ்ஜநக்ஷமமான திவ்யாவயவ ஸௌஷ்டவம். "ஸௌந்தர்யஸாகரத்திலே ஆழங்கால் பட்டுக் கரையேற மாட்டாதே, † "அரும்பினை அலரை" என்னலாம்படியான 284. (யௌவநோந்முகீபூதஸுகுமாரதநு:)" என்றதிறே.

ஸௌகந்த்யமாவது:— ‡ "தெருவெல்லாம் காவிகமழ்" என்கிற படியே த்ரிபாத்விபூதியடைய § "வாசம் செய்" என்னுமாப்போலே

:: திருவாய் (1-7-4). // திருவாய் (4-9-10). † பெரியதிரு (7-10-1). ‡ திருவாய் (9-6-1). § திருவாய் (10-10-2).

ஸ்வதிவ்யகந்தத்தாலே வாஸிதமாப்படி ஸர்வதோதிக்கமாகப் புறப்பட்டு ப்ரவஹிக்கிற நாநாவிததிவ்யகந்தம். 285. (ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:) என்னக்கடவதிறே.

ஸௌகுமார்யமாவது:—286. (புஷ்பஹாஸ இதி நாம துஹாநம் ஸௌகுமார்யமதி வாங்மநஸம் ந:) என்கிறபடியே பேசப்பிசகும்படியாய், திவ்யமஹிஷிகள் * படிக்கோல வாள் நெடுங்கண்களாலே அடுத்தடுத்துப் பார்க்கிற பார்வையிலும் தாந்திஶீலமாய், || "மலர்மகள் பிடிக்கும் மெல்லடி" என்கிறபடியே, கூசித்தொடவேண்டும்படியான புஷ்பஹாஸாக்யமாயிருக்கிற அத்யந்தமார்த்தவம்.

லாவண்யமாவது:—287. (ஏகைகஸ்மிந் பரமவயவேऽநந்தஸௌந்தர்யமக்நம் ஸர்வம் த்ரக்ஷ்யே கதமிதி முதா மாமதா மந்தசக்ஷு:। த்வாம் ஸௌப்ராத்ரவ்யதிகரகரம் ரங்கராஜாங்ககாநாம் தல்லாவண்யம் பரிணமயிதா விச்வபாரீணவ்ருத்தி ||) என்கிறபடியே, ஓரோ அவயவங்களின் மேலே அநந்தஸௌந்தர்யத்திலே முழுகினதாய்க்கொண்டு ஸௌந்தர்யஸாகரத்திலே ஆழங்காற்பட்டுக் கரையேறமாட்டாதே தடுமாறுகிற நித்யமுக்தர் திருக்கண்களை † "முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?" என்கிறபடியே திவ்யாவயவங்களுக்கு அந்யோந்யமுண்டான ஸௌப்ராத்ரத்தாலே தத்வ்யதிகரத்தைப் பண்ணுவித்துக் கரையேற்றவற்றாய், அத்தாலே லாவண்யமாகிற நின்றுகொண்டு, ஸர்வபாரீணவ்ருத்தியாய், ஸர்வாவயவங்களையும் கரைகண்டு அனுபவித்துக் கரையேற்றவற்றாய், அத்தாலே லாவண்யமாகிற மரக்கலமென்று சொல்லலாம்படியாய், ஸௌந்தர்யஸாகரநிமக்னர்க்கு நாவம்போலே தாரகமாய், ஆபாதசூடம் அவிரதமாய், ப்ரவஹிக்கிற நிரவதிககாந்திஸாகர கல்லோலமாலைபோலே விளங்குகிற ஸமுதாயஸௌஷ்டவம்.

(ஹே மந்த!) அல்ப! லாவண்யமென்றொன்று உண்டென்று அறியாத (சக்ஷு:) கண்ணே! (ஏகமேகம் ஏகைகம்; தஸ்மிந்) ஓரொன்றான அவயவத்தில் (பரம்) அதன்மேலே; (அநந்தம் ஸௌந்தர்யம் தஸ்மிந் மக்நம் ஸத்) அபரிச்சின்னமான ஸௌந்தர்யத்தில் முழுகினதாய்க்கொண்டு; (ஸர்வம்) மற்றெல்லா அவயவஸௌந்தர்யத்தையும்; (கதம்) எங்ஙனே; (த்ரக்ஷ்யே) அனுபவிக்கப்போகிறேன்;

|| திருவாய் (9-2-10). † திருவாய் (3-1-1).

(இதி) என்று; (முதா) வ்யர்த்தமாக; (மா மதா) மா மந்த:; விசாரம் மா குரு; ஸங்கியாதேகொள்; "யத:" என்று அத்யாஹாரம்; யாதொரு காரணத்தாலே; (ரங்கராஜாங்ககாநாம்) பெரியபெருமாளுடைய திவ்யாவயவங்களுக்கு; (ஸுப்ராதுர்பாவ: ஸௌப்ராத்ரம்; தஸ்ய வ்யதிகரம் கரோதீதி, தத்) ஒன்றுக்கொன்று நல்ல ப்ராதாவாயிருக்கையினுடைய-ஸௌகட்யத்தினுடைய-ஸம்பந்தத்தைப் பண்ணுநின்றுள்ள; (வ்யதிகர:) ஸாங்கத்யம்; தத் கரோதீதி ததோக்தம் ஸௌஹார்த்தமித்யர்த்த:. (தத்) ஸர்வவிலக்ஷணமான; (லாவண்யம்) ஸமுதாய ஶோபையானது; அன்றிக்கே, "தஸ்ய லாவண்யம்" என்றாய், பெரிய பெருமாளுடைய லாவண்யமென்றபடியாகவுமாம். (த்வாம்) ஸர்வத்தையும் அனுபூஷிக்கிற உன்னை. (விச்வஸ்மிந் பாரீணவ்ருத்தி: யஸ்ய தத்) ஸர்வாவயவத்திலும் அக்கரைப்பட்ட அனுபவத்தை உடைத்தானதாக; (பரிணமயிதா) புண்ணப்போகிறது. விச்வேஷு-ஸர்வேஷ்வயவேஷு, பாரீணு-பாரங்கதா, வ்ருத்தி:-அனுபவோ யஸ்ய தத் ததோக்தம்; பரிணமயிதா-பரிணதம் கர்த்தா; ல்யுட்.

யௌவனமாவது:—288. (யுவாகுமார:) என்கிறபடியே கௌமாராவஸ்தையில் கழிவான தஶையாய், யௌவநாவஸ்தாப்ராதுர்ப்பாவமாயிருக்கை. 284. (க்வ யௌவநோந்முகீபூத ஸுகுமாரதநுர்ஹரி:) என்றதிறே. ஏதாத்ருஶஸ்திதியே நிலைநிற்கையாலே நித்யயௌவனமாயிருக்கும். ஸர்வேச்வரன் ஆச்ரிதாரக்ஷணார்த்தமாக அஸங்க்யாத திவ்யவிக்ரஹ பரிக்ரஹம்பண்ணி ஶைஶவாத்யவஸ்தாபன்னனாகிலும் இந்த யௌவனாவஸ்தை குலையாமையாலேயன்றே † "உன்னையுமொக்கலையில் கொண்டுதமில் மருவி உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும் கன்னியரும் மகிழ" என்று ஶைஶவாவஸ்தையிலே யௌவனம் கண்டு அனுபவித்தது.

ஆக, ஏதாத்ருஶாஸங்கயேய கல்யாணகுணவிஶிஷ்டதையால் உண்டான திவ்யவிக்ரஹவைலக்ஷண்யத்தை "மூர்த்தம்" என்று தொடங்கி அனுபவிக்கிறார். *ப்ரஹ்மஶப்தத்தாலே விக்ரஹத்தினுடைய அதிமஹத்த்வமும், ஸ்வாச்ரிதாஜ்ஞாநநிவ்ருத்திபூர்வக விஜ்ஞானவிகாஸகத்வமும் விவக்ஷிதம். இதற்கு "மூர்த்தம் ப்ரஹ்ம"

† பெரியாழ்-திரு (1-5-8).

என்றிறே திருநாமம். (ததோεபி தத்ப்ரியதரம்) ஆனந்தமயஸ்வரூபத்திலும், ஆனந்தாவஹததஸங்க்யாதகுணங்களிலும், அதிஶயித ஸௌந்தர்யாதிகுணயோகத்தாலே நிரதிஶயானந்தாவஹமாய், அத ஏவ நிரவதிகப்ரீதிவிஷயமாயிருக்கை. 289. (இச்சாக்ருஹீதாऽபிமதோருதேஹ:) என்னக்கடவதிறே. (தத்ப்ரியதரம்) தஸ்ய ப்ரியதரம் என்னுதல்; "தத்" என்று வ்யஸ்தமாக்கி "யத் தத்" என்று யோஜிக்கவுமாம். அப்போது 290. (புருஷம் க்ருஷ்ணபிங்களம்), 291. (ஸர்வயஜ்ஞமயம் வபு:), 292. (த்யேயயஸ்ஸதா), 293. (கிரீடகுண்டலதரம்) இத்யாதி விக்ரஹவைலக்ஷண்யப்ரதிபாதகப்ரமாண ப்ரஸித்த்யதிஶயத்தை த்யோதிப்பிக்கிறது. (ரூபம்) இங்கே ரூபஶப்தம் விக்ரஹபரம். * யச்சப்தம், ஏகரூபத்வ நித்யத்வ நிரவத்யத்வ அசிந்த்யத்வ ப்ரகாஶக ப்ரமாணப்ரஸித்திபரம். (அத்பத்புதம்) ஸ்வஸங்கிவேஶ பூர்வோக்த ஸௌந்தர்யாத்யனந்தகுணயோகங்களாலே, அபிநவரஸ ஜனகமாய், அதிவிஸ்மயாவஹமாயிருக்கை. இவ்விடத்திலே 293. (ஸ்வாபிதாநுऽரூபைகரூப-விக்ரஹ) என்கிற சூர்ணிகாத்வயப்ரதிபாதித விக்ரஹவைலக்ஷண்யமெல்லாம் அனுஸந்தேயம்.

இத்தால், ஸ்வரூபதத்குணத்யந்தாபிமதமாய், ப்ரஹ்மஶப்தவாச்யமாய், அதிவிஸ்மயாவஹமாய், ஶ்ருதிஸ்ம்ருத்யாதிப்ரஸித்தமான, ஸாலம்பனயோகவிஷயாऽஸாதாரணவிக்ரஹத்தை ஶுபாஶ்ரயமாக அனுபவித்தாராய்த்து. * யோகித்யேயமிறே. 294. (ஸதா த்யேயம்). மேல், இந்த விக்ரஹத்தினின்றும் ஆஶ்ரிதார்த்தமாகப் பரிக்ரஹித்த வ்யூஹவிபவாந்தர்யாமிரூபங்களை அனுபவிக்கிறார் (யாந்யந்யானி) இத்யாதியாலே. "யதா ஸூகம் விஹாரதோ ஹரே: அந்யாநி யாநி ரூபாணி ஸந்தி, தாநி ஸர்வாணி" என்று ஸம்பந்தம். (யாநி) இவ்விடத்தில் யச்சப்தம், 295. (ஜந்ம கர்ம ச மே திவ்யம்) என்கிற அவதாரரஹஸ்யப்ரகாஶகப்ரமாணப்ரஸித்தியை ஸூசிப்பிக்கிறது. "யாநி" என்கிற பஹுவசனம் 273. (அஜாயமாநோ பஹுதா விஜாயதே), ‡ "பிறப்பில் பல் பிறவிப் பெருமான்", 274. (பஹூநி) "ரூபாணி" 275. (ஶதஶோऽத ஸஹஸ்ரஶ:) இத்யாதிகளில் சொல்லுகிற அவதாராऽஸங்க்யாதத்வத்தை ஸூசிப்பிக்கிறது. (அந்யாநி)

‡ திருவாய் (2-9-5).

பரரூபத்தினின்றும் * ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்கு பிறக்கையாலே, தத்ஸந்நிவேஶவர்ணாதிகளைப்போலே வைலக்ஷண்ய-விஶிஷ்டங்களாயிருக்கை. "அந்ய:" என்கிறாப்போலே, "அந்யாநி" என்கையாலே வ்யாவ்ருத்தியும் தோற்றுகிறது.

(யதாஸுகம்) மனுஷ்யஸஜாதீயனாய் அவதரித்த தஶையிலும், ஸ்வாபாவிகஸுகாதிநிவ்ருத்தியென்ன, து:க்கபாக்த்வமென்ன, இவையின்றிக்கே கேவலம் ஸுகமாயிருக்குமதொரு படி. (ஸுகம் யதா பவதி ததா) க்ரியாவிஶேஷணமான அவ்யயம். (விஹரத:) என்கிற இத்தால் அவதாரரூபங்கள் இச்சாக்ருஹீதங்கள் என்னுமிடமும் § "வீட்டைப் பண்ணி விளையாடும்", || "இன்புறுமிவ்விளையாட்டுடையான்" 296. (க்ரீடதோ பாலகஸ்யேவ) என்கிறபடியே க்ரீடார்த்தங்களாயிருக்குமென்னுமிடமும் கர்ப்பிதம். ஆகையால் இவனுடைய *ஶரீரக்ரஹணம் கர்மக்ருதமின்றிக்கே *கேவலம் தர்மத்ராணார்த்தமாயிருக்குமென்கை. 297. (நாகாரஜுத்) இத்யாதி. (ஸர்வாணி தாநி) கீழ்ச்சொன்ன இத்தால் ஸ்வரூபரூபாதிகளில் அத்யல்பமாகிலும் பெரியபிராட்டியாராலே அநந்விதமாயிருப்பதில்லை என்னுமிடத்தை த்யோதிப்பிக்கைக்காக "ஸர்வாணி தாநி" என்கிறார். 23. (ஸர்வாணி ரூபாணி) என்றாப்போலே இருக்கிறதாய்த்து. (தைஸ் ஸ்வைரநுரூபரூபவிபவை:) உன்னுடைய அஸாதாரணங்களான அனுரூபரூபவிபவங்களாலே; அனுரூபங்களான ரூபஸம்பத்துக்களாலே என்கை. அதவா, ரூபங்களாகிற விபவங்களாலே என்னவுமாம். இவ்விடத்தில் ரூபஶப்தம் * பகவந்நாராயணாபிமதாநுரூபங்களான ஸ்வரூபரூபகுணவிபூதிகளைச் சொல்லுகிறது. (யதாஸுகம் விஹரதோ ஹரேஸ் ஸர்வாணி ரூபாணி தைஸ்தைரனுரூபரூபவிபவைர் காடோபகூடாநீத்யாஹு:) த்வதபிமதானுரூபங்களான தத்ஸ்வரூபரூபகுணாதிகள், ததபிமத தத்ஸ்வரூபாத்யனுரூபங்களான உன்னுடைய ரூபாதிகளாலே யதாக்ரமம் த்ருடஸம்புத்தங்களாயிருக்குமென்று ஶ்ருதிஸ்ம்ருதிகள், வஸிஷ்டபராஶரபாராஶர்யாதிகளான பரமர்ஷிகள் சொல்லுவர்கள். அனுரூபமாயிருக்கையாவது:—ரத்னகாஞ்சனந்யாயத்தாலே ஸ்வஸம்பந்திக்கு ஶோபாதிஶயஹேதுவாயி

§ நாச்-திரு (14-9). || திருவாய் (3-10-7)

ருக்கை. (காடோபகூடாநி) வியோகாநர்ஹங்களாயிருக்குமென்கை. † "இறையும் அகலகில்லேன்" என்றிருக்க, அவன் 151. (ந ஜீவேயம் க்ஷணமபி) என்றிருக்க, இருவர் ஸ்வரூபாதிகளும் 'வியோகித்திருக்க விரகுண்டோ? (ஆஹ:) 19. (விஷ்ணோஸ் ஸ்ரீரநபாயிநீ), 298. (ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:) என்றும், ‡ "திருவிருந்த மார்பன்" என்றும், § "திருமெய்யுறைகின்ற" || "தன்னொடும் பிரிவிலாத திருமகள் மருவும்" இத்யாதிப்ரமாணப்ரவர்த்தகரான தத்வதர்ஸிகள் இந்நித்யயோகத்தைச் சொன்னார்கள்.

இத்தால் ஸாபராதசேதனர் ஸ்வாபராதத்தை நினைத்து அஞ்சி அகலாமல் ருசி பிறந்தபோதே ஆஸ்ரயிக்கலாம்படி புருஷகாரபூதையான இவள் ஸந்நிதி அவஸ்யம் வேண்டுகையாலும், ப்ராப்திதஸையில் சேர்ப்பாலும் கண்டசர்க்கரையும் கலந்தாப்போலே நிரதிஸய போக்யத்வார்த்தமாகவும் 58, (வைதேஹ்யா ஸஹ) என்கிறபடியே இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை முறையாகையாலும் அடிமைதான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் சேர்த்தியிலேயாகையாலும், இப்படி உபாயதஸையோடு உபேயதஸையோடு வாசியற * இங்குமங்கும் திருமாலன்றி இன்புற விரகில்லாமையாலே * எழில் மலர் மாதரும் தானுமாய்க்கொண்டு இவ்வேழுலகை இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருக்கிற நித்யயோகத்தை அனுஸந்தித்தருளினாராய்த்து.

* மதுபர்த்தப்ரதிபாதகமான இஸ்லோகத்தாலும், ப்ரதமஸ்லோகத்தாலும் நாராயண ஸப்தார்த்தமும் ஸங்க்ருஹீதம். எங்ஙனேயென்னில்: "ஸாந்தாநந்த" என்று தொடங்கி திவ்யர்த்மஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கையாலே, * அயநஸப்தார்த்தம் ஸங்க்ருஹீதம். குணகுணிகள் அப்ருதக்ஸித்தங்களாகையாலே குணியான ஸ்வரூபத்தைச் சொன்ன இது தந்நிரூபககுணங்களான ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளுக்கும், நிரூபிதஸ்வரூபவிஸேஷணங்களான ஜ்ஞாநஸக்த்யாதிகளுக்கும், ஸௌகர்யாSSபாதகங்களான வாத்ஸல்யஸௌஸீல்யாதிகளுக்கும் உபலக்ஷணம். "மூர்த்தம்—ரூபம்" என்று தொடங்கிச்சொன்ன திவ்யவிக்ரஹம், தத்குணங்களான காந்திஸௌகுமார்யாதிகளுக்கும் தத்தாதேயமான திவ்யபூஷணங்களுக்கும், ஆபரணகோடியிலே அன்வித

† திருவாய் (6-10-10). ‡ நான்-திருவ-92. § திருவாய் (10-4-2).

மான திவ்யாயுதங்களுக்கும் உபலக்ஷணம். (தே) என்று பெரிய பிராட்டியாரைச் சொன்னது, பூமிப்பிராட்டி தொடக்கமான மற்றை நாய்ச்சிமாருக்கும் உபலக்ஷணம். "பணிபதி:" என்று நித்யஸூரிகளைச் சொன்னது, சத்ரசாமராதிகள் தொடங்கி பரமாகாஶத்துக்கும் உபலக்ஷணம். "மாயா" என்று ப்ரக்ருதியைச் சொன்னது பத்தாத்மாக்களுக்கும், காலமஹதாதிவிகாரங்களுக்கும் உபலக்ஷணம். "ப்ரஹ்மேஶாதி" என்று அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களைச் சொன்னபோதே அண்டமும் ஸித்தமிறே. ஆக, நாரஶப்தார்த்தமும் ஸங்க்ருஹீதம். விக்ரஹத்தைச் சொன்னபோதே * சரணஶப்தார்த்தம் ஸங்க்ருஹீதம். உபாயோபேயங்களுக்கு அவிஶிஷ்டமான நித்யயோகத்தைச் சொல்லுகையாலே, உபாய ஸ்வீகாரமும் உபேயப்ரார்த்தனையும் உக்தப்ராயம். அதவா, த்ரிலோகத்ரயத்தாலே பூர்வவாக்யார்த்தத்தையும், துரீயச்லோகத்தாலே உத்தர வாக்யார்த்தத்தையும் அநுஸந்திக்கவுமாம்.

நநு, இச்லோகத்தில் இருவருடையவும் நித்யயோகம் சொல்லுகிறதாகில், 299. (பரமாத்மா பரோ யோऽஸௌ நாராயணஸமாஹ்வய:। தஸ்யாऽநபாயிநீ ஶக்திர் தேவீ தத்தர்மதர்மிணீ ॥) 19. (விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ) என்றுப்போலே திரள ஒரு பாசுரமிட்டருளிச்செய்யாமல், பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகள், லக்ஷ்மீஸ்வரூபரூபகுணவிபூதிகளோடே யதாக்ரமம் காடாச்லிஷ்டங்களாயிருக்கும் என்று இப்படி விபஜித்து அருளிச்செய்வானென்னென்னில்: த்வயத்திலே ப்ரதம பதத்தில் விஶேஷ்யபரமான நாராயணபதத்திலே பகவத்ஸ்வரூபரூப குணவிபூதிகளை ப்ரதிபாதிக்கையாலும், தத்விஶேஷணபரமான ஸ்ரீஶப்தத்திலே பிராட்டியினுடைய ஸ்வரூபரூபகுணாதிகளை ப்ரதிபாதிக்கையாலும் உபயருடையவும் ஸ்வரூபாதிகளுக்கு உண்டான அவிநாபாவஸம்பந்தத்தை மதுப்பு ப்ரதிபாதிக்கையாலும், மதுபர்த்தப்ரகாஶகமான இச்லோகத்தாலே புருஷகாரோபாயங்களுடைய ஸ்வரூபாதிகளுக்கு அந்யோந்யமுண்டான அவிநாபாவஸம்பந்தத்தை விஸ்தரேண அருளிச்செய்யக் குறையில்லை.

இப்படி, பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதிகளோடே பிராட்டிக்கு உண்டான அவிநாபாவஸம்பந்தத்தை வேதங்களும், ருஷிகளும்,

ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பி அநுஸந்தித்தார்கள். 299. (தேவஜுஷ்டாம்) என்றும், (ஸ்ரீமந்நாராயண) [த்வயம்] என்றும், தத்ஸ்வரூபாதிகளோடே ஏதத்விநாபாவஸம்பந்தத்தை வேதாந்தங்கள் விரும்பிற்றன. 300. (அஹந்தா ப்ரஹ்மணஸ் தஸ்ய ஸாऽஹமஸ்மி ஸநாதநீ। ஆத்மா ஸ ஸர்வபூதாநாம் அஹம்பூதோ ஹரி:ஸ்ம்ருத:॥ அஹந்தயா விநாऽஹம் ஹி நிருபாக்யோ ந ஸித்த்யதி। அஹமர்த்தம் விநாऽஹந்தா நிராதாரா ந ஸித்த்யதி॥) இத்யாதிகளாலே பகவத்ஸ்வரூபாऽவிநாபாவஸம்பந்தம் ஸ்பஷ்டமாயிற்று. 301. (கா சாऽந்யா த்வாம்ருதே தேவி! ஸர்வயஜ்ஞமயம் வபு:। அத்யாஸ்தே தேவதேவஸ்ய யோகிசிந்த்யம் கதாப்ருத:), 298. (ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:), 302. (யயௌ வக்ஷ:ஸ்தலம் ஹரே:) இத்யாதிகளாலே விக்ரஹாந்வயம் விஶதமாய்த்து. 303. (ராஜராஜோऽகிலஸ்யாஸ்ய விச்வஸ்ய பரமேச்வர:। காந்தஸ்ய தஸ்ய தேவஸ்ய விஷ்ணோஸ் ஸத்குணஶாலிந:॥ தயிதாऽஹம் ஸதா தேவீ ஜ்ஞாநாநந்தமயீ ஸதா। அநவத்யாऽநவத்யாங்கீ நித்யம் தத்தர்மதர்மிணீ॥) இத்யாதிகளாலே குணவிநாபவம் கோஷிக்கப்பட்டது. 304. (வைகுண்டே து பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:। ஆஸ்தே) 305. (தத்ர திவ்யவபு: ஸ்ரீமாந் தேவதேவோ ஜநார்த்தந:। ஆஸ்தே நாராயண: ஸ்ரீமாந் வாஸுதேவஸ் ஸநாதந:॥) 306. (வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந:) இத்யாதிகளாலே விபூத்யந்வயம் விஸ்தரிக்கப்பட்டது. 307. (ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:), 308. (தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ।....ராகவத்வேऽபவத் ஸீதா) 309. (வ்யூஹேஷு சைவ ஸர்வேஷு விபவேஷு ச ஸர்வஶ:। ததா வ்யூஹீ பவத்யேஷா மம சைவாநபாயிநீ॥) இத்யாதிகளாலே வ்யூஹவிபவாऽவிநாபாவம் வ்யாக்யாதமாயிற்று. 310. (தைஸ்தைரநுகுணைர் பாவைர் யாஹம் தேவஸ்ய ஶார்ங்கிண:। கரோமி ஸகலம் க்ருத்யம் ஸர்வபாவாநுகாமிநீ) இத்யாதிகளாலே ஐச்வர்யாந்வயம் ஆதரிக்கப்பட்டது. இப்படி ப்ரத்யேகமாக ப்ரதிபாதிக்கையன்றிக்கே, 311. (குணைர் விலாஸை ரூபைச்ச ஸ்வாத்மநா வாऽऽத்மநீச்வரம்। நியச்சந்தீம் அகண்டாண்ட நியந்த்ரீஞ்ச ஸ்தும: ஶ்ரியம்) என்று ஸகலாவிநாபாவஸம்பந்தமும் ஸங்க்ரஹிக்கப்பட்டதிறே.

† "மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்" ‡ "தன்னோடும் பிரிவிலாத திருமகள்" இத்யாதிகளாலே ஸ்வரூபாऽவிநாபாவஸம்பந்

† திருவாய் (1-3-1). ‡

தமும், § "என் திருமகள்சேர் மார்பனே!", || "திருமார்வினில் சேர் திருமாலே" / "அலர்மேல் மங்கையுறை மார்பா", :: "திருமகளும் கூறுளும் தனியுடம்பன்" என்று ரூபாऽவிநாபாவஸம்பந்தமும், / "நிகரில் புகழாய்", /: "மிகும் திருமால் சீர்க்கடலை" என்று குணாऽபிவ்ருத்த்யந்தர்ப்பாவமும், †: "திருமால் வைகுந்தம்" என்று விபூத்யந்தர்ப்பாவமும், ‡: "திருமால் கடல்", †/ "மாதவா! கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா!", §: "ஸீமாதவன் கோவிந்தன்", /‡ "திருமால் வந்தென் நெஞ்சு நிறையப் புகுந்தான்", †† "வேங்கடத்தென் திருமால்" என்று வ்யூஹவிபவாऽந்தர்யாம்யர்ச்சாவதாராऽவிநாபாவமும், ‡‡ "பூம்பாவை யாகம் புணர்வது இருவரவர் முதலும் தானே", §§ "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கும்அம்மான்—எல்லாக்கருமங்களும் செய்" என்று ஜகத்ஸ்ருஷ்ட்யுந்முகாத்யந்தர்ப்பாவமும் ஆழ்வார்களாலும் அநுஸந்திக்கப்பட்டதிறே.

இவர்களை அடியொற்றின ஆசார்யச்ரேஷ்டரான பட்டரும் 311. (ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம் சந்த்ரவதநே! த்வதாச்லேஷோத்கர்ஷாத் பவதி கலு நிஷ்கர்ஷஸமயே। த்வமாஸீர் மாத: ஸ்ரீ: கமிதுரிதமித்தந்த்வவிபவைஸ் ததந்தர்ப்பாவாத் த்வாம் ந ப்ருதகபிதத்தே ச்ருதிரபி॥) என்று ஸ்வரூபாऽவிநாபாவஸம்பந்தமும், 312. (அநுகலதநுகாண்டாலிங்காரம்பஸம்பத்) என்று ரூபஸம்பந்தமும், 313. (ப்ரஸகநபலஜ்யோதிர் ஜ்ஞானைச்வரீ விஜயப்ரதா ப்ரணதவரண ப்ரேம க்ஷேமங்கரத்வ புரஸ்ஸரா:। அபி பரிமள: காந்திர் லாவண்யமர்ச்சிரிதீந்திரே! தவ பகவதச்சைதே ஸாதாரணா குணராஸய:॥), 314. (அந்யேऽபி யௌவநமுகா யுவயோஸ் ஸமாநா: ஸ்ரீரங்கமங்களவிஜ்ரும்பணவைஜயந்தி। தஸ்மிம்ஸ்தவ த்வயி ச தஸ்ய பரஸ்பரேண ஸம்ஸ்தீர்ய தர்ப்பண இவ ப்ரசுரம் ஸ்வதந்தே॥) 315. (யுத்வத்வாதேள துல்யேऽப்யபரவஸதாஸத்ருஸம்ந) இத்யாதிகளாலே குணவிநாபாவமும், 316. (தத்ர ஸ்ரக்ஸ்பர்ஸ கந்தம் ஸ்புரதுபரிபணாரத்நரோசிர் விதாநம் விஸ்தீர்யாऽநந்தபோகம்) என்று

---

§ திருவாய் (7-2-9). || திருவாய் (9-4-1). / திருவாய் (6-10-10).
:: திருவாய் (4-8-1). /: பெரியதிருவ-69. †: திருவாய் (10-7-8).
‡: †/ திருவாய் (1-5-5). §: திருவாய் (8-2-7). /‡ திருவாய் (10-8-1).
†† நாச்-திரு (8-1). ‡‡ திருவாய் (2-8-1). §§ திருவாய் (3-10-8).

விபூத்யந்தர்ப்பாவமும், 317. (ததிமாதம் மத்நத: ச்ராந்திஶாந்த்யை—ஸ்மிதநயந ஸௌததாபிஸ் ஸிஞ்சதீ சந்த்ரிகேவ) என்று வ்யூஹாந்தர்ப்பாவமும், 318. (யதி மநுஜதிரச்சாம் லீலயா துல்யவ்ருத்தேரநுஜநுரநுரூபா தேவி நாவாதரிஷ்ய: । அஸரஸமபவிஷ்யந் நர்ம நாதஸ்ய மாதர் தரதளதரவிந்தோதந்தகாந்தாயதாக்ஷி), 319. (அநுஜநுரநுரூபரூபசேஷ்டா ந யதி ஸமாகமமிந்திராऽகரிஷ்யத் । அஸரஸமதவாऽப்ரியம் பவிஷ்ணு த்ருவமகரிஷ்யத ரங்கராஜநர்ம ॥) என்று விபவாந்தர்ப்பாவமும், 320. (ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேஶயம்) என்று அர்ச்சாவதாராந்தர்ப்பாவமும், 200. (ஸ்ரீயை ஸமஸ்தசிதசித்விதாநவ்யஸநம் ஹரே:) 320*. (யத்ப்ருபங்கா: ப்ரமாணம்), 321. (அநுஶிகிநி ஶிகீவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம்) என்று ஜகத்வ்யாபாராந்தர்ப்பாவமும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே. 322. (ஆத்மந்யாத்மா வபுஷி ச வபுர் வைபவைர் வைபவஞ்சேத்யாகாரைஸ்தைரநுகுணதயா ஸர்வபாவாநுயாதா । இச்சாரூபாண்யபி பகவதஸ் ஸ்வாதயந்த்யாத்தரூபா தூரீகுர்யாந்நஹி மதுரதாதுக்தஸிந்தோஸ் தரங்காத் ॥) என்று பிராட்டிக்கு உண்டான பகவத்ஸ்வரூபாத்ய விநாபாவஸம்பந்தத்தை அபியுக்தர்களும் அநுஸந்தித்தார்களிறே. ஆக, இப்படி ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலும், அவற்றை அடியொற்றின ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களாலும் ப்ரதிபாதிக்கிற திவ்யதம்பதிகளுடைய ஸ்வரூபாதிகளுக்கு அந்யோந்யமுண்டான அவிநாபாவஸம்பந்தத்தை இச்லோகத்தாலே அருளிச்செய்தாராய்த்து.

இப்படி இருவர்க்குமுண்டான அவிநாபாவஸம்பந்தத்தை அருளிச்செய்கிறவிடத்தில், ப்ரதமத:, விபுவான பகவத்ஸ்வரூபத்தோடே லக்ஷ்மீஸ்வரூபத்துக்கு அநுரூபஸ்வரூபஸம்பந்தம் சொல்லுமளவில், பிராட்டிக்கும் ஸ்வரூபத: விபுத்வம் அங்கீகரிக்கவேணும். ஸ்வரூபவிபுத்வம் அங்கீகரித்தாலிறே பகவத்ஸ்வரூபாநுரூபத்வமும், அதிஶயாகாரேண ஸ்துதியும் ஸித்திப்பது. 'பத்னிக்கு பதிஸ்வரூபாநுரூப்யாऽவச்யம்பாவித்வத்தை ச்ருதியும் ஸூசிப்பித்ததிறே. விஷ்ணுவுக்குப் பத்னியாம்போது வ்யாபனஶீலையாகவேணும். 49. (பகவந்நாராயணாபிமதாநுரூபஸ்வரூபரூப) என்று பகவத்ஸ்வரூபாநுரூபத்வத்தை பாஷ்யகாரரும் ப்ரதமத்திலே ஸாதித்தருளினரிறே. இப்படி ப்ரமாணஸித்தமுமாய், ப்ரமாத்ருஸித்தமுமாய், யுக்தியுக்த

முமான விபுத்வத்தை அங்கீகரியாமல், அணுத்வத்தை அங்கீகரிக்கும் போது, பகவத் வருபைகதேஶவ்யாப்தியேயிறே ஸித்திப்பது. அது ஸகலசேதன ஸமானமாகையாலே, பிராட்டிக்கு ஒரதிஶயித ஸ்தோத்ரம் ஸித்தியாது. "அநுரூபரூபவிபவை:" என்கிற பதத்துக்கும் பகவத்ஸ்வரூபாதிகளிம் அல்பதேஶமாகிலும் இவளால் அநந் விதமாயிருப்பதொரு இடமில்லை என்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிற "ஸர்வாணி" என்கிற பதத்துக்கும் வையர்த்யமும் வரும். அணுவரூபையாயிருக்கவும், விகாஸகஶக்தியாலே விபுவாயிருக்குமென்னில்; அப்போது ஸமானந்யாயத்தாலே ஸகலாத்மாக்களும் ஸ்வரூபவிகாராங்கீகாரத்திலே தோஷமின்றியிலே ஒழியும். ஆத்மநிர்விகாரத்வ ப்ரதிபாதகமான ப்ரமாணங்களுக்கும் விரோதமாம். ஆகில், ஜ்ஞான வ்யாப்தியைச் சொல்லுகிறதென்னில்: 323. (வாலாக்ரஶதபாகஸ்ய) என்று தொடங்கி, 323. (ஸ சாநந்த்யாய கல்பதே) என்று முக்தாத்மாக்களுக்கும் ஜ்ஞானவ்யாப்தியுண்டாகையாலே இங்கு ஒரு அதிஶயமும் அனுரூபத்வமும் ஸித்தியாது. இவர்களைப்போலே ப்ரத்வம் ஸாபாவமாத்ரமேயின்றிக்கே ப்ராகபாவத்தைப் பற்றச் சொல்லுகையாலே அதிஶயமும் அநுரூபத்வமும் ஸித்திக்கிறதென்னில்: அது நித்யர்க்கும் உண்டாகையாலே அவை இரண்டும் ஸித்தியாது. கிஞ்ச, அநுரூபத்வோக்தியாலே அதிஶயஸ்துதி ஸித்திக்கிறதென்னில்; அந்த அநுரூபத்வமாவது:—அணுத்வத்தில் வைஷம்யமுண்டானாலும், ஸ்வதந்த்ரஶேஷியைக்குறித்து ஶேஷத்வபாரதந்த்ர்யங்களாலே அதிஶயாவஹத்வமென்னில்; அதுவும் ஸகல சேதநாசேதந ஸமானமாகையாலே விஶேஷம் ஸித்தியாது. கிஞ்ச, (யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம), (த்வயைதத் விஷ்ணுநா சாம்ப! ஜகத் வ்யாப்தம் சராசரம்) இத்யாதிகளிலே ஸ்வரூபதோ விபுத்வம் ப்ரஸித்தமாயிருக்க, ததநங்கீகாரேண அணுத்வாங்கீகாரமும் ப்ரமாண-விரோதமும் ப்ரஸங்கிக்கும். ஆக, அநுரூபத்வஸித்திக்காகவும், அதிஶயிதஸ்துதிஸித்திக்காகவும், ப்ரமாணவையர்த்ய நிவ்ருத்த்யர்த்தமாகவும், பிராட்டிக்கு ஸ்வரூபவிபுத்வம் அவர்ஜநீயமாகையாலே அவசியம் அங்கீகார்யமிறே என்னில்:

மைவம். லக்ஷ்மீஸ்வரூபத்தை நிரூபிக்குமளவில், ஸ்வரூபவிபுத்வம் கூடாது. எங்ஙனேயென்னில்: 324. (போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச

மத்வா), 325. (க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:) இத்யாதி வேதாந்த ஸித்தமான அர்த்தங்கள் நம் தர்ஶனத்துக்கும் உண்டிறே. இவற்றில் "அசித் தத்வாந்தர்ப்பூதையோ? ஜீவதத்வாந்தர்ப்பூதையோ? ஈச்வர தத்வாந்தர்ப்பூதையோ? தத்வத்ரயாதிரிக்தையோ?" என்று விகல்பித்து நிரூபிக்குமளவில், அசித்து ஜ்ஞானஶூந்யமாகையாலும், இவள் ஜ்ஞாத்ருத்வவிஶிஷ்டையாகையாலும், ஜ்ஞத்வாऽஜ்ஞத்வ விரோதப்ரஸங்கத்தாலே, அசித்தத்வாந்தர்ப்பாவம் கூடாது. ஈஶ்வரத்வித்வப்ரஸங்கத்தாலும், 326. (ஈஶதே தேவ ஏக:) என்கிற ஏகத்வ ஶ்ருதியோடும், 327. (ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே) என்கிற ஸமாதிகதரித்ரத்வப்ரகாஶக ஶ்ருதியோடும் விரோதம் ப்ரஸங்கிக்கையாலும், ஈஶ்வரதத்வாந்தர்ப்பாவம் கூடாது. பகவதைக்யம்சொல்லில், பத்நீத்வபரமான ஶ்ருதியோடும் பேதபரமான ச்ருதியோடும் விரோதம் பிறக்கும். ஐக்யபரங்களான ஶ்ருதிகள் அத்யந்தபாரதந்த்ர்யத்தாலே அவிநாபாவ நிபந்தனங்கள்;பேதப்ரதிபாதகங்கள் ஸ்வரூபபேதபரங்கள். கிஞ்ச, ஈஶ்வரத்வித்வத்தில் அந்யோந்யம் ஆஜ்ஞாவ்யாகாதத்தாலே அநீச்வரத்வமும் ப்ரஸங்கிக்கும். அதிரிக்ததத்வத்தில் ப்ரமாணமில்லாமையாலே தத்வத்ரயாதிரிக்தை என்னக் கூடாது. இனி,பாரிஶேஷ்யாத் ஜீவதத்வாந்தர்ப்பூதை என்னுமிடம் ஸித்தம்.

ஆனபின்பு, 328. (ஏஷோऽணுராத்மா), 329. (த்ரஸரேணுப்ரமாணாஸ்தே ரச்மிகோடிவிபூஷிதா:) என்று ஆத்மாக்களுக்கு அணுத்வத்தை லக்ஷணமாகச் சொல்லுகையாலும், ஜீவஸமஷ்டிவாசகமான மகாரத்தில் "மாங்—மானே" என்கிற தாதுவாலே, ஆத்மாக்கள் அணுபரிமாணரென்று சொல்லுகையாலும், ஜீவதத்வாந்தர்ப்பூதையான இவளுக்கும் அணுத்வம் அவர்ஜனீயமாகையாலே ஸ்வரூபவிபுத்வம் சேராது. கிஞ்ச, ஜீவதத்வாந்தர்ப்பாவத்தை அங்கீகரித்து அணுத்வாऽநங்கீகாரேண † "அணுத்வஸ்ய ஏதத்வ்யதிரிக்தஜீவவிஷயத்வேந விபுத்வம் ஏதத்விஷயம்" என்னில்: அப்போது, ஜீவத்வம் அணுத்வவ்யாப்தமாகையாலே ஜீவலக்ஷணத்துக்கு அவ்யாப்திதோஷம் ப்ரஸங்கிக்கும். "விபுத்வே ஸதி சேதநத்வம்" என்கிற ஈச்வரலக்ஷணத்துக்கு அதிவ்யாப்தியும் ப்ரஸங்கிக்கும். ஜீவாணுத்வப்ரதிபாதிகையான

†பா.அணுத்வமேதத்வ்யதிரிக்த ஜீவவிஷயம்;ஜீவத்வேऽபி விபுத்வம் ஏதத்விஷயம்

ச்ருதியோடும் விரோதிக்கும். ஆகையிறே 323. (ஸ சாநந்த்யாய கல்பதே) என்கிற விடத்திலும் முக்தருக்கும் ஸ்வரூபவிபுத்வம் சொல்லாமல் ஜ்ஞானவ்யாப்தியை ப்ரதிபாதிக்கிறது. இவ்வர்த்தம் 330. (ப்ரதீபவதாவேஶ:) இத்யாதிஸூத்ரத்திலே ப்ரதிபாதித்ததிறே.

நநு, முக்தர்க்கு ஜீவத்வஸாம்யத்தாலே அவர்ஜநீயமான அணுத்வத்துக்கு பாதகப்ரமாணமில்லாமையாலும், ததநுக்ராஹகப்ரமாணஸத்பாவத்தாலும் அணுத்வம் அங்கீகரிக்கலாம். பிராட்டிக்கு ஜீவத்வஸாம்யாகாரத்தாலே ப்ராப்தமான அணுத்வத்துக்கு தத்வ்யாபகப்ரமாணம் பாதகமாகையாலே அணுத்வம் கூடாதிறேயென்னில்; நைவம்; தத்விபுத்வப்ரமாணங்கள் ஸ்வரூபவிபுத்வபரங்களன்றிக்கே விக்ரஹவ்யாப்திப்ரதிபாதகங்களாகையாலே ததணுத்வபாதகங்களல்லவிறே என்கை. நநு, யதாப்ரமாணம் தத்விபுத்வாங்கீகாரத்தில் பாதகமில்லாமலிருக்கவும், ப்ரமாணங்களுக்கு அந்யார்த்தம் கல்பிக்கை யுக்தமல்லாமையாலே,தத்விபுத்வப்ரமாணங்கள் ததணுத்வே பாதகங்களிறேயென்னில்: விபுத்வயாऽஸம்பவமே இவ்விடத்தில் பாதகமாகையாலே அணுத்வம் அவர்ஜநீயமென்கை. நநு, காலாதிகளுக்கு விபுத்வம் உண்டாயிருக்கவும் ஈச்வரத்வித்வம் வாராதாப்போலே, லக்ஷ்மீவிபுத்வத்திலும் ஈச்வரத்வித்வம் ப்ரஸங்கியாமையாலே அது விரோதமன்றேயென்னில்: "காலாதிகளுக்கு விபுத்வமுண்டாயிருக்கவும் ஈச்வரத்வித்வம் வாராதாப்போலே" என்கிற த்ருஷ்டாந்தம் சேராது. எங்ஙனேயென்னில்: "சைதந்யாऽநாதாரத்வே ஸதி விபுத்வம்" என்கிறதிறே லக்ஷணம்; "சைதந்யாதாரத்வே ஸதி விபுத்வம்" ஈச்வரலக்ஷணமாகையாலே சைதந்யவிசிஷ்டையான இவளுக்கு விபுத்வம் கொள்ளில் ஈச்வரத்வித்வம் ப்ரஸங்கிக்கையாலே, இவளுக்கு அணுத்வமே அஸாதாரணலக்ஷணம் என்னத் தட்டில்லை.

நநு, 166. (யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர:), (உத்தம: புருஷஸ்த்வந்ய:)என்று ஸர்வவ்யாபகத்வத்தாலும்,ஸர்வநியந்த்ருத்வத்தாலும் ஈச்வரனுக்கு ஜீவாऽந்யத்வம் ஸாதித்தாப்போலே, 19. (யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம), 51. (ஈச்வரீம் ஸர்வபூதாநாம்) இத்யாதிப்ரமாண ஸித்தங்களான ஸர்வவ்யாபகத்வநியந்த்ருத்வங்களாலே பிராட்டிக்கு ஜீவஜாத்யநந்தர்ப்பாவம் ஸாதிக்

கலாமிறே. எங்ஙனேயென்னில்: “நேயமாத்மஜாத்யந்தர்ப்பூதா। குத:? ஸர்வவ்யாபகத்வாத், ஸர்வ நியந்த்ருவாத்। யதா ஈச்வர:, ததாசேயம்; தஸ்மாத் ததேதி” என்று பஞ்சாவயவமான அநுமானத்தாலே ஆத்மதத்வாऽந்யத்வம் ஸாதித்து, அத ஏவ தஜ்ஜாதீயத்வாऽऽகதாணுத்வம் நிவ்ருத்தமாகையாலும், “ஸ்ரிய: பதியே ஸர்வவ்யாபக வஸ்து” என்று அங்கீகரிக்கவேண்டுகையாலும், நிரூப்யநிரூபகாऽவிநாபாவஸம்பந்தநிபந்தனமாக நிரூப்யஸ்வரூபத்துக்கு உண்டான விபுத்வம் தந்நிரூபகஸ்வரூபத்துக்கும் அவர்ஜநீயமாய்க்கொண்டு தன்னடையே வருகையாலும், இவளுக்கும் ஸ்வரூபதோவிபுத்வம் ந்யாயத: ப்ரர்ப்தமாகையாலே அணுத்வபக்ஷம் அயதார்த்தமிறே என்னில்:

மைவம்; இவ்விடத்தில் த்ருஷ்டாந்தயுக்ததார்ஷ்டாந்திகங்கள் ஸத்ருஶங்களன்றிறே. ஸவரூபவிபுத்வத்தாலும், ஸர்வநியந்த்ருத்வத்தாலுமிறே ஸர்வேச்வரனுக்கு ஜீவாந்யத்வத்தை ஸாதித்தது. தார்ஷ்டாந்திகத்தில் அந்த ஹேதுத்வயம் இல்லையிறே. எங்ஙனேயென்னில்: பிராட்டிக்கு ஆத்மஜாத்யநந்தர்ப்பாவஸாதகங்களாகச் சொன்ன ஹேதுத்வயத்தில் ப்ரதமஹேது விக்ரஹவ்யாப்தி விஷயமாகையாலே ஸ்வரூபாஸித்தம். அங்கு விக்ரஹவ்யாப்தியைச் சொல்லுகிறது என்கைக்கு த்யோதகமென்னென்னில்: 331. (க்ஷீரோதாச்ச்ரீஸ் ஸமுத்பந்நா ச்ரூயதேऽம்ருதமந்தநே। ப்ருகோ: க்யாத்யாம் ஸமுத்பந்நேத்யேததாஹ கதம் பவாந்॥) என்று * செழுங்கடலமுதினிற் பிறந்தாளென்றும், ப்ருகுபத்னியான க்யாதியினிடத்தில் பிறந்தாளென்றும், பராஶரபகவான் உபதேஶிக்கக்கேட்ட மைத்ரேயபகவான் நித்யையான லக்ஷ்மிக்கு உத்பத்திமத்த்வம் உண்டானல் நித்யத்வம் கூடும்படி எங்ஙனேயென்று ப்ரச்னம் பண்ண, அதற்கு உத்தரமாக, 19. (நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ। யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம॥) என்று உபதேஶித்தான். அதெங்ஙனேயென்னில்: “* நித்யாநாம் நித்யனாய், * அவ்யய: பிதாவான ஸர்வேச்வரன் ஸாதுபரித்ராணார்த்தமாக ஸர்வஜாதியிலும் அவதரித்து † “தமருகந்ததெவ்வுருவமவ்வுருவந்தானே”, ‡ “உமருகந்துகந்த உருவம் நின்னுருவம்” என்கிறபடியே ஆச்ரிதருகந்த அவ்வோ திரு

---

† முத-திருவ-44. ‡ திருவாய் (8-1-4)

மேனிகளாலே ஸர்வதேஶஸர்வகாலஸர்வாऽவஸ்தைகளிலும் யாதொரு படி ஸந்நிஹிதனுகிறன், அப்படியே, நித்யையாய், ஜகன்மாதாவாய் விஷ்ணுவுக்கு ஸம்பத்ரூபையாய், அநபாயினியாயிருக்கிற இவளும் மாத்ருத்வப்ரயுக்தமான வாத்ஸல்யத்தாலே அவதரித்து, தத்ரூபானுரூபங்களான அவ்வோ ரூபவிஶேஷங்களாலே ஸர்வத்ர ஸந்நிஹிதையாயிருக்கும். ஆகையால் உத்பத்திமத்த்வம் நித்யத்வபஞ்ஜகமன்று; கர்மக்ருதோத்பத்தியாகிலிறே தோஷாயவாவது; "அனுக்ரஹார்த்தமான அவதாரம் குணயவாமித்தனை" என்று ப்ரதிவசனம் பண்ணுகையாலே ஸர்வவ்யாபித்வவசனம் அர்த்தாந்தரவிஷயம். இவ்வளவன்றிக்கே, 332. (புநச்ச பத்மா ஸம்பூதா ஹ்யாதித்யோऽபூத் யதா ஹரி:। யதா து பார்க்கவோ ராமஸ் ததாऽऽஸீத்தரணீ த்வியம்॥ ராகவத்வேऽபவத் ஸீதா) இத்யாதிகளாலே மேலும் இந்த விக்ரஹவ்யாப்தியே ப்ரதிபாதிக்கப்பட்டதிறே. 333. (ஶைலம்யாலேஶ்ம்யையர் ஜகத்ரூபைஸ் த்வயைதத்தேவி பூரிதம்) என்று மேலே விவரிக்கையாலே 334. (த்வயைதத் விஷ்ணுநா சாம்ப! ஜகத் வ்யாப்தம் சராசரம்) என்கிறதும் விக்ரஹவ்யாப்திவிஷயம். ஆகையாலே இவளுக்கு ஸ்வரூபவ்யாப்தி பரிஹாரேண விக்ரஹவ்யாப்தியே உள்ளதென்று நிர்ணீதமாய்த்து.

கிஞ்ச, இருவர்க்கும் ஸ்வரூபவ்யாப்தியைச் சொல்லில், 335. (தேவதிர்யங்மநுஷ்யேஷு புந்நாமா பகவாந் ஹரி:। ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீர் மைத்ரேய! நாऽநயோர் வித்யதே பரம்। அர்த்தோ விஷ்ணுரியம் வாணீ) என்ற விபூதிவிபாகவிரோதம் ப்ரஸங்கிக்கும். த்விதீய ஹேதுவான ஸர்வநியந்த்ருத்வம் பாகாऽஸித்தமாகையாலே ஸாத்ய ஸாதகஸத்தேதுவன்று. எங்ஙனேயென்னில்: ஸகலபுருஷநியந்த்ருத்வத்தையிறே அங்கு புருஷதத்வாந்யத்வ ஸாதகமாகச் சொல்லிற்று. அந்த ஸர்வநியந்த்ருத்வம் இவளுக்குக் கூடாதிறே. ஏகோநநியந்த்ருத்வமிறே இவளுக்கு உள்ளது; அதுதன்னிலும் அந்த: ப்ரவிச்ய நியந்த்ருத்வமில்லையிறே. தாவந்மாத்ரத்தாலே ஆத்மஜாத்யநந்தர்ப்பாவம் கொள்ளும்போது ஸர்வர்க்கும் அபும்ஸ்த்வம் ப்ரஸங்கிக்கும்; ஸ்வஶரீரமாத்ரத்துக்கும் அநீஶனாயிருப்பானொருவன் இல்லையிறே. ஆக, இப்படி ஆத்மதத்வாऽந்யத்வஸாதகங்களான ஹேதுத்வயமும் அஸித்தங்களாகையாலேயும், நிரூப்யநிரூபகங்களுக்கு அவிநாபாவம்

உண்டாகிலும், லக்ஷ்மீஸ்வரூபநிரூபிதபகவத்ஸ்வரூபத்துக்கே வ்யாப்தி சொல்லுகையாலே ஜீவதத்வாந்தர்ப் பூதையாய், தஜ்ஜாதீயத்வேந ப்ராப்தமான அணுத்வத்தை ஸ்வரூபமாக உடைய இவளுக்கு ஸ்வரூபதோ விபுவான ஈச்வரனைப்போலே ஸ்வரூபவ்யாப்தியில்லையென்று நிர்ணயிக்கப்பட்டது. ஆகில், "யத்ப்ரஹ்ம ரூபம் தத்தே அநுரூபரூபவிபவைர் காடோபகூடாநி" என்று ஸர்வவ்யாபகஸ்வரூபத்தோடே தந்நிரூபகபூதையான லக்ஷ்மீஸ்வரூபத்துக்கு அவிநாபாவ ஸம்பந்தம் சொல்லுகையாலே, * ஸந்நியோக விசிஷ்டந்யாயஸித்தமான ஸ்வரூபவிபுத்வம் இவ்விடத்தில் சேரும்படி எங்ஙனேயென்னில்: இப்படி அநுபபத்யமாநார்த்த தர்சனத்தாலே உபபத்யமாநார்த்தாந்தரத்தைக் கல்பிக்கையாகிற அர்த்தாபத்தி ப்ரமாணஸித்தமான அகடிதகடநாசக்தியாலே, அணுஸ்வரூபையாயிருக்கவும், விபுவான ஈச்வரஸ்வரூபத்தோடே பரிஸமாப்ய வ்யாபித்திருக்கையை இவ்விடத்தில் சொல்லுகையாலே விரோதமில்லை. எங்ஙனேயென்னில்: 335. (மஹதோ மஹீயாந்) என்னும்படி அதிமஹத்தத்வமான ஈச்வரன், 335. (அணோரணீயாந்) என்கிறபடியே அணீயாநாம் அணீயனாய்க் கொண்டு அணுவ்யக்திகள் தோறும் அஸங்குசிதமர்க நிரங்குசைச்வர்யத்தோடே தன்னுடைய அகடிதகடநாசக்தியாலே, பரிஸமாப்ய வர்த்திக்குமாப்போலே, தத்ஸ்வரூபநிரூபகபூதையான இவளும் அணுவாயிருக்கவும் நிருப்யவஸ்து வ்யாபித்து நிற்குமிடமெங்கும், 51. (ஈச்வரீம்) என்று ச்ருதிப்ரஸித்தமான தன்னுடைய அகடிதகடநாசக்தியாலே வ்யாபித்து விபுவாயிருக்கை இவ்விடத்தில் விவக்ஷிதமாகையாலே விரோதமில்லையிறே. ஆகையாலே ஸ்வரூபதோ விபுவான ஈச்வரதத்வவ்யாவ்ருத்தியும், கேவலம் குணதோ விபுவான ஆத்மதத்வவ்யாவ்ருத்தியும், சைதந்யாऽநாதாரமான அசித்தத்வவ்யாவ்ருத்தியும், பகவத்ஸ்வரூபாநுரூபத்வமும், அதிசயிதஸ்தோத்ரமும் ஸித்திக்குமிறே. ஆநுரூப்யமாவது:--325. (ஈசே தேவ ஏக:) 336. (ஈச்வரஸ் ஸர்வபூதாநாம்) என்கிற தத்ஸ்வரூபத்துக்கு அநுரூபமாக, 168. (அஸ்யேசாநா), 51. (ஈச்வரீம் ஸர்வபூதாநாம்) என்னும்படியிருக்கையிறே உசிதம். அதவா, அவனுடைய ஸத்தை ஏதததீனையாய், இவளுடைய ஸத்தை தததீனையாயிருக்கை அந்யோந்யாநுரூபத்வமாகவுமாம். எல்லாப்படியாலும், § "உனக்கேற்கும்" என்னும்படி * துல்யசீலையாயிருக்கையிறே ஆநுரூப்யமாவது.

§ திருவாய் (10-10-6).

நநு, விபுவான ஸர்வேச்வரன், அகடிதகடநாஸாமர்த்யத்தாலே அணுஸ்வரூபனுய்க்கொண்டு அணுவ்யக்திகள்தோறும் ஜாதிவத் வ்யாபித்திருக்குமாப்போலே, இவளும் அணுவாயிருக்கவும் அகடிதகடநாஶக்தியாலே விபுவாய்க்கொண்டு வ்யாபித்திருக்குமென்கிறவிடத்தில் த்ருஷ்டாந்தம் கூடாது. எங்ஙனேயென்னில்: விபுவான ஈச்வரனுக்கு உபாத்யவச்சேதமாத்ரத்தாலேயிறே அணுத்வ விபுத்வங்கள் சொல்லுகிறன. ஸ்வரூபத: அணுத்வம் சொல்லவொண்ணாதிறே. அகடிதகடநாஶக்தியாலே அணுத்வமஹத்த்வரூபவிருத்தஸமுச்சயம் கூடுமென்னில்: அப்போது ஸர்வாத்வைத பேதாபேதபக்ஷங்களும் அங்கீகார்யங்களாமிறே. ஆகையாலே ப்ரதிவஸ்து பூர்ணத்வமாவது:— ஒரொரு உபாத்யவச்சிந்நப்ரதேஶமே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஶக்தியை உடைத்தாயிருக்கை. இங்ஙனன்றிக்கே, அந்தர்வ்யாப்தியை ஸ்வரூபஸமாப்ய வ்யாப்தி என்று அங்கீகரிக்கும்போது, பஹிர்வ்யாப்தி சேராது. கிஞ்ச, நிரவயவமான ஆத்மாவுக்கு ஷட்பாவராஹித்யத்தாலே உள்ளென்றும் புறம்பென்றும் ஒரு வ்யவஹாரம் கூடாமையாலே, அந்தர்வ்யாப்தியே அநங்கீகார்யம். ஆகையாலே பகவதந்தர்வ்யாப்தித்ருஷ்டாந்தபலத்தாலே லக்ஷ்மீவிபுத்வம் அஸாத்யம்.

கிஞ்ச, ஸ்வரூபவ்யாப்தியும் விக்ரஹவ்யாப்தியுமின்றிக்கே, அகடித்கடநாஶக்தியாலே அணுஸ்வரூபையாயிருக்கவும், விபுவோடே வ்யாபித்திருக்குமென்னில், ஸ்வரூபவிகாரித்வம் அங்கீகரித்ததாய்விடும். அப்போது ஆத்மநிர்விகாரத்வப்ரதிபாதகப்ரமாணங்களுக்கு விரோதம் ப்ரஸங்கிக்கும். ஆனபின்பு லக்ஷ்மீஸ்வரூபவிபுத்வமே அங்கீகார்யம். ஜீவத்வேऽபி விபுத்வாங்கீகாரத்திலும், "அணுத்வே ஸதி சேதநத்வம்" என்கிற ஜீவலக்ஷணத்துக்கு அவ்யாப்த்யதிவ்யாப்திதோஷபரிஹாரார்த்தமாக, அணுசேதநத்வம் ஏதத்வ்யதிரிக்தஜீவவிஷயம். பரதந்த்ரசேதனத்வம ஏதல்லக்ஷணமென்றும், ஸ்வதந்த்ரசேதனத்வம் ஈச்வரலக்ஷணமென்றும் லக்ஷணபேதம் கல்பிக்கலாமிறே. அன்றிக்கே ஜீவலக்ஷணத்தில் அணுஶப்தம் பரிச்சிந்நமாத்ரபரமாய், பகவத்பராதீனையான இவள் விஷயத்தில் ஸ்வதந்த்ரகுண பரிச்சேதேந வர்த்திக்கிறதாகவுமாம். அதாவது:—ஸ்வரூபதோ நிரதிஶயத்வேऽபி பாரதந்த்ர்யாதியோகத்தாலே குணதஸ்ஸாதிஶய யுக்தையாயிருக்குமென்றபடி. இத்தால், ஸ்வரூபத்தாலும், குணத்தாலும், ஸாதிஶய

ரான சேதனரில் வ்யாவ்ருத்தியும், ததுபயதோ நிரதிஶயஜ்ஞன ஈச்வர ணில் வ்யாவ்ருத்தியும் ஸித்திக்குமிறே. ஆகையால் ஜீவதத்வாந்தர்ப் பாவத்திலும், ஸ்வரூபதோ விபுவாகையாலே பகவத்ஸ்வரூபாநுரூபத் வமும் அதிஶயேந ஸ்துதியும் ஸித்திக்கையாலே, அணுத்வம் அநங்கீ கார்யமிறேயென்னில்:

மைவம்; ஸர்வேச்வரன் அணுத்ரவ்யங்கள் தோறும் ஸ்வரூபேண பரிமாப்ய வர்த்திக்குமென்னுமிடம் கூடாதாகில், 337. (அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:), 338. (அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்), 339. (ய ஆத்மாநமந்தரோ யமயதி) என்று அந்தர்வ்யாப்தியைச் சொல்லுகிற ப்ரமாணங்களுக்கு வையர்த்யமும், † "பரந்த தண் பரவையுள் நீர் தொறும்—கரந்தசிலிடந்தொறும் இடந் திகழ் பொருள் தொறும்—பரந்த அண்டமிதெனக் கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்டகரனே" என்கிற திவ்யஸூக்தியோடும் விரோதிக்கும். வ்யாப்யவ்யாபகங்களான ஜீவேச்வரஸ்வரூபங்கள் ஜ்ஞானமயங்களாகையாலே தேஜோத்ரவ்யங்களாய் அதிஸ்வச்சங்க ளாய்க்கொண்டு ப்ரதிகாதாபாவத்தாலே அந்யோந்யம் அந்த: ப்ரவே ஶிக்கை மிகவும் உபபன்னமாகையாலே, ஜாதி வ்யக்தி தோறும் பரி ஸமாப்ய வர்த்திக்குமாபோலே, 327. (பராऽஸ்ய ஶக்திர் விவிதைவ ச்ரூயதே) என்று ச்ருதிஸித்தமான அகடிதகடநாஶக்தியாலே வ்யாப் ருத வஸ்துக்கள் தோறும் ஸ்வரூபேண பரிஸமாப்ய வர்த்திக்கக் குறை யில்லையிறே. இப்படி ச்ருதிஸித்தமாய் யுக்தியுக்தமுமான அந்தர் வ்யாப்தி பஹிர்வ்யாப்திக்கு விரோதமாகாமையாலும், விருத்த ஸமுச்சயபக்ஷங்களில் விருத்தஸமுச்சயநிபந்தனமாக ஈச்வரனுடைய அகடிதகடநாஶக்தியைக் கொள்ளாமையாலே பரபக்ஷத்தின்படி ஆகாமையால், அது தத்ப்ரதிபந்தியல்லாமையாலும், விபுஸ்வரூபன் அகடிதகடநாஶக்தியாலே அணுக்கள் தோறும் ஸ்வரூபேண பரிஸ மாப்ய வர்த்திக்கிறப்போலே, பிராட்டியும் அணுஸ்வரூபையாயிருக்க வும் அகடிதகடநாஶக்தியாலே விபுஸ்வரூபத்தோடே வ்யாபித்திருக்கை யாகிற விபுத்வம் இச்லோகத்தில் விவக்ஷிதமாகையாலே விரோதமில்லை.

கிஞ்ச, 348. (ஏகமேவாத்விதீயம்) என்கிறபடியே ஜகத்துக்கு த்ரிவிதகாரணமும் ப்ரஹ்மமேயாகையாலே 341. (ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்

† திருவாய் (1-1-10).

ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்) என்கிற ஸூத்ரப்ரகாரத்திலே உபாதான காரணமாய்க்கொண்டு ப்ரஹ்மம் ஜகத்தாய்ப் பரிணமிக்கும்போது, தன்னுடைய ஶக்தியாலே ஸ்வரூபத்துக்கு விகாரம் வாராமல் பரிணமிக்குமாப்போலே இவளும் அணுவாயிருக்கவும் அகடிதகடநாஶக்தியாலே தன் ஸ்வரூபத்துக்கு விகாரம் வாராமல் விபுஸ்வரூபத்தோடே வ்யாபித்திருக்கக்குறையில்லாமையாலும், லக்ஷ்யவர்க்கத்துக்கெல்லாம் ஏறுகிற லக்ஷணத்தை விட்டு லக்ஷ்யவிபாகம் பண்ணி, லக்ஷணபேதம் கல்பிக்கை யுக்தமல்லாமையாலும், ஜீவவிஷயத்தில் அணுஶப்தம் 342. (ஜ்யாயாநந்தரிக்ஷாத்) என்கிற மஹத்த்வப்ரதிகோடியான அணுத்வத்தைச் சொல்லுகையாலே * வாலாக்ரேத்யாதிப்படியே ஸூக்ஷ்மபரிமாணத்தைச் சொல்லுமித்தனையல்லது பரிச்சின்னமாத்ரபரமல்லாமையாலும் ஜீவதத்வாந்தர்ப்பூதையாய் தஜ்ஜாதீயத்வேநஆகதமான அணுத்வத்தை ஸ்வரூபமாக உடைய இவள் தன்னுடைய அகடிதகடநாஶக்தியாலே ஸ்வவிகாரரஹிதமாக விபுஸ்வரூபத்தோடே வ்யாபித்திருக்கும்படியை இச்லோகத்தாலே வ்யாக்யானம் பண்ணியருளினாராய்த்து.

அதவா, விக்ரஹவ்யாப்தியை இச்லோகத்திலே ப்ரதிபாதிக்கிறதென்றுமருளிச்செய்வர். ஆகில், "யத் ப்ரஹ்மரூபம்" என்று ப்ரதமத:ஸ்வரூபத்தைச்சொல்லுவானென்னெனில்:மேல்"மூர்த்தம் ப்ரஹ்ம" என்று சொல்லுகிற திவ்யவிக்ரஹம் திவ்யாத்மஸ்வரூபத்திலும் ப்ரியதரமாயிருக்கும்படியை ப்ரகாஶிப்பிக்கைக்காக முந்துற முன்னம் ஸ்வரூபத்தை ப்ரதிபாதித்ததத்தனையென்று யோஜித்துக்கொள்வது. இந்த யோஜனையில் "ஹரே: ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் ப்ரஹ்மயத் ஸ்வரூபம், ததோऽபி தத்ப்ரியதரம் அத்யத்புதம் மூர்த்தம் ப்ரஹ்மயத் ரூபம்—யத் விக்ரஹமஸ்தி தச்ச, யதாஸுகம் விஹரதோ ஹரேரந்யாநி யாநி ஸர்வாணி ரூபாணி ஸந்தி தாநி ச, தைஸ்தைரநுரூபரூபவிபவை:—விக்ரஹவிபவை: காடோபகூடாநி—ச்லிஷ்டபரிஷ்வங்காந்யாஹு:" இத்யந்வய:

ப்ரதமயோஜனையில், "ஹரேச்ஶாந்தாநந்தமஹாவிபூதி பரமம் ப்ரஹ்ம யத் ரூப மஸ்தி, தச்ச, ததோऽபி ப்ரியதரம் அத்யத்புதம் மூர்த்தம் ப்ரஹ்ம யத் ரூபமஸ்தி, தச்ச, யதாஸுகம் விஹரதோ

ஹரேரங்யாநி யாநி ஸர்வாணி ரூபாணி ஸந்தி, தாநிச தைஸ்தைரநு ரூபரூபவிபவை:-ஸ்வரூபாதிவிபவை: காடோபகூடாந்யாஹு:" என்று ஸ்வரூபாதிகளை ப்ரத்யேகமாக ஸம்பந்தித்து யோஜித்துக்கொள்வது.

ஆக, இச்லோகத்தாலே, 343. (யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே) என்று தொடங்கி, 343. (தத் விஜிஜ்ஞாஸஸ்வ) என்றும், 344. (தஜ்ஜலாநிதி சாந்த உபாஸீத) என்றும், 345. (காரணந்து த்யேய:) என்றும், 346. (அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா) 347. (ஜந்மாத்யஸ்ய யத:) என்றும், 348. (த்யேயோ நாராயணஸ் ஸதா), 349. (த்யேயஸ்-ஸதா) என்றும் சொல்லுகிற ப்ரமாணப்ரகாரத்திலே பகவத்த்யேயத்வஹேதுவான ஜகத்காரணத்வத்தை ப்ரதிபாதிக்கிற நாராயண சப்தபர்யாயமாய், பூர்வவாக்யத்திற்படியே ஸ்வீக்ருதோபாயனுக்கு ப்ராப்திப்ரதிபந்தக ஸகலபாபநிவர்த்தகத்வஹேதுகமாய், ஸ்வேதர-ஸமஸ்தஸஹாயாநபேக்ஷோபாயத்வப்ரகாசகமாய், உத்தரவாக்யத்திற்படியே ப்ரார்த்திதப்ராப்யனுக்குப் பரமப்ராப்யமான அனுபவ கைங்கர்யாதிகளில் ஸவபோக்த்ருத்வாதிரூபவிரோதிநிவ்ருத்திக்கும் வாசகமாயிருக்கிற ஹரிசப்தத்தை ப்ரயோகித்து, தத்வாச்யனான ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபாதிகள், புருஷகாரைகலக்ஷணையாய், ப்ராப்யைகவேஷையாய், கைங்கர்யப்ரதிஸம்பந்தினியுமாய், தத்வர்த்தகையுமான பிராட்டியினுடைய ஸ்வரூபாதிகளாலே காடாச்லிஷ்டங்களாயிருக்குமென்று திவ்யதம்பதிகளுடைய நித்யயோகத்தை அருளிச்செய்கையாலே, 350. (ப்ரயத பாணி:சரணமஹம் ப்ரபத்யே), 351. (ஸ்வஸ்-திஸம்பாதேஷ்வபயம் நோऽஸ்து) என்கிற ப்ரமாண ப்ரகாரத்திலே வாக்யத்வயோக்தோபாயோபேயங்களை விசதீகரித்தருளினர் என்னுமிடம் வ்யக்தமாகிறது. 352. (விச்வம் நாராயணம் ஹரிம்) என்று ச்ருதியும் நாராயணசப்தத்தோடே ஹரிசப்தத்தை ஸஹபடித்ததிறே. 353. (வாஸுதேவம் ஜகத்யோநிம் நௌமி நாராயணம் ஹரிம்), 354. (ரக்ஷிஷ்யதி ஹரி: ஸ்ரீமாநாச்ரிதாநிதி நிச்சயாத்) என்று ஜகத்காரணத்வ வாசகமான நாராயணசப்தத்தோடே ஹரிசப்தத்தை ப்ரயோகித்தது. தத்வாச்யனோடே லக்ஷ்மீஸம்பந்தத்தையும் அனுஸந்தித்து உபாயவரணம்பண்ணி, 355. (நாராயணாய நாதாய ஹரயே ஸ்ரீமதே நம:) என்று ஸ்வபோக்த்ருத்வாதிவிரோதிநிவர்த்தகனாய், ஆர்த்திஹரணகையாலே ஹரிசப்தவாச்யனாய் ஸர்வசேஷியுமான நாராயணனும், ஸர்வஸ்வாமினியுமான பெரியபிராட்டியாருமான நித்யயோகத்தை ப்ரதிபாதித்து அனுபவகைங்கர்யாதிகளை ப்ரார்த்தித்தார்க

ளிறே பரமவைதிகரும். 356. (கதிர் கம்யச்சாஸௌ ஹரி:) என்னக் கடவதிறே. இதுதான் 112. (பகவாந் ஹரி:) என்கிறபடியே உபாய பூர்த்தியையும் உபேயபூர்த்தியையும் உடைத்தான திருநாமமிறே.

ஆக, சது:ச்லோகியாலே, 39. (ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ), 163. (விஷ்ணுபத்நீ) 19. (விஷ்ணோ: ஸ்ரீ:), 49. (தேவதேவதிவ்ய-மஹிஷீம்) இத்யாதிப்ரமாணப்ரஸித்தமான விஷ்ணுபத்நீத்வத்தையும், 163. (அஸ்யேஶாநா ஜகத:), 50. (ஈஶாநா தேவீ புவநஸ்ய) 51. (ஈச்வரீம் ஸர்வபூதாநாம்) என்கிற ப்ரமாணப்ரதிபாத்யமான உபய விபூதிஶேஷித்வத்தையும் உடையளாய், 357. (தாம் பத்மநேமிம் ஶரணமஹம் ப்ரபத்யே) என்கிறபடியே அஶரண்யஶரண்யையாய், 358. (உதாராம்) என்கிறபடியே ஸகலபுருஷார்த்தப்ரதையாய், ஸமந்வயாऽவிரோத ஸாதனபலவிஷயமான ஶாரீரகஶாஸ்த்ரசதுரத்யாயீ ஸமதிகதனான ஸர்வேச்வரனுக்கு ஸர்வப்ரகாராऽபிமதாऽநுரூபஸ்வரூபரூபகுணாதிகளை உடையளாய்க்கொண்டு தத்ஸ்வரூபாத்யவிநா-பூதையாயிருக்கையாலே, 359. (தேவஜுஷ்டாம்) என்கிற தந்நித்ய யோகத்தையும் உடையளாயிருந்துள்ள பெரியபிராட்டியாருடைய வைபவத்தை பஹுமுகமாகப் பேசி அநுபவித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் 1. (மாத்ருதேவோ பவ) என்கிற வேதாந்த வாக்யார்த்தத்தை ஸ்வாச்ரிதரான அஸ்மதாதிகளும் அறிந்து அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி உபகரித்தருளினாராய்த்து.

ஸ்தோத்ரசது:ச்லோகீ இரண்டிலும் நாலுமுண்டேயாகிலும் ஒன்றுக்கு ப்ரதமவாக்யத்திலே நோக்கு; ஒன்றுக்கு த்விதீயவாக்யத்திலே நோக்கு. 360. (ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம்। ஸ்தோத்ரயாமாஸ) என்றுகொண்டு துர்க்ரஹமான வேதாந்தார்த்தங்களை ஸுக்ரஹஸ்வாதுக்களாம்படி ஸ்தோத்ரமாகப் பண்ணியருளினார் என்கையாலும், இப்ரபந்தங்களில் ப்ரதிபாதிக்கிற அர்த்தங்களை நிரூபித்துப் பார்த்தால் அவ்வர்த்தங்களாயே இருக்கையாலும் இந்நாலு வாக்யத்தையும் இவற்றுக்கு வாக்யார்த்தமாக யோஜிக்கலாமிறே.

யத் பதாம்போஜகடிதா ப்ரணதிர் துர்லபாந்யபி।
பதாநி பரமாம் முக்திம் ஸூதே தாம் ஶ்ரீயமாச்ரயே॥

நாயனாராச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பரமகாருணிகரான நாயனாராச்சான்பிள்ளை அருளிச்செய்த
சது:ச்லோகீ வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

* சது:ச்லோகீ வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு.

1. மாத்ருதேவோ பவ। பித்ருதேவோ பவ। ஆசார்யதேவோ பவ। அதிதிதேவோ பவ॥

[அகிலஜகந்மாதாவான பிராட்டியையும், அழிவற்ற தந்தையான அச்சுதனையும், (அறியாதன அறிவித்த) ஆசாரியனையும், விருந்தாகும் பெருந்தக்கோரான வைஷ்ணவர்களையும் தெய்வமாகக் கொள்வாயாக.]

2. ஆசரதீத்யாசார்ய:

[ஆசரித்துக் (அநுஷ்டித்துக்) காட்டுமவன் ஆசாரியன்.]

3. ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாநாசாரே ஸ்தாபயத்யபி।
ஸ்வயமாசரதே யஸ்து ஸ ஆசார்ய இதி ஸ்ம்ருத:॥

[எவனொருவன் சாஸ்த்ரார்த்தங்களை (சிஷ்யர்களுக்கு) உபதேசித்து, (அவர்களை) ஸதாசாரத்தில் நிலைநிறுத்தி, தானும் ஆசரிக்கிறானோ அவனே ஆசார்யன் எனப்படுமவன்.]

4. * ஸ்தோ-ர—1.
5. ,, 2.
6. ,, 3.
7. ,, 5.
8. ,, 6.
9. ,, 20.
10. ,, 55.
11. ,, 56.
12. ,, 12.
13. ,, 39.

14. ஸமாக்ஷரைச் சதுர்ப்பிர்ய: பாதைர் கீதோ மஹாத்மநா।
ஸோऽநுவ்யாஹரணாத் பூய: ஶோக: ச்லோகத்வமாகத:॥

[யாதொரு சோகமானது ஸமமான எண்ணிக்கையுடைய அக்ஷரங்களுடன் கூடிய நான்கு பாதங்கள் கொண்டதாக அந்த மஹாத்மாவான வால்மீகியினால் பாடப்பட்டதோ; அந்த சோகம் அடிக்கடி உச்சரிப்பதால் சுலோகமாயிற்று.]

---

* ஸ்தோத்ரரத்ன ச்லோகங்களுக்கு இதில் பொழிப்புரை தரப்படவில்லை. நமது ஸ்தோத்ரரத்னப் பதவுரையிலே கண்டுகொள்வது.

---

1. தைத்-ஶீக்ஷா (11-2). 2. வ்யுத்பத்தி.

15. அஹம் ச்லோகக்ருத்

[நான் ஸ்ரீமந் நாராயணன் விஷயமாக உத்தமச்லோகங்களை இயற்றுபவன்.]

16. காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத்।
பௌலஸ்த்யவதமித்யேவ சகார சரிதவ்ரத:॥

[விரதாநுஷ்டானமுடைய அவ்வால்மீகி சீதாதேவியின் பெருங்கதையான ராமாயணம் முழுவதையும் பௌலஸ்த்யவதம் என்றே இயற்றினர்.]

17. தநுபகதஸமாஸ ஸந்தியோகம்
ஸமமதுரோபநதார்த்தவாக்யபத்தம்।
ரகுவரசரிதம் முநிப்ரணீதம்
தசசிரஸச்ச வதம் நிசாமயத்வம்॥

[தானாகவே அமைந்த ஸமாஸஸந்திச் சேர்க்கைகளை உடையதும், ஸமமாயும் மதுரமாயும் சேர்ந்திருக்கிற அர்த்தங்களுடன் கூடிய வாக்கியங்கள் இணைக்கப்பெற்றதும், வால்மீகி முனிவரால் இயற்றப்பட்டதும் ரகுவரசரிதம் என்றும், ராவணவதம் என்றும் பெயர்பெற்றதுமான கதையைக் கேட்கச்செய்யுங்கள்.]

18. அச்வபூர்வாம் ரதமத்யாம் ஹஸ்திநாதப்ரபோதிநீம்।
ச்ரியம் தேவீமுபஹ்வயே ஸ்ரீர் மா தேவீ ஜுஷதாம்॥

[ஸர்வவ்யாபியான பகவானை முன்னிட்டிருப்பவளும், (சரீரமாகிற) (அல்லது ஓங்காரமாகிற) ரதத்தின் நடுவிலிருப்பவளும், கஜங்களின் நாதத்தாலே திருப்பள்ளியுணருமவளுமான ஸ்ரீதேவியை அருகிலழைக்கிறேன். என்விஷயத்தில் பிராட்டி பிரீதியடையட்டும்.]

19. நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ।
யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம॥

[ஜகந்மாதாவாய், விஷ்ணுவுக்குச் செல்வமாயிருப்பவளாய், இறையும் அகலகில்லாதவளான இந்தப் பிராட்டி நித்யையே. ப்ராஹ்மணோத்தமரே! எப்படி பகவான் ஸர்வவ்யாபியாயிருக்கிறானோ, அப்படியே இவளும் ஸர்வவ்யாபினியாயிருக்கிறாள்.]

---

14. ரா-பா (2-40) 15. தை-ப்ருகு (10-6) 16. ரா-பா (4-7) 17. ரா. பா. (2-44) 18. ஸ்ரீஸூக்தம்-3. 19. வி. பு. (1-8-17)

20. தமஸ: பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர: ।
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீரஜய்ய: ஶாஶ்வதோ த்ருவ: ॥

[(இந்த ராமபிரானே) தமஸ்ஸுக்கு மேற்பட்டவனாய், ஸர்வதாரகனாய், சங்கசக்ரகதாதரனாய், ஸ்ரீவத்ஸமென்னும் மருவைத்திருமார்பிலேயுடையவனாய், எப்போதும் ஸ்ரீதேவியுடன் கூடியவனாய், ஜயிக்கப்படாதவனாய், நித்யனாய், நிலையானவனான நாராயணன்.]

21. ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்

[பரமபுருஷன் முடிகளாயிரத்தையும், கண்களாயிரத்தையும் தாள்களாயிரத்தையுமுடையவன்.]

22. யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித்
யஸ்மாந் நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஶ்சித் ।
வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ்
தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் ॥

[எவனைக்காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லையோ, எவனைக் காட்டிலும் சிறியதும் பெரியதும் ஒன்றில்லையோ, எவனொருவன் பரமபதத்தில் ஒப்பற்றவனாய், வணங்காத வ்ருக்ஷம்போல் எழுந்தருளியிருக்கின்றானோ, அந்தப் புருஷனாலே இது அனைத்தும் நிறைந்துள்ளது.]

23. வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ।
தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி
நாந்ய: பந்தா அயநாய வித்யதே ॥

[(வேதபுருஷனாகிற) நான் (ஸ்வரூபரூபகுணவிபூதிகளில்) பெரியவனும், ஸூர்யன்போல் பிரகாசிப்பவனும், ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான இந்தப் புருஷனை அறிகிறேன். அவனை இம்மாதிரி அறிபவன் இங்கேயே முக்தனாக ஆகிறான். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை.]

24. புருஷ ஏவேதம் ஸர்வம் யத் பூதம் யச்ச பவ்யம்

[கழிந்தவையும், (இருப்பவையும்), இனி வருமவையுமாகிய எல்லாம் புருஷனே.]

---

20. ரா-யு (114-15) 21. புருஷஸூக்தம் (1-1) 22. முண்டக (1-1-7) தை-நா (10-20) ச்வேதா (3-9) 23. புருஷஸூக்தம் (2-2)
24. புருஷஸூக்தம் (1-2)

25. ஸ யச்சாயம் புருஷே। யச்சாஸாவாதித்யே। ஸ ஏக:॥

[யாவனொரு பரமாத்மா இந்த ஜீவனிடமிருக்கிறானோ, எவனொருவன் ஆதித்யனுள்ளிருக்கிறானோ, அவன் ஒருவனே.]

26. ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே
ஹிரண்ய ச்மச்ருர் ஹிரண்யகேச ஆப்ரணகாத் ஸர்வ
ஏவ ஸுவர்ண:। தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ॥"

[ஸூர்யனுக்கு நடுவில் ஸுவர்ணம்போல் அழகிய உருவையுடைய எந்த இந்தப் பரமபுருஷன் காணப்படுகிறானோ, அவன் ஸுவர்ணம் போன்று அழகான மீசையையும், கேசங்களையும், எல்லா அவயவங்களையும் உடையவன். அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரை போன்று இரு கண்கள் உள.]

27. ஜிதந்தே புண்டரீகாக்ஷ! நமஸ்தே விச்வபாவந!।
நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேச மஹாபுருஷ! பூர்வஜ!॥

[செந்தாமரைக்கண்ணா! உன்னால் (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப்பட்டது. (இது) என்னுடையதல்லவே; உன்னுடையதாயிற்றே; உலகையெல்லாம் உண்டாக்கினவனே! இந்திரியங்களை நியமிப்பவனே! கொடுப்பதில் சிறந்த மஹாபுருஷனே! முற்பாடனாய்ப் பிறப்பவனே! (இவ்வாத்மவஸ்து) எனக்காகை தவிர்ந்து உனக்கேயாகவேணும்.]

28. யோ மாமேவமஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம்।
ஸ ஸர்வவித் பஜதி மாம் ஸர்வபாவேந பாரத॥

[அர்ஜுந! எவனொருவன் புருஷோத்தமனான என்னை, மயக்கமற்றவனாய் அறிகிறானோ, அவன் எல்லாமறிந்தவன்; எல்லாவிதத்தாலும் அவன் என்னை பஜனம் செய்கிறான்.]

29. புருஷ: புண்டரீகாக்ஷ ஸம்ஜ்ஞக:

[புண்டரீகாக்ஷன் என்னும் பெயரையுடையவன் பரமபுருஷன்.]

30. ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே।
ஸமர்த்தோ த்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தமம்॥

[செல்வங்களைச் சேர்த்துக்கொடுப்பதிலும், ஆபத்துகளை அடியோடு போக்குவதிலும் ஸமர்த்தனாயிருப்பவன் அந்தப் புருஷோத்தமனைத் தவிர வேறொருவனும் காணப்படுகிறதில்லை.]

---

25. தை-ப்ருகு (10-4) 26. சாந்தோ (1-6-7). 27. ஜிதந்தே (1-1).
28. கீதை (15-19). 30. பரமஸம்ஹிதை.

31.&33. த்வாவிமௌ புருஷௌ லோகே க்ஷரச்சாக்ஷர ஏவ ச ।
க்ஷரஸ் ஸர்வாணி பூதாநி கூடஸ்தோऽக்ஷர உச்யதே ॥
உத்தம: புருஷஸ் த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: ।
யோ லோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வர: ॥
யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: ।
அதோऽஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: ॥

[க்ஷரன் என்றும், அக்ஷரன் என்றும் லோகத்தில் புருஷர்கள் இருவிதமானவர்கள்; எல்லா பூதங்களும் க்ஷரனாகும்; கூடஸ்தனான முக்தாத்மா அக்ஷரனெனப்படுகிறான். எவனொருவன் மூவுலகங்களிலும் நுழைந்து (அவற்றை) தரிப்பவனாகவும், குறைவற்றவனாகவும், நியமிப்பவனாகவும், பரமாத்மாவென்று சொல்லப்படுபவனாகவும் விளங்குகிறானோ அந்தப் புருஷோத்தமன் (முன் சொல்லப்பட்ட புருஷர்களைக்காட்டிலும்) வேறுபட்டவன். நான் ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகளுள்ள க்ஷரபுருஷனை அதிக்ரமித்திருப்பதாலும், ஞானத்தில் ஏற்றத்தாழ்வுகளற்ற முக்தபுருஷனைக்காட்டிலும் மேலானவனாயிருப்பதாலும், ச்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் புருஷோத்தமனென்று பிரவஸித்திபெற்றிருக்கிறேன்.]

32. உபசாராபதேசேந க்ருதாநஹரஹர் மயா ।
அபசாராநிமாந் ஸர்வாந் க்ஷமஸ்வ புருஷோத்தம ॥

[புருஷோத்தமனே! உபசாரம் என்னும் பெயரால் என்னால் தினந்தோறும் செய்யப்படும் இவ்வபசாரங்களெல்லாவற்றையும் க்ஷமித்தருள்வாயாக.]

34. ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம் வா
கஸ்மைசிதஞ்ஜலிபரம் வஹதே விதீர்ய ।
அஸ்மை ந கிஞ்சிதுசிதம் க்ருதமித்யதாம்ப
த்வம் லஜ்ஜஸே கதய கோऽயமுதாரபாவ: ॥"

[தாயே! ஐச்வர்யம், கைவல்யம், பரமபதம் ஆகிய இவற்றை ஒரு அஞ்சலிச்சுமையைச் சுமப்பவனுக்குக் கொடுத்து 'இவனுக்குத் தகுந்ததொன்றும் செய்யப்பெற்றிலோமே' என்று நீ வெட்கப்படுகிறாய். ஈதென்ன வண்மை! நீயே சொல்வாயாக.]

35. பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களாநாஞ்ச மங்களம் ।
தைவதம் தேவதாநாஞ்ச பூதாநாம் யோऽவ்யய: பிதா ॥

31&33. கீதை (15-16, 17, 18). 32. ஜிதந்தே (1-20). 34. ஸ்ரீகுண-59. 35. ஸஹஸ்ரநாமாத்யாயம்.

[எந்த பகவான் பவித்திரங்களுள் பவித்திரனாயிருக்கிறானோ, மங்களங்களுள் மங்களமாயிருக்கிறானோ, தேவதைகளுக்கும் தேவதையாயிருக்கிறானோ, எவனொருவன் ஜீவராசிகளுக்கெல்லாம் அழிவற்ற தந்தையாயிருக்கின்றானோ....]

36. ஸ ஹி தேவரஸம்யுக்தோ மம பர்த்தா மஹாத்யுதி: ।
நிர்ப்பயோ வீர்யமாச்ரித்ய ஶூன்யே வஸதி தண்டகே ॥

[மைத்துனனான லக்ஷ்மணனுடன் கூடியவராய், பரஞ்சோதியான என்னுடைய நாதன், வீரியத்தைத் துணைகொண்டு, பயமற்றவராய் சூன்யமான தண்டகவனத்தில் வஸிக்கிறார்.]

37. யதா த்ருப்தச்ச மாதங்க: ஶஶச்ச ஸஹிதோ வநே ।
ததா த்விரதவத் ராமஸ் த்வம் நீசஶஶவத் ஸ்ம்ருத: ॥

[ஒரு காட்டில் மதிப்புடன் கூடிய யானையும், நரியும் சேர்ந்திருந்தாலெப்படியோ அப்படியே, யானைபோன்றவர் ராமபிரான்; நீ ஒரு நரியைப்போன்றவன்.]

38. துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் ।
ராகவோऽர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணா ॥

[ஒத்த குணம், வயஸ், நடத்தைகளை உடையவளும், ஒத்த குலம் அழகுகளுடன் கூடியவளுமான வைதேஹிக்கு ராமனே தகுந்தவர், அவருக்கும் கறுத்த கண்களையுடைய இவளே தகுந்தவள்.]

39. ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ

[பரமபுருஷனே! உனக்கு ஸ்ரீபூதேவிகள் பத்னிகள்.]

40. ஶ்ரிய:பதி:

[லக்ஷ்மீநாதன்]

41. ஆகாரத்ரயஸம்பந்நாமரவிந்த நிவாஸிநீம் ।
அஶேஷஜகதீஶித்ரீம் வந்தே வரதவல்லபாம் ॥

[ஶேஷித்வ புருஷகாரத்வ ப்ராப்யத்வங்களாகிற மூன்று ஆகாரங்களை உடையவளும், தாமரையில் வஸிப்பவளும், எல்லாவுலகுக்கும் ஈச்வரியாயிருப்பவளும், வரதனுக்குப் பிரியையுமான தேவியை வணங்குகிறேன்.]

---

36. ரா-ஆ (56-14) 37. ரா-ஸு (22-16) 38. ரா-ஸு (16-5) 39. புருஷஸூக்தம் (2-5) 40. கீதாபாஷ்யப்ரவேசம். 41.

42. ஐச்வர்யம் மஹாதேவ வாऽல்பமதவா த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணாத் தவ யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே।
தேநைதேந ந விஸ்மயேமஹி ஜகந்நாதோऽபி நாராயணோ
தந்யம் மந்யத ஈக்ஷணாத் தவ யதஸ் ஸ்வாத்மாநமாத்மேச்வர:

[சிறியதும் பெரியதுமான யாதொரு செல்வம் இவ்வுலகினரிடம் காணப்படுகிறதோ, அது ஸ்ரீதேவியான உன் கடாக்ஷத்தினாலேயே எங்கும் விளங்குகிறது. இதில் ஆச்சரியப்படுவோமல்லோம்; (ஏனெனில்;) ஜகந்நாதனாய், தனக்குத்தானே ஈச்வரனான நாராயணனும் உன்னுடைய கடாக்ஷத்தினால் தன்னை பாக்யசாலியாய் நினைக்கிறானன்றோ.]

43. ஸ்ரீநிவாஸ சப்தேந பாசுபதாதிவ்யுதாஸ:
["ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" [ஸ்ரீபாஷ்யம்] என்றவிடத்திலுள்ள ஸ்ரீநிவாஸசப்தத்தினால் பாசுபதர் முதலானோர் தள்ளப்படுகின்றனர்.]

44. தயா ஸ ராஜர்ஷிஸுதோऽபிராமயா
ஸமேயிவாநுத்தமராஜகந்யயா ।
அதீவ ராம: சுசுபேऽதிகாமயா
விபு: ச்ரியா விஷ்ணுரிவாமரேச்வர: ॥

[அழகியவளாய், உத்தம ராஜபுத்திரியான அந்த ஸீதையுடன் கூடிய ராஜரிஷிபுத்ரனான ராமபிரான், மிகவும் விரும்பத்தக்க ஸ்ரீதேவியுடன் கூடிய அமரர்களதிபதியான விஷ்ணுபகவானைப்போல் மிகவும் விளங்கினான்.]

45. ச்ரத்தயா தேவோ தேவத்வமச்நுதே
[தேவனுகிற பகவான் ச்ரத்தாசப்தவாச்யையான பிராட்டியாலேயே தேவனாயிருக்கும் தன்மையை அடைகிறான்.]

46. ச்ருணாதி நிகிலாந் தோஷாந் ச்ருணாதி ச குணைர் ஜகத் ।
ச்ரீயதே சாகிலைர் நித்யம் ச்ரயதே ச பரம் பதம் ॥
ச்ரயந்தீம் ச்ரீயமாணாஞ்ச ச்ருண்வதீம் ச்ருணதீமபி ॥

[ஆச்ரிதர்களுடைய தோஷங்களைப் போக்குகிறாள்; (அவர்களுடைய) அத்வேஷம், ஆபிமுக்யம் முதலான குணங்களைப் பெருக்குகிறாள்; அடியார்களாலே தினந்தோறும் ஆச்ரயிக்கப்படுகிறாள்; பரமப்ராப்யனான பகவானை ஆச்ரயித்திருக்கிறாள்; அடியாருடைய கூக்குரலைக்

42. ஸ்ரீஸ்தவம்-6. 43. ச்ருதப்ரகாசிகை. 44. ரா-பா (77-30)
45. யஜு-கா (3-3) 46. பாஞ்சராத்ரம்.

கேட்கிருள்; அவற்றை எம்பெருமானைக் கேட்பிக்கிருள். (ஆகை யாலே பிராட்டி "ஸ்ரீ:" எனப்படுகிருள்.)]

47. பிதேவ த்வத்ப்ரேயாந் ஜநநி பரிபூர்ணாகஸி ஜநே
ஹிதஸ்ரோதோவ்ருத்த்யா பவதி ச கதாசித் கலுஷதீ: ।
கிமேதந் நிர்த்தோஷ: க இஹ ஜகதீதி த்வமுசிதை-
ருபாயைர் விஸ்மார்ய ஸ்வஜநயஸி மாதா ததஸி ந: ॥

[தாயே! உன் அன்பன் தந்தையைப்போல் நன்மைகளை விளைவிப்பதற்காக, பாபம் நிறைந்த ஜீவனிடத்தில் சில சமயங்களில் கோபங்கொள்ளுகிருன். "ஈதென்ன? இவ்வுலகில் பாபம் செய்யாதவன் எவனிருக்கிருன்" என்று சொல்லி உசிதமான உபாயங்களால் (எங்களுடைய பாபங்களை) மறக்கச்செய்து அடியில் சேர்ப்பிக்கிருய்; ஆகையாலே நீ எங்களுக்குத் தாயாகிருய்.]

48. மச்சேஷபூதா ஸர்வேஷாமீச்வரீ மம வல்லபா

[(ஸ்ரீதேவி) எனக்கு சேஷபூதையாயிருப்பவள்; மற்ற எல்லாருக்கும் ஈச்வரியாயிருப்பவள்; எனக்குப் பிரியையாயிருப்பவ.]

49. பகவந் நாராயணாமபிதாநுரூப ஸ்வரூபரூபகுணவிபவைச்வர்ய
ஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுணகணாம்
பத்மவநாலயாம் பகவதீம்
ஶ்ரியம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவதிவ்யமஹிஷீம்
அகிலஜகந்மாதரம் அஸ்மந்மாதரம் அஶரண்யஶரண்யாம்
அநந்யஶரண: ஶரணமஹம் ப்ரபத்யே ॥

[பகவானான நாராயணனுக்கு இஷ்டமாகவும், தகுந்ததாகவுமுள்ள ஸ்வரூபம், ரூபம், (ரூப) குணம், விபூதி, ஐச்வர்யம், சீலம் முதலான எல்லையற்ற மேன்மையையுடையவையும், கணக்கற்றவையுமான கல்யாணகுணகணங்கள், இவற்றை உடையவளும், பத்மவனத்தை இருப்பிடமாக உடையவளும், பூஜிக்கத்தக்கவளும், எப்போதும் (எம்பெருமானை விட்டு) அகலகில்லாதவளும், தோஷமற்றவளும், தேவதேவனை எம்பெருமானுடைய திவ்யமஹிஷியும், எல்லாவுலகிற்கும் தாயாயிருப்பவளும், (விசேஷமாக) எனக்குத் தாயாயிருப்பவளும், கதியற்றவர்களுக்கு கதியாயிருப்பவளுமான ஸ்ரீதேவியை, (வேறொரு) கதியற்ற அடியேன் சரணமடைகிறேன்.]

47. ஸ்ரீகுண-47. 48. பாஞ்சராத்ரம். 49. சரணாகதிகத்யம்-1.

50. ஈஶாநா தேவீ புவநஸ்யாதிபத்நீ

[உலகிற்கு ஈச்வரியாகவும், ஸர்வாதிகனுக்குப் பத்னியாகவு மிருப்பவள்.]

51. ஈச்வரீம் ஸர்வபூதாநாம் த்வாமிஹோபஹ்வயே ஶ்ரியம்

[ஸர்வபூதங்களுக்கும் ஈச்வரியாய் ஸ்ரீதேவியான உன்னை இங்கு வரும்படி அழைக்கின்றேன்.]

52. அகாரேணோச்யதே விஷ்ணுஸ் ஸர்வலோகேச்வரோ ஹரி: ।
உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீருகாரேணோச்யதே ஸதா ॥
மகாரஸ்து தயோர் தாஸ இதி ப்ரணவலக்ஷணம் ॥

[ஸர்வலோகங்களுக்கும் ஈச்வரனும் ஹரியென்றும், விஷ்ணுவென்றும் சொல்லப்படுபவனுமான எம்பெருமான் அகாரத்தினால் சொல்லப்படுகிறான். விஷ்ணுவினால் (மார்பில்) எப்போதும் தரிக்கப்பட்டிருப்பவளான லக்ஷ்மி உகாரத்தினால் சொல்லப்படுகிறாள். அவர்களுக்கு மகாரவாச்யனான ஜீவன் தாஸன் என்பதே ப்ரணவத்தின் பொருள்.]

53. அஸ்யா மம ச ஶேஷா ஹி விபூதிருபயாத்மிகா

[உபயவிபூதியும் இவளுக்கும் எனக்கும் ஶேஷமாயிருக்கும்.]

54. அநந்ததா பவதி

[முக்தாத்மா கணக்கற்ற ஶரீரங்களை எடுக்கிறான்.]

55. ஸ்தோ-ர-40.

56. ஏவம்வித் பாதேநாத்யாரோஹதி

[இப்படியறிபவன் பகவானுடைய படுக்கையின்மேல் அடியிட்டேறுகிறான்.]

57. ஆஸ்தே பாதாளமூலஸ்த: ஶேஷோऽஶேஷஸுரார்ச்சித: ।
தஸ்ய வீர்யம் ப்ரபாவஞ்ச ஸ்வரூபம் ரூபமேவ ச ॥
ந ஹி வர்ணயிதும் ஶக்யம் ஜ்ஞாதும் வா த்ரிதஶைரபி ॥

[எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்படும் சேஷன் பாதாளத்தினடியில் எழுந்தருளியிருக்கிறார். அவருடைய வீரியம், பெருமை, ஸ்வரூபம், ரூபம் ஆகியவைகளை தேவர்களாலும் வருணிக்கவோ அறியவோ முடியாது.]

---

50. யஜு-காட(3-3) 51. ஸ்ரீஸூக்தம்-9. 52. ச்ருதி 53. பாஞ்சராத்ரம்
54. ச்ருதி 56. கௌஷீதகி (1-51) 57. வி-பு (2-5-21)

58. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரத: ஸ்வபதச்ச தே ॥

[நீர் பிராட்டியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும், தூங்கும்போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்.]

59. கிம் சைநாம் ப்ரதிவக்ஷ்யாமி க்ருத்வா விப்ரியமீத்ருஶம் ।
யதா யதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவ ச ॥
பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச் சோபதிஷ்டதி ॥

[கௌஸல்யை தாஸியைப்போலும், ஸகியைப்போலும், மனைவியைப் போலும், ஸஹோதரியைப்போலும், தாயைப்போலும், சுச்ரூஷை செய்யும்போதெல்லாம் இப்படிப்பட்ட அநிஷ்டமான காரியத்தைச் செய்துவிட்டு அவளுக்கு என்ன பதில் சொல்லுவேன்?]

60. புநச்ச பத்மா ஸம்பூதா ஆதித்யோऽபூத் யதா ஹரி: ॥
யதா து பார்க்கவோ ராமஸ் ததாஸீத் தரணீ த்வியம் ॥
ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ ॥
தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ ।
விஷ்ணோர் தேஹாநுரூபாம் வை கரோத்யேஷாऽऽத்மநஸ் தநும் ॥

[பகவான் ஆதித்யனாய் அவதரித்தபோது பிராட்டி பத்மையானாள்; பரசுராமனானபோது தரணியானாள்; ராகவனானபோது சீதையாகவும், க்ருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாகவும் ஆனாள். மற்ற அவதாரங்களிலும் இவள் பகவானைப் பிரியாதவளாயிருக்கிறாள். அவன் தேவனாயவதரிக்கும்போது இவளும் தேவதேஹமெடுக்கிறாள்; மநுஷ்யனாகும் போது இவளும் மனுஷ்யையாகிறாள். விஷ்ணுவின் தேஹத்திற்குத் தகுந்ததாகத் தன் தேஹத்தை அமைத்துக்கொள்ளுகிறாள் இப்பிராட்டி.]

61. ஸ ப்ராதுச் சரணௌ காடம் நிபீட்ய ரகுநந்தந: ।
ஸீதாமுவாசாதியஶா ராகவஞ்ச மஹாவ்ரதம் ॥

[ரகுநந்தனனாய், பெருங்கீர்த்தியினனான லக்ஷ்மணன் தமையனின் பாதங்களை நெருக்கிப் பிடித்துக்கொண்டு, பிராட்டியையும், (ஆச்ரித ரக்ஷணமாகிய) பெரிய விரதத்தையுடைய பெருமானையும் பார்த்துச் சொன்னான்.]

58. ரா-அ (31-25) 59. ரா-அ (12-68) 60. வி-பு (1-9-143, 144, 145)
61. ரா-அ (31-2)

61(a). ஸ்தோ-ர-46.

62. ஸ்தோ-ர-38&39.

63. அநந்தபோகிநி, ஸ்ரீமத் வைகுண்டைச்வர்யாதிதிவ்யலோகம்
ஆத்மகாந்த்யா விச்வமாப்யாயயந்த்யா ஶேஷஶேஷாஶநாதிகம்
ஸர்வம் பரிஜநம் பகவதஸ் தத்ததவஸ்தோசித பரிசர்யாயாம்
ஆஜ்ஞாபயந்த்யா ஶீலரூபகுணவிலாஸாதிபிராத்மாநுரூபயா
ஸ்ரியா ஸஹாஸீநம்

[ஸ்ரீமத் வைகுண்டநகரம் முதலான திவ்யலோகங்களெல்லாவற்றையும், தன் காந்தியால் போஷிப்பவளாய், ஶேஷன், விஷ்வக்ஸேனர் முதலான பரிஜனங்களெவரையும், அந்தவந்தந்த நிலைகளுக்குத் தகுந்த கைங்கரியத்தில் ஆஜ்ஞையிடுபவளாய், ஶீலரூபகுண விலாஸாதிகளாலே தன்னையொத்தவளான ஸ்ரீதேவியுடன் திருவனந்தாழ்வான் மடியில் எழுந்தருளியிருப்பவனை....]

64. ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேஶயமாச்ரயே।
சிந்தாமணிமிவோத்வாந்தமுத்ஸங்கேऽநந்தபோகிந:॥

[திருவனந்தாழ்வான் மடியிலே கக்கப்பட்ட மாணிக்கம்போலும், பிராட்டியின் திருமுலைத்தடங்களுக்கு ஆபரணம்போலுமிருக்கும் ஸ்ரீரங்கநாதனென தேஜஸ்ஸை ஆச்ரயிக்கிறேன்.]

65. போகப்ரியா போகவதீ போகீந்த்ரஶயநாஸநா

[போகப்ரியை; போகவதி; போகீந்த்ரனை ஆதிஶேஷனைப் படுக்கையாகவும், ஆஸனமாகவும் கொண்டவள்.]

66. அகிலபுவந ஜந்மஸ்தேமபங்காதிலீலே
விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே।
ச்ருதிஶிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்திரூபா॥

[எல்லா உலகையும் படைத்து அளித்து அழிப்பதை விளையாட்டாகக் கொண்டவனும், விசேஷமாய் வணங்கிய பல பூதஸமூஹங்களை ரக்ஷிப்பதையே விரதமாகக்கொண்டவனும், வேதாந்தத்தில் விளங்குமவனுமான ஸ்ரீநிவாஸனென ப்ரஹ்மத்தினிடத்தில் பக்திரூபமான ஞானம் எனக்கு உண்டாகட்டும்.]

---

63. ஸ்ரீவைகுண்டகத்யம். 64. ர-ஸ்த (1-8)
65. ப்ராஹ்மம்:ஸ்ரீஸஹஸ்ரநாமம்-120. 66. ஸ்ரீபாஷ்யம்.

67. ஶ்ரிய:காந்தோऽநந்தோ வரகுணகணைகாஸ்பதவபு:
ஹதாஶேஷாவத்ய: பரமகபதோ வாங்மநஸயோ:।
அபூமிர் பூமிர்யோ நதஜநத்ருஶாமாதிபுருஷோ
மநஸ் தத்பாதாப்ஜே பரிசரணஸக்தம் பவது மே॥

[ஸ்ரிய:பதியாய், சிறந்த கல்யாணகுணங்களுக்கு ஓரே இருப்பிடமான சரீரத்தையுடையவனாய், குற்றமொன்றுமற்றவனாய், பரமபதநிலயனாய், வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாதவனாய், அடியார்களின் கண்ணுக்கு இலக்காமவனாய், ஆதிபுருஷனான அநந்தனுடைய திருவடித்தாமரைகளில் கைங்கர்யம் செய்வதற்கு என் மனம் ஆசை கொள்ளட்டும்.]

68. த்ரிவ்ருத் தே ஶிரோ காயத்ரம் சக்ஷு: ஸ்தோம ஆத்மா ஸாம தே தநூர் வாமதேவ்யம் ப்ருஹத் ரதந்தரே பக்ஷௌ யஜ்ஞா யஜ்ஞியம் புச்சம் சந்தாம்ஸ்யங்காநி திஷ்ணியா: ஶபா யஜூம்ஷி நாம।

[வேதத்தின் பல பாகங்களை கருடனுடைய பல அவயவங்களாகக் கூறுவது இந்த மந்த்ரம்.]

69. ஸ்தோ-ர-41.

70. ஸத்யஸ் ஸுபர்ணோ கருடஸ் தார்க்ஷ்யஸ்து விஹகேச்வர:

[ஸத்யன், ஸுபர்ணன், கருடன், தார்க்ஷ்யன், விஹகேச்வரன் (என்னும் ஐந்தும் பெரியதிருவடியின் வ்யூஹரூபங்கள்.)]

71. ஸ்தோ-ர-41.

72. கருடா கருடாऽऽஸநா

[கருடை என்னும் பெயரையுடையவள்; கருடனை ஆஸனமாக உடையவள்.]

73. ஸ்தோ-ர-42.

74. ,, 43.

75. ஸ்வாபிமத நித்ய நிரவத்யாநுரூப ஸ்வரூபரூபகுண விபவைச்வர்ய ஶீலாத்யநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகண ஸ்ரீவல்லப! ஏவம்பூத பூமிநீளாநாயக! ஸ்வச்சந்தாநுவர்த்திஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதாऽஶேஷஶேஷதைகரதிரூப நித்ய நிரவத்ய நிரதிஶய ஜ்ஞாநக்ரியைச்வர்யாத்யநந்தகல்யாண குணகண ஶேஷஶேஷாஶந ப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகள!

---

67. வேதாந்ததீபம். 68. தை-யஜுஸ்ஸம்ஹிதை (4-1-42)
70. ஸாத்வதம். 72. ஸ்ரீஸஹஸ்ரநாமம்-100. 75. ஶரணாகதிகத்யம்-5.

[தனக்குப் பிரியமாயும், நித்யமாயும், தோஷமற்றதாயும், தகுந்ததாயு முள்ள, ஸ்வரூபம், ரூபம், (ரூப) குணம், செல்வம், ஐச்வர்யம் சீலம் முதலான எல்லையற்ற மேன்மையையுடையகணக்கற்ற கல்யாணகுணங்கள் ஆகியவற்றையுடைய பெரியபிராட்டியாருக்குப் பிரியனுயிருப்பவனே! இம்மாதிரியான பூமிநீளைகளுக்கு நாயகனுயிருப்பவனே! தன் திரு வுள்ளத்தை அநுஸரித்திருக்கும் ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திபேதங் களையுடையவர்களும், எல்லா அடிமைகளையும் செய்வதிலேயே விருப்ப முடையவர்களும், நித்யரும், தோஷமற்றவரும், சிறந்த ஜ்ஞானம், ஶக்தி, ஐச்வர்யம் முதலான அநந்தகல்யாணகுணஸமூஹங்களையுடை யருமான ஶேஷன், விஷ்வக்ஸேனர் முதலான பலவிதமான கணக்கற்ற தாஸதாஸிகள் கிஞ்சித்கரிக்கப்பெற்ற திருவடியிணைகளை உடையவனே!]

78. கதே புரோஹிதே ராம: ஸ்நாதோ நியதமாநஸ: ।
ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் ॥

[புரோஹிதர் சென்றவுடன் ராமன், குளித்து மனத்தை அடக்கி, பரந்த கண்களையுடைய பத்நியுடன் கூடியவனுய், நாராயணனை (ஆரா தனம் செய்ய) அடைந்தான்.]

79. ஸைந்யதுரீண ப்ராணஸஹாயாம்
ஸூத்ரவதீமாஶ்ரியமம்பாம் ।
ஸ்ரீபதலாக்ஷாலாஞ்சிதஸேவா
ப்ரோதலஸத்தோர்வல்லிவிலாஸாம் ॥

[பெரியபிராட்டியாருடைய திருவடியிலேயிட்ட செம்பஞ்சுக்குழம்பி ஞல் அடையாளமிடப்பெற்றதாய், கைங்கரியோபயோகியான திரு வொற்றுவாடையினுல் விளங்காநிற்பதான கொடிபோன்ற கையின் அழகையுடையவளும், ஸேனைமுதலியாரின் பிரியபத்தினியுமான ஸூத்ரவதியென்னும் தாயை ஆச்ரயித்தேன்.]

80. தார்க்ஷ்யபக்ஷதிவதஸ்ய வல்லபாம் ருத்ரயா ஸஹ
ஸுகீர்த்திமர்ச்சயே ।
ஹர்ஷபாஷ்பமபி கீர்த்திமர்த்திநாம் யந்முகே௩ கமலா கடாக்ஷயேத் ॥

[பெரியபிராட்டியார், அபேக்ஷகர்களுக்கு ஆநந்தக்கண்ணீரையும், கீர்த்தியையும் எந்த கருடபத்னிகள் மூலமாகக் கடாக்ஷித்து உண்டாக்

78. ரா-அ (6-1) 79. ர-ஸ்த-51 80. ர-ஸ்த-54

குவரோ, பெரிய திருவடியின் பக்ஷமூலம்போல் இந்தப் பெரியதிருவடிக்குப் பிரியையான ஸுகீர்த்தியென்பவளை ருத்ரையென்பவளோடு கூடப் பூஜிக்கிறேன்.]

81. வைகுண்டே து பரே லோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: ।
உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: ॥

[வைகுண்டமாகிற மேலான உலகத்தில் ஸ்ரீதேவியுடன் கூடிய பகவான் பூமிநீளைகளிருவராலும் ஸேவிக்கப்பட்டு விளங்குகிறான்.]

82. அஹம் ஶிஷ்யா ச தாஸீ ச பக்தா ச த்வயி மாதவ

[ஸ்ரீமந் நாராயணனே! (பூமியாகிய) நான் உன்னிடத்தில் ஶிஷ்யை யாகவும், தாஸியாகவும், பக்தையாகவுமிருப்பவள்.]

83. உத்புல்லபங்கஜதடாகமிவோபயாமி
ஸ்ரீரங்கராஜமிஹ தக்ஷிணஸவ்யஸீம்நோ: ।
லக்ஷ்மீம் விஹாரரஸிகாமிவ ராஜஹம்ஸீம்
சாயாமிவாப்யுதயிநீமவநீம் ச தஸ்யா: ॥

[இந்த கர்ப்பக்ருஹத்தில் மலர்ந்த தாமரைமலர்களையுடைய பொய்கை போன்றுள்ள ஸ்ரீரங்கநாதனை ஆச்ரயிக்கக்கடவேன். வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் விளையாடுகிற அன்னப்பேடைபோன்றுள்ள பெரியபிராட்டியாரையும், மேன்மேலும் வளர்கின்றதான அவளுடைய நிழல்போலிருக்கும் பூமிப்பிராட்டியையும் அடையக்கடவேன்.]

84. அஜாமேகாம் லோஹித ஶுக்லக்ருஷ்ணாம்
பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸரூபாம் ।
அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோऽநுஶேதே
ஜஹாத்யேநாம் புக்தபோகாமஜோऽந்ய: ॥

[சிவப்பு (ராஜஸம்), வெளுப்பு (ஸத்வம்), கறுப்பு (தாமஸம்) நிறங்களுடன் (குணங்களுடன்) கூடியதாய், தன்போன்ற பல பிரஜைகளை ஸ்ருஷ்டிப்பதாய், பிறப்பற்றதான ப்ரக்ருதியாகிற ஒரு ஸ்த்ரீயை பிறப்பற்றவனாகிற ஒரு (ஸம்ஸாரி) ஜீவன் பிரீதியுடன் புஜிக்கிறான். இவளை புஜித்த மற்றொரு (முமுக்ஷு) ஜீவன் இவளை விட்டுச் செல்லுகிறான்.]

85. அநாத்மந்யாத்மபுத்திர் யா சாஸ்வே ஸ்வமிதி யா மதி: ।
ஸம்ஸாரதருஸம்பூதிபீஜமேதத் த்விதா ஸ்திதம் ॥

---

82. வராஹபுராணம். 83. ர-ஸ்த (63) 84. தை-நா (10-5)
85. வி. பு. (6-7-11)

[ஆத்மாவல்லாத தேஹத்தில் ஆத்மா என்னும் புத்தியும், தனதல்லாத வஸ்துவில் தன்னுடையது என்னும் புத்தியும் ஸம்ஸாரமாகிய (விஷ) வ்ருக்ஷத்தின் விருத்திக்கு இருவகையாயிருக்கும் விதையாகும்]

86. பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் ஸ்வவிஷயா-
யாஶ்ச போக்யபுத்தேர் ஜநநீம்....மாம் தாரய ||

[பகவத்ஸ்வரூபத்தை மறைப்பதும், விபரீதஜ்ஞானத்தை உண்டாக்குவதும், தன் விஷயமாக போக்ய புத்தியை விளைப்பதுமான ப்ரக்ருதியிலிருந்து என்னைத் தாண்டுவிப்பாயாக.]

87. அநாதிமாயயா ஸுப்தோ யதா ஜீவ: ப்ரபுத்த்யதே

[அநாதிமாயையாகிற ப்ரக்ருதியாலே (கட்டுண்டு) உறங்குகிற ஜீவன் எப்போது உணர்கின்றானோ....]

88. மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயிநம் து மஹேச்வரம்

[ப்ரக்ருதியை ஆச்சரியமான ஸ்ருஷ்டிக்கு ஹேதுவாயிருப்பதால் மாயை என்றும், அந்த மாயையைத் தூண்டுபவனை மஹேச்வரனென்றும் அறியக்கடவன்.]

89. அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விச்வமேதத்
தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:

[இந்த மாயையாகிற ப்ருக்ருதியிலிருந்து மாயியாகிற பகவான் இவ்வுலகைப் படைக்கிறான். அதில் ஜீவனாகிற மற்றொருவன் மாயையினால் கட்டுண்டுகிடக்கிறான்.]

90. யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை |
தம் ஹ தேவமாத்மபுத்திப்ரஸாதம்
முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்யே ||

[எவன் பிரமனை முன் படைத்தானோ, எவன் வேதங்களையும் அவனுக்கு உபதேசித்தானோ, அப்படிப்பட்ட தேவனும், தன் விஷயமான ஞானத்தை ப்ரகாசிப்பிப்பவனுமான பரமபுருஷனை, மோக்ஷமடைய விரும்பும் நான் சரணமடைகிறேன்.]

91. ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஸ் ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரம: ஸ்வராட்

---

86. ஶரணாகதிகத்யம்-12. 87. கௌட-காரிகை (21) 88. ச்வே (4-10)
89. ச்வே (4-9) 90. தை-நா-11.

[அவனே ப்ரஹ்மாவுக்கும் அந்தர்யாமி; அவனே சிவனுக்கும் அந்தர்யாமி; அவனே இந்திரனுக்கும் அந்தராத்மா; அவனே அழிவற்றவனாய், மேலானவனாய், கர்மவசனல்லாதவனான முக்தனுக்கும் அந்தராத்மா.]

92. ஹிரண்யகர்ப்பஸ் ஸமவர்த்ததாக்ரே
பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்

[முதலில் பூதங்களுக்கெல்லாம் ஒரே பதியான ஹிரண்யகர்ப்பன் (ஜீவாத்மஸமூஹத்தைத் தன்னுட்கொண்ட பகவான்) இருந்தான்.]

93. யோ தேவாநாம் ப்ரதமம் புரஸ்தாத்
விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி: ।
ஹிரண்யகர்ப்பம் பச்யதி ஜாயமாநம்
ஸ நோ தேவ: ஶுபயா ஸ்ம்ருத்யா ஸம்யுநக்து ॥

[ஸம்ஸாரமாகிற புண்ணைப் போக்கடிப்பதால் ருத்ரஶப்தவாச்யனாய், மஹாஜ்ஞானியான எந்த பகவான், தேவர்களுக்குள் முதல்வனான ஹிரண்யகர்ப்பன் ஆதியில் பிறக்கும்போது அவனைக் கடாக்ஷிக்கிறானோ, அந்த தேவன் நமக்கு நல்ல புத்தியை அளிக்கட்டும்.]

94. ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் । ந ப்ரஹ்மா நேஶாந: ॥....தத்தேஜோ ஹிரண்யமண்டம்। தத்ர ப்ரஹ்மா சதுர்முகோऽஜாயத ।....த்ர்யக்ஷ: ஶூலபாணி: புருஷோऽஜாயத ॥"

[நாராயணர் ஒருவரே முதலிலிருந்தார். பிரமனுமில்லை; சிவனுமில்லை; அவரிடமிருந்து ஸுவர்ணமயமான அண்டமுண்டாயிற்று. அதில் நான்முகனான பிரமன் பிறந்தான்........முக்கண்ணனாய், சூலபாணியான புருஷன் உண்டானான்.]

95. அத புருஷோ ஹ வை நாராயணோऽகாமயத ப்ரஜா: ஸ்ருஜேயேதி । நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே । நாராயணாத் ருத்ரோ ஜாயதே । நாராயணாதிந்த்ரோ ஜாயதே । நாராயணாத் த்வாதஶாதித்யா ருத்ரா வஸவஸ் ஸர்வாணி சந்தாம்ஸி ॥

[புருஷனான நாராயணன் "ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கக்கடவேன்" என்று ஸங்கல்பித்தான். நாராயணனிடமிருந்து பிரமன் பிறந்தான்; நாராயணனிடமிருந்து உருத்திரனுண்டானான். நாராயணனிடமிருந்து இந்திரன் பிறந்தான்; நாராயணனிடமிருந்து பன்னிரண்டு ஆதித்யர்களும், ருத்ரர்களும், வஸுக்களும், எல்லா வேதங்களும் தோன்றினர்.]

---

92. தை-ஸம் (4-2-8) 93. தை-நா (10-19) 94. மஹோபநிஷத்.
95. நாராயணோபநிஷத்.

96. ஸ்தோ-ர-14.

97. த்ரயோ தேவாஸ் துல்யாஸ் த்ரிதயமிதமத்வைதமதிகம்
த்ரிகாதஸ்மாத் தத்த்வம் பரமிதி விதர்க்காந் விகடயந்।
விபோர் நாபீபத்மோ விதிஶிவநிதாநம் பகவத:
ததந்யத் ப்ரூபங்கீபரவதிதி ஸித்தாந்தயதி ந:॥

['மும்மூர்த்திகளும் ஸமர்' என்றும், 'இம் மூன்று மூர்த்திகளும் ஒன்றே' என்றும், 'இம்மூன்றைக் காட்டிலும் மேற்பட்டதொன்றே பரதத்வம்' என்றும் சொல்லும் விப்ரதிபந்திகளைப் போக்கடிப்பதாய், பிரமருத்ரர்களுக்கு மூலக்கிழங்காயிருக்கிற பெரிய பெருமாளுடைய நாபிக்கமலமானது, 'அவனையொழிந்த எல்லாப் பொருளும் அவனுடைய புருவநெறிப்புக்கு வசப்பட்டிருப்பது' என்று நமக்கு முடிவு கட்டித்தருகின்றது.]

98. ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:।
கச்சத்வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா:॥

[புருஷஶ்ரேஷ்டர்களே! எல்லா உலகங்களுக்கும் தந்தையும், தாயும் லக்ஷ்மீநாதனே. சரணமடையத்தகுந்த இவனை சரணமடையுங்கள்.]

99. த்ரய ஏவாதநா ராஜந் பார்யா தாஸஸ் ததா ஸுத:।
யத்தே ஸமதிகச்சந்தி யஸ்யைதே தஸ்ய தத்தநம்॥

[அரசனே! மனைவி, வேலைக்காரன், பிள்ளை ஆகிய மூவரும் தனமற்றவர்கள். அவர்கள் ஸம்பாதிக்கும் பொருளும் அவர்களுடைய யஜமானர்களுக்குச் சேருகிறது.]

100. யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருஶ்யதே ச்ரூயதேऽபி வா।
அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:॥

[இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாயிருக்கும் பொருள்களெல்லாவற்றிலும் உள்ளும் புறமும் நாராயணன் வியாபித்து நிற்கிறான்.]

101. ஸஹஸ்ராஸ்யஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரசரணோ விபு:।
ஸஹஸ்ரபாஹுஸ் ஸர்வஜ்ஞோ தேவோ நாமஸஹஸ்ரவாந்॥

[முடிகளாயிரம், கண்களாயிரம், கால்களாயிரம், கைகளாயிரம் கொண்டவனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வசக்தியாய் விளங்கும் பகவான் பேராயிரமுடையவன்.]

---

97. ர-ஸ்த (1-116) 98. பார-ஆர (192-56) 99. பார-உத்யோகபர்வம்.
100. தை-நா-11. 101. பாரதம்.

102. ப்ரமாணத்திற்கு மூலத்தைப் பார்க்கவும்.

[மைத்ரேயரே! 'பகவான்' என்னும் சப்தம் ஸர்வகாரணங்களுக்கும் காரணபூதனை ஸர்வேச்வரன் விஷயத்தில் சொல்லப்படுகிறது. '(ப்ரக்ருதியை) கார்யதசை அடையச் செய்பவன்', 'ஸ்வாமி' என்னும் இரண்டு அர்த்தங்களுடன் கூடியது பகாரம்; முனிவரே! அப்படியே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன்' என்பது ககாரத்தின் அர்த்தம். ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், யசஸ் செல்வம், ஜ்ஞானம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'பக' என்னும் பதம் வாசகமாகிறது. பூதங்களை சரீரமாகக் கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூதங்களிலும் வஸிக்கிறான். ஆகையால் அழிவற்றவனை பகவான் வகாரத்துக்கு அர்த்தமாகிறான். கீழானவையான முக்குணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லா குணங்களும், 'பகவாந்' என்னும் சப்தத்தினால் சொல்லப்படுகின்றன.]

103. கச்யப: பச்யகோ பவதி

[(ஞானி என்னும் பொருளையுடைய) 'பச்யக:' என்னும் சொல் 'கச்யப:' என்று மாறுகிறது.]

104. த்ராஹி த்ராஹீதி பர்த்தாரமுவாச தயயா விபும்

[நாதனை பகவானை நோக்கி "காத்தருள்வாயாக; காத்தருள்வாயாக" என்று கிருபையுடன் கூறினாள் பிராட்டி.]

105. ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந:।
மாம் நயேத் யதி காகுத்ஸ்தஸ் தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்॥

[சத்ருக்களின் பலத்தை அழிப்பவரான ஸ்ரீராமபிரான் லங்கையை பாணங்களாலே கலங்கச்செய்து என்னை அழைத்துப்போவராகில் அப்படிச் செய்வது அவருக்கே தகுந்ததாகும்.]

106. யத்யஸ்தி பதிஶுச்ரூஷா யத்யஸ்தி சரிதம் தப:॥
யதி வா஽ஸ்த்யேகபத்நீத்வம் ஶீதோ பவ ஹநூமத:॥

102. வி-பு (6-5-72...75) 103. தைத்-ஆர (1-8) 105. ரா-ஸு (39-30)
106. ரா-ஸு (53-29)

[எனக்குப் பதிசுச்ரூஷை உள்ளதாகில், என்னால் தவம் செய்யப்பட்டிருக்குமாகில், (என் நாதனுக்கு) ஏகபத்நீவ்ரதம் உள்ளதாகில் ஹனுமானுக்கு (அக்னியாகிய) நீ குளிர்ந்தவனுவாயாக.]

107. ததஸ் ஸா ஹ்ரீமதீ பாலா பர்த்துர் விஜயஹர்ஷிதா ।
அவோசத் யதி தத் தத்யம் பவேயம் ஶரணம் ஹி வ: ॥

[லஜ்ஜை நிரம்பியவளாய், கணவனின் ஜயத்தைக் கேட்டு ஆநந்தமடைந்தவளான அப்பிராட்டி அக்கனவு உண்மையானல் உங்களுக்கு நான் அடைக்கலமாகிறேன் என்று உரைத்தாள்.]

108. பரிஜநபரிபர்ஹா பூஷணந்யாயுதாநி
ப்ரவரகுணகணச்ச ஜ்ஞாநஶக்த்யாதயஸ்தே ।
பரமபதமதாண்டாந்யாத்மதேஹஸ் ததாऽऽத்மா
வரத ! ஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த ॥

[வரதனே ! (விஷ்வக்ஸேனர்) முதலான பரிஜனங்களும், (சத்ரம், சாமரம் முதலிய) பரிச்சதங்களும், ஆபரணங்களும், ஆயுதங்களும் ஜ்ஞானம் சக்தி முதலிய அந்தச் சிறந்த குணஸமூஹங்களும், பரமபதமும், அண்டங்களும், உன்னுடைய திவ்யமங்களவிக்ரஹமும், திவ்யாத்மஸ்வரூபமுமாகிய இவையெல்லாவற்றையும் அடியவர்களுக்கு ஆக்கிவைத்தாய்.]

109. ததைவைகா பரா ஶக்தி: ஶ்ரீஸ்தஸ்ய கருணாச்ரயா ।
ஜ்ஞாநாதிஷட்குணமயீ யா ப்ரோக்தா ப்ரக்ருதி: பரா ॥

[கருணைக்கோர் இருப்பிடமானவளாய், ஞானம் முதலான ஆறுகுணங்கள் நிரம்பப்பெற்றவளாய், மேலான ப்ரக்ருதியாகச் சொல்லப்படுபவளான ஶ்ரீதேவி அந்த பகவானுடைய மேலானதொரு சக்தியாவள்.]

110. ஜ்ஞாநஶக்திபலைச்வர்யவீர்யதேஜ:ப்ரபாவதீம்

[ஜ்ஞானம், ஶக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் (ஆறு) கிரணங்களையுடைய ஶ்ரீதேவியை....]

111. இதி விவிதமஜஸ்ய யஸ்ய ரூபம் ப்ரக்ருதிபராத்மமயம் ஸநாதநஸ்ய ।
ப்ரதிஶது பகவாநஶேஷபும்ஸாம் ஹரிரபஜந்மஜராதிகாம் ஸ ஸித்திம் ॥

[பிறப்பற்றவனும், பழைமையானவனுமான எந்த விஷ்ணுவுக்குப் பலவிதமான ப்ரக்ருதியென்ன, (அதைக்காட்டிலும் மேலான) திவ்ய

---

107. ரா-ஸு (58-90) 108. வரத-ஸ்த-63. 109. ஸநத்குமாரஸம்ஹிதை
110. அஹி-ஸம் (21-9) 111. வி. பு. (6-8-64)

முங்களவிக்ரஹமென்ன, ஆத்மஸ்வரூபமென்ன, இவை இம்மாதிரியாக சரீரங்களாயிருக்கின்றனவோ, அந்த பகவான் ஹரி எல்லா மனிதர்களுக்கும், பிறப்பு மூப்பு முதலியவைகளைப் போக்கடிக்கும் மோக்ஷஸித்தியை அருளுவானாக.]

112. மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி:

[பேராபத்து வந்த காலத்தில் பகவானான ஹரி நினைக்கத்தகுந்தவன்.]

113. அநிர்தேச்யோऽப்ரமேயச்ச யஸ்து காமசரீரத்ருத் ।
மோததே பகவாந் பூதைர் பால: க்ரீடநகைரிவ ॥

[எதிர்த்துப்பேசப்படாதவனும், அறியமுடியாதவனும், இஷ்டப்பட்ட உருவங்களை தரிப்பவனுமான பகவான், சிறுவன் விளையாட்டுக்கருவிகளுடன் விளையாடுவதுபோல் பூதங்களுடன் விளையாடி ஸந்தோஷிக்கிறான்.]

114. ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி தத ஏவைஷ பகவாந்
த்வதாயத்தர்த்தித்வேऽப்யபவதபராதீநவிபவ: ।
ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் ந விகுணம்
ந குண்டஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹிதகுணம் ॥

[பிராட்டியே! இயற்கையிலேயே நீ பகவானுடைய உடைமையாயிருக்கிறாய். இதனாலேயே இந்த பகவான் உன்னாலே வந்த பெருமையையுடையவனாயிருந்தபோதிலும் இயற்கையான பெருமையை உடையவனானான். தன்னுடைய ஒளியினாலே விலையுயர்ந்ததாகும் ரத்தினம் (அக்காரணத்தினால்) தாழ்ந்ததாகவோ இயற்கைப்பெருமையற்றதாகவோ, மற்றொன்றினாலுண்டான பெருமையை உடையதாகவோ ஆகிறதில்லையன்றோ.]

115. ந தே வர்ணயிதும் சக்தா குணாந் ஜிஹ்வாபி வேதஸ: ।
ப்ரஸீத தேவி பத்மாக்ஷி மாஸ்மாம்ஸ்த்யாக்ஷீ: கதாசந ॥

[பிரமனின் நாவும் உன்னுடைய குணங்களை வர்ணிக்க சக்தியுடையனவல்ல; தாமரைக் கண்களையுடைய பிராட்டியே! அருள்புரிவாயாக. எங்களை ஒருபோதும் விட்டுச்செல்லவேண்டா.]

116. ப்ரஹ்மாத்யாஸ் ஸகலா தேவா முநயச்ச தபோதநா: ।
த்வாம் ஸ்தோதுமபி நேசாநாஸ் த்வத்ப்ரஸாதலவம் விநா ॥

113. பார-ஸபா (40-78) 114. ஸ்ரீகுண-31, 115. வி. பு. (1-9-133)

[பிரமன் முதலிய எல்லா தேவர்களும், தவத்தையே தனமாகக் கொண்ட முனிவர்களும், உன்னுடைய அருளில் ஒரு துளியாவது இருந்தாலொழிய உன்னைத் துதிக்கவல்லரல்லர்.]

117. உத்பாஹூஸ் த்வாமுபநிஷதஸாவாஹு நைகா நியந்த்ரீம்
ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச்சரித்ரே।
ஸ்மர்த்தாரோऽஸ்மஜ்ஜநநி யதமே ஸேதிஹாஸை: புராணை:
நிந்யுர் வேதாநபி ச ததமே த்வந்மஹிம்நி ப்ரமாணம் ॥

[எங்களுடைய தாயே! (ஸ்ரீஸூக்தம் முதலான) இந்த உபநிஷத்து மட்டும் கையை உயரத் தூக்கிக்கொண்டு உம்மை உலகிற்கு ஸ்வாமினியாகச் சொல்லவில்லை. ஸ்ரீமத் ராமாயணமும் உம்முடைய சரித்திரத்தை வர்ணிப்பதன்மூலமே உயிர் வாழ்கின்றது. ஸ்ம்ருதிகளைச் செய்த ரிஷிகளும், இதிஹாஸ புராணங்களுடன் கூடிய வேதங்களையும், உம்முடைய பெருமையைச் சொல்லும் ப்ரமாணங்களாகச் சொன்னார்கள்.]

118. யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சந ॥

[எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குகள், (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆனந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்படமாட்டான்.]

119. ஸ்தோ-ர-7.

120. யத்யாவத் தவ வைபவம் ததுசிதஸ்தோத்ராய தூரே ஸ்ப்ருஹா
ஸ்தோதும் கே வயமித்யதச்ச ஜக்ருஹு: ப்ராஞ்சோ விரிஞ்ச்யாதய: ।
அப்யேவம் தவ தேவி வாங்மநஸயோர் பாஷாநபிஜ்ஞம் பதம்
காவாச: ப்ரயதாமஹே கவயிதும் ஸ்வஸ்தி ப்ரஶஸ்த்யை கிராம் ॥

[ஸ்ரீரங்கநாயகியே! உம்முடைய பெருமையின் ஸ்வரூப ப்ரமாணங்களுக்குத் தகுந்த துதியை இயற்றுவதில் ஆசையும் வெகுதூரத்தில். முன்னோர்களான பிரமன் முதலியவர்களும் '(பிராட்டியைத்) துதிக்க நாங்கள் அதிகாரிகளோ?' என்கிற வார்த்தையையே கடைப்பிடித்தார்கள். அப்படியிருந்தபோதிலும், வர்க்கு, மனஸ்ஸுக்களுடைய எல்லையைத் தாண்டியிருக்கும் உம்முடைய ஸ்வரூபத்தைத் துதிப்பதற்கு, நிஹீன வாக்குகளையுடைய நாம் முயற்சி செய்கிறோம். (எங்க

117. ஸ்ரீகுண-14. 118. தை-ஆ (9-1) 120. ஸ்ரீகுண-5.

ளுடைய) வாக்குகளுக்குப் பெருமையின்பொருட்டு (உன் அருளாகிய) மங்களம் உண்டாகட்டும்.]

121. ஸ்தோ-ர-8

122. ,, -55

123. அமதம் மதம் மதமதாமதம் ஸ்துதம்
பரிநிந்திதம் பவதி நிந்திதம் ஸ்துதம் ।
இதி ரங்கராஜமுதஜூகுஷத் த்ரயீ
ஸ்துமஹே வயம் கிமிதி தம் ந ஶக்நும: ॥

["பரப்ரஹ்மமானது அறியமுடியாததென்று எண்ணப்பட்டால் (அப்போது அது) அறியப்பட்டதாகிறது. மேலும், ப்ரஹ்மம் அறியக்கூடியது என்று எண்ணப்பட்டால் அறியப்படாததாகிறது; ப்ரஹ்மம் துதித்து முடிக்கத்தக்கது என்று கருதப்பட்டால் அது இகழப் பட்டதாக ஆகிறது. உள்ளபடி துதிக்கமுடியாததென்று நினைக்கப் பட்டால் துதிக்கப்பட்டதாக ஆகிறது" என்று இவ்விதமாக வேதமானது எம்பெருமான் விஷயமாக உத்கோஷித்தது. (இப்படியிருக்க) அறிவற்ற நாம் அவனை என்னவென்று துதிப்பது? துதிக்கவல்லோமல்லோம்.]

124. ஹா க்ருஷ்ண த்வாரகாவாஸிந் க்வாஸி யாதவநந்தந ।
இமாமவஸ்தாம் ஸம்ப்ராப்தாமநாதாம் கிமுபேக்ஷஸே ॥
ஶங்கசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத ।
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் ஶரணாகதாம் ॥

[க்ருஷ்ணனே! த்வாரகாவாஸியே! யாதவகுல நந்தனனே! எங்கிருக்கிறாய்? இவ்வவஸ்தையையடைந்த அநாதையான என்னை ஏதுக்காக உபேக்ஷிக்கிறாய்? சங்கசக்ரகதாபாணியே! த்வாரகையிலே நிற்பவனே! அடியவரை நழுவவிடாதவனே! கோவிந்தனே! செந்தாமரைக்கண்ணா! சரணாகதையான என்னைக் காத்தருள்வாயாக.]

125. தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: ।
மாமகா: பாண்டவாஶ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய

[ஸஞ்ஜயனே! தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் யுத்தம்செய்ய விரும்பியவர்களாய்க் கூடின என் பிள்ளைகளான துரியோதனாதியரும், பாண்டவர்களும் என்ன செய்தார்கள்?]

---

123. ர-ஸ்த-13. 124. பார-ஸபா-66. 125. கீதை (1-1)

126. கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவிதேந வா।
யேஷாமர்த்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகாஸ் ஸுகாநி ச॥
த இமேऽவஸ்திதா யுத்தே ப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச॥

[கோவிந்தனே! எங்களுக்கு ராஜ்யத்தினால் என்ன பயன்? போகங்களாலும் உயிர்வாழ்வதாலும் என்ன பலன்? எவர்களுக்காக நாங்கள் ராஜ்யபோகஸுகங்களை விரும்புகிறோமோ அவர்கள் உடல்பொருளாவி யெல்லாவற்றையும் விட்டு யுத்தத்தில் நிற்கிறார்கள்.]

127. ந ஹி மே ஜீவிதேநார்த்த:

[எனக்கு உயிரினால் பயனில்லை.]

128. ந காங்க்ஷே விஜயம் க்ருஷ்ண ந ச ராஜ்யம் ஸுகாநி ச

[கண்ணா! நான் ஜயத்தையும், ராஜ்யத்தையும், ஸுகங்களையும் விரும்புகிறேனல்லேன்.]

129. ஏவமுக்த்வாऽர்ஜுநஸ் ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத்।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஶோகஸம்விக்நமாநஸ:॥

[அர்ஜுனன் இம்மாதிரிசொல்லிவிட்டு, அம்புடன் கூடிய வில்லை விடுத்து, சோகம் நிறைந்த மனத்தை உடையவனாய் ரதத்தில் உட்கார்ந்தான்.]

130. ஸர்வதாऽஹம் ந யோத்ஸ்யாமீத்யுக்த்வா....உபாவிஶத்

[ஒருபோதும் நான் யுத்தம் செய்யமாட்டேன் என்று சொல்லி உட்கார்ந்தான்.]

131. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:॥

[(பலஸாதனமான) எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு, என்னையொருவனையே உபாயமாக அடை. நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன், துக்கிக்காதே.]

132. நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா த்வத்ப்ரஸாதாந் மயாऽச்யுத।
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ॥

[அச்சுதனே! (விபரீதஜ்ஞானமாகிய) மோஹம் நசித்தது. உன்னருளால் உண்மையறிவு என்னால் அடையப்பட்டது. ஸந்தேஹம் நசிக்

126. கீதை (1-33) 127. ரா-ஸு (26-5) 128. கீதை (1-32) 129. கீதை (1-47) 130. கீதாபாஷ்யம்-1. 131. கீதை (18-66) 132. கீதை (18-73)

கப்பெற்றவனுயிருக்கிறேன். உன் வசனத்தின்படியே (யுத்தம்) செய்கிறேன்.]

133. ஶப்தாதீந் விஷயாந் ப்ரதர்ஶ்ய விடவம் விஸ்மார்ய தாஸ்யாத்மகம்
வைஷ்ணவ்யா குணமாயயாऽऽத்மநிவஹாந் விப்லாவ்ய பூர்வ: புமாந்।
பும்ஸா பண்யவதூவிடம்பிவபுஷா தூர்த்தாநிவாயாஸயந்
ஸ்ரீரங்கேச்வரி கல்பதே தவ பரீஹாஸாத்மநே கேளயே॥

[ஸ்ரீரங்கநாயகியே! புராணபுருஷனன உன் நாதன், சப்தம் முதலிய விஷயங்களைக் காண்பித்து, தாஸ்யரூபமான செல்வத்தை மறக்கச் செய்து, விஷ்ணுவான தன்னுடைய முக்குணமுள்ள ப்ரக்ருதியினுலே ஜீவஸமூஹங்களை வஞ்சித்து, வேசியினுருக்கொண்ட மனிதனைக் கொண்டு துஷ்டர்களைத் துன்புறுத்துவதுபோல் துன்புறுத்தி ஆக இப்படியெல்லாம் உன்னுடைய பரிஹாஸரூபமான விளையாட்டின் பொருட்டுச் செய்கிறார்.]

134. கிம் ம்ருஷ்டம் ஸுதவசநம்
புநரபி ம்ருஷ்டம் ததேவ ஸுதவ்சநம்।
ம்ருஷ்டாதபி ம்ருஷ்டதரம்
ததேவ பரிபக்வம் ஸுதவசநம்॥

[எது போக்யமானது? (சிசுவான) குழந்தையின் மழலைச்சொல்லே போக்யமானது. மறுபடியும் இனிதாயிருப்பது (பாலனை) அக்குழந்தையின் பிள்ளைப் பேச்சுகளே. போக்யமான ஸகலபதார்த்தங்களிலும் போக்யமாயுள்ளது (யுவாவான) அப்பிள்ளையின் அறிவு நிரம்பிய அந்த வார்த்தைகளேயாகும்.]

135. ஸ்தோ-ர-58.

135*. 118-வது ப்ரமாணத்தைப் பார்க்க.

136. ஹே ஸ்ரீர் தேவி ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகுண்ய ப்ரேமப்ரதாநாம் தியம்।
பக்திம் பந்தய நந்தயாஶ்ரிதமிமம் தாஸம் ஜநம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷவீசிவிஸ்ருதேஸ் தே ஸ்யாம சாமீ வயம்॥

[பெரியபிராட்டியே! எல்லா உலகுக்கும் தாயான உன்னைத் துதிக்க விரும்புகிறோம். (அதற்குத் தகுந்த) வாக்கை என்னிடம் சேர்ப்பாயாக; அன்பு நிறைந்த புத்தியையும் அளிப்பாயாக; பக்தியைக் கொடுப்பாயாக; உன்னை அடைந்தவனாய் உன் அடியேனான என்னை ஆநந்

133. ஸ்ரீகுண-20. 136. ஸ்ரீஸ்தவம்-2.

திப்பிப்பாயாக, உன்னுடைய கடாக்ஷப்ரவாஹத்திற்கு நாங்கள் இலக்காகக்கடவோம்.]

137. ஸூக்திம் ஸமக்ரயது ந: ஸ்வயமேவ லக்ஷ்மீ:
ஸ்ரீரங்கராஜமஹிஷீ மதுரை: கடாக்ஷை: ।
வைதக்த்யவர்ணகுணகும்பநகௌரவைர் யாம்
கண்டூலகர்ணகுஹரா: கவயோ தயந்தி ॥

[ஸாமர்த்தியமாகச் சேர்க்கப்பட்ட எழுத்துக்கள், குணம், சேர்த்தி யழகு ஆகியவற்றையுடைய யாதொரு ஸூக்தியை (மேலும் மேலும் பருகவேண்டும் என்னும்) ஆசையையுடைய செவித்துளைகளையுடையவர்களாய், கவிகள் பருகப்போகிறார்களோ, அப்படிப்பட்டதான நம்முடைய ஸூக்தியை, ஸ்ரீரங்கநாயகியானவள் தன் இனிய கடாக்ஷங்களாலே தானாகவே பூர்ணமாக்கட்டும்.]

138. ஸ ச்லாக்யஸ் ஸ குணீ தந்யஸ் ஸ குலீநஸ் ஸ புத்திமாந் ।
ஸ சூரஸ் ஸ ச விக்ராந்தோ யம் த்வம் தேவி நிரீக்ஷஸே ॥

[தேவியே! நீ எவனைக் கடாக்ஷிக்கிறாயோ, அவனே சிறந்தவன்; அவனே குணவான்; அவனே பாக்யசாலி; அவனே நற்குலத்துதித்தவன்; அவனே புத்திமான், அவனே சூரன்; அவனேபராக்ரமசாலி]

139. அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மா குஹாயாம் நிஹிதோऽஸ்ய ஜந்தோ: ।
தமக்ரதும் பச்யதி வீதசோகோ
தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம் ॥

[அணுவைக் காட்டிலும் அணுவாய், மஹத்தைக் காட்டிலும் மஹத்தான பரமாத்மா இந்த ஜீவனுடைய ஹ்ருதயகுஹையிலிருக்கிறான். கர்மபந்தமற்றவனாய், மஹிமசாலியான அப்பரமாத்மாவை அவனருளாலே கண்டு சோகம் நீங்கப்பெறுகிறான்.]

140. யோ யோ ஜகதி பும்பாவ: ஸ விஷ்ணுரிதி நிச்சய: ।
யோ யஸ்து நாரீபாவ: ஸ்யாத் தத்ர லக்ஷ்மீர் வ்யவஸ்திதா ॥
ப்ரக்ருதே: புருஷாச்சாந்யஸ் த்ருதீயோ நைவவித்யதே ।
அத கிம் பஹுநோக்தேந நரநாரீமயோ ஹரி: ॥

[உலகில் ஆண்மை காணப்படுமிடமெல்லாம் ஹரி யிருக்கிறான் என்பது நிச்சயம். பெண்மையுள்ள விடமெல்லாம் பிராட்டியிருக்

137. ஸ்ரீகுண-7. 138. வி. பு. (1-9-131) 139. தை-நா (9-1)
140. ஸநத்குமாரஸம்ஹிதை.

கிறுள். ப்ரக்ருதிக்குஅபிமானியாகிற பிராட்டியையும், பூருஷாபிமானி யான பகவானையும் தவிர மூன்றுவதொன்றுமில்லை. பல சொல்லியென்? ஸ்த்ரீபுருஷர்கள் எல்லாமாயிருப்பவன் ஸ்ரீமந்நாராயணனே.]

141. மூலப்ரக்ருதிரீசாநீ

[மூலப்ரக்ருதி; ஈசானி]

142. ஆஹுர் வேதா ந மாநம் கதிசந கதி சாராஜகம் விச்வமேதத்
ராஜந்வத் கேசிதீசம் குணிநமபி குணைஸ்தம் தரித்ராணமந்யே।
பிக்ஷாவந்யே ஸ்வராஜம்பவமிதி ச ஜடாஸ் தே தலாதல்யகார்ஷு:
யே தே ஸ்ரீரங்கஹர்ம்யாங்கணகநகலதே ந க்ஷணம் லக்ஷ்யமாஸந்॥

[திருவரங்கமாளிகைத் திருமுற்றத்திலுள்ள பொற்கொடியே! உன் கடாக்ஷத்திற்கு ஒரு கணப்போதும் இலக்காகாத சிலர் வேதம் ப்ரமாணமன்று என்றனர்; சிலர் இவ்வுலகம் நாதனற்றது என்றனர்; சிலர் (ஆநுமாநிக) ஈச்வரனையுடையதென்றனர்; குணத்துடன் கூடிய ஈச்வரனை குணதரித்ரன் என்றனர் சிலர். சிலர் பிக்ஷுவான சிவனிடம் ஸர்வேச்வரத்வமுள்ளதாகச் சொன்னார்கள். இம்மாதிரியாக அம்மூடர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்கின்றனர்.]

143. ச்லோகமும் பொருளும் மூலத்திலேயேகாண்க.

144. அஸ்யேசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ.

[இவ்வுலகிற்கு ஈச்வரியாகவும், விஷ்ணுவுக்குப், பத்னியாகவு மிருப்பவள்.]

145. பத்மப்ரியா ஸுப்ரஸந்நா....

[பத்மத்தில் பிரியமுள்ளவள்; மிகவும் ப்ரஸன்னையாயிருப்பவள்....]

146. ஸ்ரீ வாஸுதேவமஹிஷீ பும்ப்ரதாநேச்வரேச்வரீ

[ஸ்ரீ வாஸுதேவனுடைய மஹிஷி; சித், அசித், ஈச்வரர்களுக்கு ஈச்வரியாயிருப்பவள்.]

147. ஸர்வோத்க்ருஷ்டா ஸர்வமயீ

[எல்லாரையும்விட உயர்ந்தவள்; எல்லாமாயிருப்பவள்.]

148. வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யேந் நியத: ஸ்ரியம்।

141. ஸ்ரீ ஸஹஸ்ரநாமம்-66. 142. ஸ்ரீகுண-11. 143. ஸ்ரீகுண-12.
144. யஜுஸ்ஸம் (4-4-12) 145. லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம்-43.
146. லக்ஷ்-ஸஹ-1 147. லக்ஷ்-ஸஹ-122. 148. சௌனகஸம்ஹிதை

[வாக்குக்கு எட்டாத பிராட்டியின் ஸ்வரூபத்தை அடைய விரும்புமவன் நியமமாக அப்பிராட்டியை சரணமடையக்கடவன்.]

149. தேவி ச்ருதிம் பகவதீம் ப்ரதமே புமாம்ஸ:
த்வத்ஸத்குணௌகமணிகோஶக்ருஹம் க்ருணந்தி।
தத்த்வாரபாடநபடூநி ச ஸேதிஹாஸ—
ஸந்தர்க்கண ஸ்ம்ருதிபுராணபுரஸ்ஸராணி॥

[தேவியே! புராணபுருஷர்கள், வேதத்தை உன்னுடைய கல்யாணகுண ஸமூஹங்களாகிற மணிகள் வைக்கப்பெற்ற பெட்டியாகவும், இதிஹாஸம், தர்க்கமீமாம்ஸாதிகள், ஸ்ம்ருதிபுராணங்கள் முதலியவற்றை அப்பெட்டியைத் திறக்கவல்ல திறவுகோலாகவும் உரைக்கின்றனர்.]

150. நாயம் தேவோ ந மர்த்யோ வா ந திர்யக் ஸ்தாவரோபிவா।
ஜ்ஞாநாநந்தமயஸ் த்வாத்மா ஶேஷோ ஹி பரமாத்மந:॥

[இந்த ஜீவாத்மா தேவனுமல்லன்; மிருகமுமல்லன்; மரமுமல்லன்; (நாலுவகைப்பட்ட இந்த சரீரங்களிலிருக்கும்) ஜ்ஞாநாநந்தமயனான ஆத்மா பரமாத்மாவுக்கு தாஸனாயிருப்பவனன்றோ.]

151. சிரம் ஜீவதி வைதேஹீ யதி மாஸம் தரிஷ்யதி।
ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்॥

[ஸீதை ஒரு மாஸம் தரித்திருப்பாளாகில், வெகுகாலம் பிழைத்திருந்தவளாகிறாள்; கறுத்த கண்களையுடைய அவளைவிட்டு ஒரு க்ஷண நேரமும் நான் பிழைத்திருக்கமாட்டேன்.]

152. யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:।
தம் ப்ரணம்ய ஹரிம் ஶாஸ்த்ரம் ந்யாயதத்த்வம் ப்ரசக்ஷ்மஹே॥

[எவனொருவன், எப்போதும் எல்லா வஸ்துக்களையும் ஒரே சமயத்தில் தானாகவே நேரில் அறிகிறானோ, அந்த ஹரியை வணங்கி, ந்யாய தத்வம் என்னும் கிரந்தத்தைச் சொல்லுகிறோம்.]

153. 30-வது ப்ரமாணத்தைப்பார்க்கவும்.
154. 38- ,, ,,
155. 118- ,, ,,
156. யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:

---

149. ஸ்ரீகுண-10. 151. ரா-ஸு (66-10). 152. (நாதமுனிகளருளிய) ந்யாயதத்துவம். 156. முண்ட (1-1-10).

[எந்தப் பரமாத்மாவானவன், எல்லா வஸ்துக்களுடைய ஸ்வரூபத்தை யும் ஸ்வபாவங்களையும் அறிகிறானோ, எவனுடைய ஸங்கல்பமானது ஞானமயமாயிருக்கின்றதோ....]

157. பராஸ்ய ஶக்திர் விவிதைவ ச்ரூயதே
ஸ்வாபாவிகீ ஜ்ஞானபலக்ரியா ச।

[இந்தப் பரமாத்மாவுக்குப் பலபடிப்பட்டதும், மேலானதுமான சக்தியும், இயற்கையான ஞானமும், பலமும், (ஸ்ருஷ்டித்தல் முதலிய) காரியங்களும் உண்டென்று அறியப்படுகிறது.]

158. தேவி த்வந்மஹிமாவதிர் ந ஹரிணா நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவமதாபி நைவ யுவயோஸ் ஸர்வஜ்ஞதா ஹீயதே।
யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதாமநுகுணாம் ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜமிதந்தயா கில விதந் ப்ராந்தோऽயமித்யுச்யதே॥

[தேவியே! உன்னுடைய பெருமையின் எல்லை ஹரியினாலும், உன்னாலும் அறியப்படுகிறதில்லை. ஆயினும், உங்களுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்கும் ஒரு குறையில்லை. இல்லாத வஸ்துவை அறியாமலிருப்பது ஸர்வஜ்ஞத்வத்துக்குப் பொருந்தியதென்றே உரைக்கிறார்கள் பெரியோர்கள். 'ஆகாசத்தாமரை இது' என்று அறிபவன் பிரமித்தவனாகவே சொல்லப்படுகிறானன்றோ.]

159. ஸ்ரீரங்கநாத மம நாத

[ஸ்ரீரங்கநாதனே! என்னுடைய நாதனே!]

160. பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம।
கார்யம் கருணமார்யேண ந கச்சிந் நாபராத்யதி॥

[வானர! பாபிகளாயினும், புண்யமுள்ளவராயினும், கொல்லத்தகுந்தவர்களாயிருந்தாலும் குணவானாயிருப்பவனால் அவன் விஷயத்தில் கருணை காட்டப்படவேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

161. காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத்பயம்॥

[அச்சுதனே! எல்லாப் புண்ணியகாலங்களிலும், எல்லா திசைகளிலு

157. ச்வே-6. 158. ஸ்ரீஸ்தவம்-8. 159. ஸ்ரீரங்ககத்யம்-7.
160. ரா-யு (116-44) 161. ஜிதந்தே (1-9)

முள்ள புண்ணியக்ஷேத்திரங்களிலும், (தர்மஸாதநமான) சரீரத்திலும், சரீராந்தரகதியிலும், அடியேனுக்கு அதிகமான பயம் உள்ளது.]

162. சந்த்ராம் ப்ரபாஸாம் யஶஸா ஜ்வலந்தீம்
ஶ்ரியம் லோகே தேவஜுஷ்டாமுதாராம் ।
தாம் பத்மநேமிம் ஶரணமஹம் ப்ரபத்யே
அலக்ஷ்மீர் மே நஶ்யதாம் த்வாம் வ்ருணே ॥

[ஆநந்தரூபையும், மிகவும் விளங்குமவளும், கீர்த்தியினாலே பிரகாசிப்பவளும், எம்பெருமானுடன் (எப்போதும்) கூடியிருந்து அவனை ஸேவிப்பவளும், வண்மை மிகுந்தவளும், பத்மத்திலிருப்பவளுமான அந்த ஸ்ரீதேவியை நான் சரணமடைகிறேன். என்னுடைய அலக்ஷ்மியானது நசிக்கட்டும். (அதற்காக) உன்னை சரணமாக வரிக்கிறேன்.]

163. 144-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

164. பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்....நாராயணம்

[உலகத்துக்கெல்லாம் பதியாயிருப்பவனும், தனக்குத் தானே ஈச்வரனாயிருப்பவனும் நாராயணனே.]

165. யத்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித: ।
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ் ஸ மஹேச்வர: ॥

[வேதத்தினுதியிலும் அந்தத்திலும் யாதொரு ஸ்வரமானது சொல்லப்படுகிறதோ, தனக்குக் காரணமான அகாரத்தில் ஒடுங்கிய அந்த ஓங்காரமாகிய ஸ்வரத்திற்குப் பொருளாயிருப்பவனே மஹேச்வரன்.]

166. 31-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

167. ஏகஸ் ஸ்வதந்த்ரோ ஜகதோ பபூவ

[உலகிற்கு ஒரே ஸ்வதந்த்ரஸ்வாமியாக நாராயணன் விளங்கினன்.]

168. க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:
க்ஷராத்மாநாவீஶதே தேவ ஏக:

[க்ஷரமெனப்படுவது ப்ரக்ருதியே; அம்ருதமாகையால் அக்ஷரமெனப்படுபவன் ஜீவனே. ப்ரக்ருதி ஜீவர்களை ஒரு தேவன் நியமிக்கிறான்.]

169. ஏக: ஶாஸ்தா ந த்விதீயோऽஸ்தி ஶாஸ்தா (கஶ்சித்?)
யோ ஹ்ருச்சயஸ் தமஹமநுப்ரவீமி ।

---

162. ஸ்ரீஸூக்தம்-5. 164. தை-நா-11. 165. தை-நா (10-24).
168. ச்வே-(1-10). 169. பார-ஆச்வ (27-1).

தேனைவ யுக்த: ப்ரவஹதிவோதகம்
யதா நியுக்தோऽஸ்மி ததா வஹாமி ॥

[நாராயணன் ஒருவனே நியமிப்பவன்; நியமிப்பவர் வேறில்லை; எந்த பகவான் ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருக்கிருனே அவனையே நான் சொல்லுகிறேன். ஜலம் பள்ளத்தை நோக்கி ஓடுவதுபோல், அவனுடன் சேர்ந்தவனாய் அவன் ஏவின வேலையைத்தாங்கிச் செல்லுகிறேன்.]

170. விச்வஸ்ய பர்த்ரீ ஜகத: ப்ரதிஷ்டா

[உலகிற்கு ஸ்வாமினியாகவும், ஆதாரமாகவுமிருப்பவள்.]

171. 146-வது ப்ரமாணத்தைப் பார்க்கவும்.

172. ஸ்வஸ்தி ஸ்ரீர் திசதாதசேஷஜகதாம் ஸர்க்கோபஸர்க்கஸ்திதீ:
ஸ்வர்க்கம் துர்க்கதிமாபவர்க்கிகபதம் ஸர்வம் ச குர்வந்ஹரி:।
யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீநோ விதத்தேऽகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாऽஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத் தயா ॥

[எல்லாவுலகையும் படைத்தளித்து அழிப்பதையும், ஸ்வர்க்கநரக மோக்ஷங்களைக் கொடுப்பதையும் செய்யும்போது பகவான் எவளுடைய திருமுகமண்டலத்தைப் பார்த்துக்கொண்டு அதனுடைய இங்கிதத்திற்கு வசப்பட்டவனாய் எல்லாக்காரியங்களையும் செய்கிருனே, அந்தப் பிராட்டி (நமக்கு) மங்களத்தை அளிக்கட்டும்; பகவான் அவளுடன் ஒரே அபிப்ராயத்தை உடையவனாயிருக்கிறபடியால், அவளுடைய இங்கிதபராதீனனாகக் காரியங்களைச் செய்யாவிடில் அக்காரியங்கள் ரஸத்தை அளிக்கமாட்டா.]

173. ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா

[ராமனுக்குப் பிரியபத்தினியாகவும் எப்போதும் அவனுடைய ப்ராணனைப்போல் நன்மையைச் செய்பவளாகவுமிருப்பவள் சீதை.]

174. அநுகலதநுகாண்டாலிங்கநாரம்பசும்பத்-
ப்ரதிதிசபுஜசாக ஸ்ரீஸகாநோகஹார்த்தி: ।
ஸ்தந நயந குளுச்ச ஸ்பாரபுஷ்பத்விரேபா
ரசயது மயி லக்ஷ்மீகல்பவல்லீ கடாக்ஷாந் ॥

[க்ஷணந்தோறும், (பிராட்டியினுடைய) கொம்புபோன்ற சரீரத்தினுடைய ஆலிங்கனத்தின் ஆரம்பத்தினுல், நாலுதிக்குகளிலும் விளங்கா

170. யஜு-கா (3-3). 172. ஸ்ரீஸ்தவம்-1. 173. ரா-பா (1-26). 174. ஸ்ரீகுண-3.

நிற்கிற திருக்கைகளாகிற கிளைகளையுடைய லக்ஷ்மீநாதனாகிற வ்ருக்ஷத்தின் செல்வத்தையுடையவளும், பூங்கொத்துகள் போன்ற திருமுலைத்தடங்களையும், மலர்ந்தபுஷ்பங்களிலுள்ள வண்டுகள்போன்ற திருக்கண்களையும் உடையவளுமான கற்பகக்கொடிபோன்ற லக்ஷ்மியானவள் என்னிடத்தில் கடாக்ஷங்களைப் பொழியட்டும்.]

175. லக்ஷ்மீகல்பலதோத்துங்கஸ்தநஸ்தபகசஞ்சல: ।
ஸ்ரீரங்கராஜப்ருங்கோ மே ரமதாம் மாநஸாம்புஜே ॥

[பிராட்டியாகிற கற்பக்கொடியிலுள்ள உன்னதமான திருமுலைத் தடமாகிற பூங்கொத்தில் வட்டமிடாநிற்கும் ஸ்ரீரங்கநாதனாகிற வண்டு அடியேனுடைய நெஞ்சக் கமலத்தில் விளையாடக்கடவது.]

176. ராஜஸம்ச்ரயவஸ்யாநம் குர்வந்தீநாம் பராஜ்ஞயா ।
விதேயாநாம் ச தாஸீநாம் க: குப்யேத் வாநரோத்தம ॥

[வாநரச்ரேஷ்டனே! ராஜாவுக்குப் பரதந்திரர்களும், அவனுடைய ஆஜ்ஞையினால் (எனக்குத் துன்பத்தைச்) செய்பவர்களும், அவனுக்கு வசப்பட்டவர்களுமான தாஸிகளிடத்தில் எவன் கோபிப்பான்?.]

177. மாதர் மைதிலி ராக்ஷஸீஸ் த்வயி ததைவார்த்ராபராதாஸ்த்வயா
ரக்ஷந்த்யா பவநாத்மஜால் லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா ।
காகம் தஞ்ச விபீஷணம் ஶரணமித்யுக்திக்ஷமௌ ரக்ஷத:
ஸா நஸ் ஸாந்த்ரமஹாகஸஸ் ஸுகயது க்ஷாந்திஸ் தவாகஸ்மிகீ ॥

[தாயே மைதிலி! அப்போதே அபராதம் செய்த ராக்ஷஸிகளை ஹநுமானிடமிருந்து ரக்ஷித்த உன்னாலே, காகாஸுரனையும், விபீஷணனையும் சரணம் என்னும் வார்த்தையைச் சொன்னபிறகு ரக்ஷித்த ராமனுடைய கோஷ்டியானது சிறிதாக்கப்பட்டது. அப்படிப்பட்ட உன்னுடைய நிர்ஹேதுகக்ருபையானது பெரும்பாவிகளான எங்களையும் ஆநந்திப்பிக்கட்டும்.]

178. ஸ தம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம் ।
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத் ॥

[பூமியில் விழுந்தவனும், சரணமடைந்தவனுமான அந்தக் காகாஸுரனை, கொல்லத்தகுந்தவனாயிருந்தபோதிலும், சரணமடையத் தகுந்தவனான ராமபிரான் (தன்) அருளாலே ரக்ஷித்தான்.]

---

175. ர-ஸ்த (1-10). 176. ரா-யு (116-38). 177. ஸ்ரீகுண-50.
178. ரா-ஸு (38-35)

179. ஸ்வார்த்தநிரபேக்ஷா பரது:க்காஸஹிஷ்ணுதா தயா
[தன் பிரயோஜனத்தை எதிர் பாராமல் பிறர் துக்கத்தைக் கண்டு பொறுமலிருக்கை தயையாகிறது.]

180. தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹ துர்ப்பலா
[(அவர்களுடைய கண்கலங்கக் காணமாட்டாத) துர்ப்பலையான நான் ராவணனுடைய தாஸிகளாகிற இவர்களை மன்னிக்கிறேன்.]

181. தர்மநித்யே மஹாபுத்தௌ ப்ரஹ்மண்யே ஸத்யவாதிநி।
ப்ரச்ரிதே தாநசீலே ச ஸதைவ நிவஸாம்யஹம்॥
[தர்மத்தில் எப்போதும் ஈடுபட்டிருப்பவன், மஹாபுத்திமான், ப்ரஹ்மவித், ஸத்யவாதி, வணங்கியவன், தானசீலன் ஆகிய இவர்களிடம் நான் எப்போதும் வஸிக்கிறேன்.]

182. புண்யாபுண்யாவீச்வரப்ரீதிகோபௌ
[புண்யம், பாபம் என்பது ஈச்வரனுடைய ப்ரீதிகோபங்களேயாகும்.]

183. பத்மே ஸ்திதா பத்மவர்ணா பத்மநாபப்ரியா சுபா।
ஸதாऽநுக்ரஹஸம்பந்நா ஸா தேவீ மே ப்ரஸீதது॥
[தாமரையிலிருப்பவளாய், தாமரைநிறத்தாளாய், தாமரையுந்தியான் மனைவியாய், மங்களாகாரையாய், எப்போதும் அருள் நிரம்பியவளான அந்த தேவி என்னிடம் அருள்புரியட்டும்.]

184. அநுக்ரஹபராம் ருத்திமநகாம் ஹரிவல்லபாம்।
நமாமி கமலாம் காந்தாம் க்ஷமாம் க்ஷீரோதஸம்பவாம்॥
[அருள் நிரம்பியவளாய், செல்வமாயிருப்பவளாய், பாபமற்றவளாய், ஹரிக்குப் பிரியையாய், கமலையாய், காந்தையாய், பொறுமையாய், பாற்கடலிலுதித்தவளான பிராட்டியை நமஸ்கரிக்கிறேன்.]

185&186. தேவராஜ தயாஸிந்தோ தேவதேவ ஜகத்பதே।
த்வதீக்ஷண ஸுதாஸிந்துவீசிவிக்ஷேப சீகரை:॥
காருண்யமாருதாநீதை: சீதலைரபிஷிஞ்ச மாம்॥
[தேவராஜனே! கருணைக்கடலே! தேவதேவனே! ஜகத்பதியே! (துக்கங்களில் தவிக்கும்) அடியேனை, காருண்யமாகிற காற்றினால் கொண்டு வரப்பட்டவையும், குளிர்ந்தவையுமான உன்னுடைய கடாக்ஷாம்ருத நதீப்ரவாஹத் திவலைகளினால் நனைத்தருள வேணும்.]

---

179. ஸ்ரீபாஷ்யம். 180. ராயு (116-41). 183. மங்கணஸம்ஹிதை.
184. லக்ஷ்மீ-அஷ்டோத்தரசதம்-4. 185&186. திருக்கச்சி நம்பிகள் அருளிய தேவராஜாஷ்டகம்-8.

187. க்ஷீரோதாச் ச்ரீஸ் ஸமுத்பந்நா ச்ரூயதேऽம்ருதமந்தநே।
ப்ருகோ: க்₂யாத்யாம் ஸமுத்பந்நேத்யேததாஹ கதம் பவாந்॥

[அம்ருதமதனகாலத்தில் பாற்கடலிலிருந்து ஸ்ரீ தேவி உண்டானதாகக் கேள்விப்படுகிறேன். ப்ருகுவுக்கு, கியாதிஎன்னும் பத்தினியிடம் பிராட்டியுண்டானதாகத் தாங்கள் சொல்லுவது எப்படி?]

188. திவ்யமால்யாம்பரதரா ஸ்நாதா பூஷணபூஷிதா।
பச்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷ: ஸ்தலம் ஹரே:॥

[திவ்யமான மாலைகளையும், வஸ்திரங்களையும் தரித்தவளாய், ஸ்நானம் செய்தவளாய், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்றவளான பிராட்டி எல்லாத் தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே எம்பெருமானுடைய திருமார்பை அடைந்தாள்.]

189. த்வயா தேவி பரித்யக்தம் ஸகலம் புவநத்ரயம்।
விநஷ்டப்ராயமபவத் த்வயேதாநீம் ஸமேதிதம்॥

[தேவியே! உன்னால் கைவிடப்பட்ட மூவுலகு முழுவதும் நசித்துக் கிடந்தது. இப்போது உன் அருளாலே உஜ்ஜீவித்தது.]

190. ப்ரஹ்மாத்யாச்ச ஸுராஸ் ஸர்வே முநயச்ச தபோதநா:।
ஏதந்தே த்வத்பதச்சாயாமாச்ரித்ய கமலேச்வரி॥

[கமலையே! பிரமன் முதலான எல்லாத்தேவர்களும், தவத்தையே தனமாகக்கொண்ட முனிவர்களும் உன் திருவடிநிழலை அண்டி உஜ்ஜீவிக்கிறார்கள்.]

191. யஸ்யா: கடாக்ஷணமநுக்ஷணமீச்வராணாம்
ஐச்வர்யஹேதுரிதி ஸர்வஜநீநமேதத்।
தாம் ஸ்ரீரிதி த்வதுபஸம்ச்ரயணாந் நிராஹு:
த்வாம் ஹி ச்ரிய: ச்ரியமுதாஹுருதாரவாச:॥

[யாவளொரு பிராட்டியின் கடாக்ஷமானது, இந்திரன் முதலிய தேவர்களுக்கும் க்ஷணந்தோறும் ஐச்வர்யஹேதுவாகிறதென்பது ஸர்வஜநஸம்மதமானதோ, அந்தப் பிராட்டியை தேவரீரிடத்தில் ஆச்ரயித்திருப்பது காரணமாகவே ஸ்ரீயென்று நிருக்தி கூறுகின்றார்கள். உதாரவாக்குகளான திருமங்கையாழ்வார், ஆளவந்தார் போல்வாரும் தேவரீரையன்றோ திருவுக்கும் திருவாகிய செல்வனென்கிறார்கள்.]

---

187. வி. பு. (1-8-16). 188. வி. பு. (1-9-105). 189. வி. பு. (1-9-123).
190. காச்யபீயம். 191. வை-ஸ்த-29.

192. ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே ஆபஸ் தேஜஸி லீயதே,
தேஜோ வாயௌ லீயதே, வாயுராகாசே லீயதே,
ஆகாசமிந்த்ரியேஷு, இந்த்ரியாணி தந்மாத்ரேஷு,
தந்மாத்ராணி பூதாதௌ லீயந்தே, பூதாதிர் மஹதி
லீயதே, மஹாநவ்யக்தே லீயதே, அவ்யக்தம்
அக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம:
பரே தேவ ஏகீபவதி ||

[பூமி ஜலத்தில் லயிக்கிறது; ஜலம் தீயில் லயிக்கிறது; தீ வாயுவில் லயிக்கிறது; வாயு ஆகாசத்தில் லயிக்கிறது; ஆகாசம் இந்திரியங்களுடனும், இந்திரியங்கள் (சப்த) தன் மாத்ரையுடனும் (சேருகின்றன.) தன் மாத்ரம் பூதாதியென்னும் (தாமஸ) அஹங்காரத்தில் லயிக்கிறது; அஹங்காரம் மஹானில் லயிக்கிறது; மஹான் அவ்யக்தத்தில் லயிக்கிறது; அவ்யக்தம் தமஸ்ஸில் லயிக்கிறது; தமஸ்மேலான தேவனிடம் ஒன்றுகிறது.]

193. ஆஸீதிதம் தமோபூதமப்ரஜ்ஞாதமலக்ஷணம் |
அப்ரதர்க்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வதா ||........
ஸோऽபித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா: |
அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு பீஜமவாஸ்ருஜத் ||
ஸோऽபித்யாய சரீராத்ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா: |
அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு பீஜமவாஸ்ருஜத் ||

[இவ்வுலகம் தமஸ்ஸில் லயித்திருப்பதாய், ப்ரத்யக்ஷமாயில்லாததாய், அநுமானத்தாலும் அறியப்படாததாய், தர்க்கத்தாலும் அறியப்படாததாய், (சப்தத்தாலும்) அறியப்படாததாய், எல்லாவிதத்திலும் காரியம் செய்யமுடியாததாய் (ஆதியில்) இருந்தது..... அந்தப்பரமாத்மா விதவிதமான ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க விரும்பி ஸங்கல்பித்துத் தன் சரீரத்திலிருந்து ஜலத்தை முதலில் ஸ்ருஷ்டித்தார். அதில் (ஜீவனாகிற) விதையை விதைத்தார்.]

194. தத் ஸ்ருஷ்ட்வா | ததேவாநுப்ராவிசத் |

[அந்த ஜகத்தை ஸ்ருஷ்டித்தவுடன் (அந்த ப்ரஹ்மம்) அதை வியாபித்தது.]

195. ஸர்வே நிமேஷா ஜஜ்ஞிரே வித்யுத: புருஷாததி |
கலா முஹூர்த்தா: காஷ்டாஸ்ச அஹோராத்ராஸ்ச ஸர்வச: ||

---

192. ஸுபால-2. 193. மநு (1--5&8) 194. தை-ஆந-6. 195. தை-நா (1-8)

[மின்னலைப்போன்ற உருவையுடைய புருஷனிடமிருந்து எல்லா நிமிஷங்களும், கலைகளும், முகூர்த்தங்களும், காஷ்டைகளும், இராப்பகல்களும் ஆகிய காலதத்வமெல்லாம் உண்டாயின.]

196. வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே।
ஸர்வாணி ரூபாணி விசித்ய தீரோ
நாமாநி க்ருத்வாऽபிவதந் யதாஸ்தே॥

[ஆதித்யவர்ணனாய், ப்ரக்ருதிக்கப்பால் எழுந்தருளியிருப்பவனாய், ஸர்வஜ்ஞனாய், எல்லா நாமரூபங்களையும் படைத்து அவற்றை உச்சரித்துக்கொண்டு எழுந்தருளியிருப்பவனான இந்த மஹாபுருஷனை நான் அறிகிறேன்.]

197. ஸேயம் தேவதைக்ஷத। ஹந்தாஹமிமாஸ்திஸ்ரோ தேவதா
அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி।

[அப்படிப்பட்ட இந்த தேவதை "நான் (நெருப்பு, நீர், பூமி) என்னும் இந்த மூன்று தேவதைகளையும், என்னுருவாயிருக்கும் ஜீவனால் வியாபித்து நாமரூபங்களைச் செய்யக்கடவேன்" என்று ஸங்கல்பித்தது.]

198. ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத் தேஜோऽஸ்ருஜத
தத்தேஜ ஐக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி
ததபோऽஸ்ருஜத।....தா ஆப ஐக்ஷந்த....

[அந்தப் பரப்ரஹ்மம் 'நானே பலவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது; அது தேஜஸ்ஸை ஸ்ருஷ்டிசெய்தது. தேஜஸ்ஸை சரீரமாகக்கொண்ட அந்த ப்ரஹ்மம் 'நான் பலவாக ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்தது. அது ஜலத்தை ஸ்ருஷ்டித்தது. ஜலத்தை சரீரமாகக் கொண்ட அந்த ப்ரஹ்மம் ஸங்கல்பித்தது.]

199. யத்ப்ரூபங்கா: ப்ரமாணம் ஸ்திரசரரசநா தாரதம்யே முராரே:
வேதாந்தாஸ் தத்த்வசிந்தாம் முரபிதுரஸி யத்பாதசிஹ்நைஸ் தரந்தி।
போகோபோத்காதகேளீ சுளகிதபகவத் வைச்வரூப்யாநுபாவா
ஸா ந: ஸ்ரீராஸ்த்ருணீதாமம்ருதலஹரி தீ லங்கநீயரபாங்கை:॥

[பகவானுடைய ஸ்தாவரஜங்கம ஸ்ருஷ்டியிலுள்ள ஏற்றத்தாழ்வுக்கு எவளுடைய புருவநெறிப்புகள் காரணமோ, உபநிஷத்துக்கள் முராரியின் திருமார்பில் எவளுடைய திருவடியடையாளங்களைக்

196. புருஷஸூக்தம் (1-16) 197. சாந்-உப (6-3-2) 198. சாந்-உப (6-2-3,4) 199. ஸ்ரீகுண-4.

கண்டு பரதத்வ விசாரத்தை முடிக்கின்றனவோ, போகத்தின் ஆரம்ப தசையிலுள்ள விளையாட்டுகளினாலேயே அல்பமாகச் செய்யப்பட்ட பகவானுடைய விச்வரூபப்ரபாவத்தையுடையவளான அந்தப் பிராட்டியானவள், அம்ருதப்ரவாஹம் என்றெண்ணத்தக்க தன் கடாக்ஷங்களாலே நம்மை முழுகச்செய்யட்டும்.]

200. ஸ்ரீயை ஸமஸ்தசிதசித் விதாநவ்யஸநம் ஹரே: ।
அங்கீகாரிபிராலோகைஸ் ஸார்த்தயந்த்யை க்ருதோஞ்ஜலி: ॥

[ஸகல சேதநாசேதநங்களையும் படைப்பதால் பகவானுக்குண்டாகும் சிரமத்தைத் தன் அங்கீகாரத்தைக் காட்டும் கடாக்ஷங்களாலே ஸபலமாகச் செய்கின்ற பிராட்டியின்பொருட்டு அஞ்ஜலியானது (அடியேனால்) செய்யப்பட்டது.]

201. உல்லாஸபல்லவிதபாலிதஸப்தலோகீ-
நிர்வாஹகோரகிதநேமகடாக்ஷலீலாம் ।
ஸ்ரீரங்கஹர்ம்யதலமங்களதீபரேகாம்
ஸ்ரீரங்கராஜமஹிஷீம் ஸ்ரியமாச்ரயாம: ॥

[ஏழுலகங்களையும் (பகவான்) படைத்தவுடன் தளிர்விடுவதாகவும், (அவனாலே) ரக்ஷிக்கப்பட்ட ஏழு உலகங்களின் நிர்வாஹத்தினால் மொட்டுவிடுவதாகவுமிருக்கிற அர்த்தகடாக்ஷலீலையை உடையவளும் திருவரங்க மாளிகைக்கு (ஒரு) மங்கள தீபக்கொழுந்துபோலிருப்பவளும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்ய மஹிஷியானவளுமான ஸ்ரீதேவியை ஆச்ரயிக்கிறோம்.]

202. ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யாநி । ப்ரஜாச்சோத்பாதயிதவ்யா: ।"

[(தம்பதிகளாகிய) நாமிருவரும் சேர்ந்து கர்மங்களைச் செய்யவேண்டும்; ப்ரஜைளைப் பிறப்பிக்கவேண்டும்.]

203. 26-வது ப்ரமாணம் பார்க்க.

204. 27 " "

205. விஷ்ணோ: கடாக்ஷம்

[விஷ்ணுவின் கடாக்ஷம் (ஸத்வகுணத்தை யளிக்கவல்லது)]

206. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: ।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: ॥

[பிறக்கும்போது எவனை மதுஸூதனன் காண்கிறானோ, அவன் ஸாத்விகனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபுருஷார்த்தத்தைச் சிந்திப்பவன்.]

---

200. ஸ்ரீகுண-1. 201. ஸ்ரீகுண-2. 205. பார-மோக்ஷ (?)
206. பார-சாந்தி (358-73).

206*. அஸ்யா தேவ்யா மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்
[தேவியின் மனம் பெருமாளிடமும், அவர் மனம் அவளிடமும் நிலைநிற்கிறது.]

207. ப்ரஸாதபரமௌ நாதௌ மம கேஹமுபாகதௌ।
தந்யோऽஹமர்ச்சயிஷ்யாமீத்யாஹ மால்யோபஜீவந:॥
["மேலான அருளை உடையவர்களும், ஸ்வாமியாயிருப்பவர்களுமான இந்த ராமக்ருஷ்ணர்கள் என்னுடைய வீட்டிற்கு வந்திருக்கிறார்கள்; நான் தன்யனானேன்; (அவர்களைப்) பூஜிக்கிறேன்" என்று பூவைவிற்று வயிறுவளர்க்கும் மாலாகாரர் சொன்னார்.]

208 & 209. அநர்த்தாக்யம் தநம் ப்ராப்ய மாத்யந்நுச்சைர் ந மாம் ஸ்மரேத்।
[அநர்த்தமென்னும் தனத்தையடைந்து மிகவும் மதமடைந்தவனாய் என்னை நினைப்பதில்லை.]

210. விஜ்ஞாநஸாரதிர் யஸ்து மந: ப்ரக்ரஹவாந் நர:।
ஸோऽத்வந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்॥
[எவனொருவன் நல்ல ஞானத்தை ஸாரதியாகவும், மனத்தைக் கடிவாளமாகவும் கொண்டிருக்கிறானோ, அவன் ஸம்ஸாரத்திற்கு அக்கரையான விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகிறான்.]

211. புண்யச்ரேயஸீ ஸுக்ருதம் வ்ருஷ:
[புண்யம், ச்ரேயஸ், ஸுக்ருதம், வ்ருஷம் (தர்மம்) என்னும் நாலு பதங்களும் ஒரே பொருளையுடையவை.]

212. பத்மயோநிரிதம் ப்ராப்ய படந் ஸ்தோத்ரம் தத: பரம்।
திவ்யம் சாஷ்டகுணைச்வர்யம் தத்ப்ரஸாதாச்ச லப்தவாந்॥
[நாபிக்கமலத்திலிருந்து உண்டான நான்முகன் இந்த ஸ்தோத்ரத்தையடைந்து படித்து அதன்பின் திவ்யமான எட்டுவிதச் செல்வத்தையும் அப்பிராட்டியின் அருளாலே அடைந்தான்.]

213. ப்ரஹ்மாதீநாம் யதாயத்தம் வைபவம் யஸ்ய ஸா ஸ்வயம்।
தஸ்ய கைமுத்யநிர்த்தார்யமீச்வரத்வம் ச்ரிய: பதே:॥
[ப்ரஹ்மாதிகளுடைய வைபவம் எவளாலேயோ, அந்தப் பிராட்டி எவனுக்கு சேஷபூதையோ, அந்த ச்ரிய:பதியின் ஈச்வரத்வம் கிம்புநர்ந்யாயஸித்தம்.]

206*. ரா-ஸு (15-52) 207. வி. பு. (5-19-21) 210. கட (1-3-9)
212. ப்ராஹ்மபுராணம். 213. ப்ராஹ்மபுராணம் (?)

214. ஆகுக்ராமநியாமகாதபி விபோரா ஸர்வநிர்வாஹகாத்
ஐச்வர்யம் யதிஹோத்தரோத்தரகுணம் ஸ்ரீரங்கபர்த்து: ப்ரியே!
துங்கம் மங்களமுஜ்ஜ்வலம் கரிமவத் புண்யம் புந: பாவநம்
தந்யம் யத் தததஸ்ச வீக்ஷணபுவஸ் தே பஞ்சஷா விப்ருஷ:॥

[ஸ்ரீரங்கநாதப்ரியே! அல்பக்ராமாதிகாரி முதல், ஸர்வலோகநிர்வாஹகனான பரமாத்மாவரையில் மேன்மேலும் உயர்ந்த யாதொரு ஐச்வர்யமுண்டோ அதுவும், யாதொன்று உயர்ந்ததாகவும், மங்களமாகவும், ஒளியுடையதாகவும், கனமுள்ளதாகவும், புண்யமாகவும், பாவனமாகவும், பாக்யபலபூதமாகவும் விளங்குகின்றதோ அந்தப் பொருள்களும் உம்முடைய கடாக்ஷத்திலுண்டான ஐந்தாறு திவலைகளாம்.]

115. ஏகோ முக்தாதபத்ரப்ரசலமணிகணத்காரிமௌளிர் மநுஷ்யோ
த்ருப்யத் தந்தாவளஸ்தோ ந கணயதி நதாந் யத் க்ஷணம் க்ஷோணிபாலாந்!
யத் தஸ்மை திஷ்டதேऽந்ய: க்ருபணமஶரணோ தர்ஶயந் தந்தபங்க்திம்
தத் தே ஸ்ரீரங்கராஜப்ரணயிநி நயநோதஞ்சிதந்யஞ்சிதாப்யாம்॥

[ரங்கநாததேவியே! ஒரு மனிதன் கர்வங்கொண்ட யானையின்மேலிருந்துகொண்டும், முத்தும்யமான குடையில் அசைகின்ற மணிகளால் சப்திக்கிற கிரீடத்தையுடையவனாய்க் கொண்டும், தன்னை வணங்கின அரசர்களைக் கணப்போதும் கணிசிப்பதில்லை. மற்றொருவன், புகலற்றவனாய், தன் தீனத்தன்மை தெரியும்படி (அவனுக்குப்) பற்களைக் காட்டிக்கொண்டு நிற்கிறான். இத்தாரதம்யம் முறையே உன்னுடைய திருக்கண்கள் (சிறிது) திறப்பதாலும் மூடுவதாலும் உண்டாகிறது.]

216. அம்ருதஸ்யைஷ ஸேது:

[(ஸம்ஸாரக்கடலின் அக்கரையான) மோக்ஷத்தை அடைய இந்த பகவானே அணை (உபாயம்) ஆவான்.]

217. ஸ ப்ரீதோऽலம் பலாய

[ப்ரீதியடைந்த பகவானே பலனைக் கொடுக்க சக்தன்.]

218. பலமத உபபத்தே:

[இந்தப் பரமபுருஷனிடமிருந்தே மோக்ஷபலம் உண்டாகிறது; (அதுவே) பொருந்தியதாகையால்.]

---

214. ஸ்ரீகுண-15. 215. ஸ்ரீகுண-16. 216. முண்ட (2-2-5)
217. த்ரமிடபாஷ்யம். 218. ப்ர-ஸூ (3-2-37)

219. ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநமிச்சேத் ஹுதாஶநாத் ।
ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத் ॥

[ஸூர்யனிடமிருந்து ஆரோக்யத்தை விரும்பக்கடவன்; அக்னியிடமிருந்து பொருளை விரும்பவேண்டும். ஈச்வரனிடமிருந்து ஞானத்தை விரும்பக்கடவன்; ஜநார்த்தனனிடமிருந்து மோக்ஷத்தை விரும்பக்கடவன்.]

220. உபாதத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ் சிதசிதௌ
ஸ்வமுத்திஶ்ய ஸ்ரீமாநிதி வததி வாகௌபநிஷதீ ।
உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம் ந து குணௌ
அதஸ் த்வாம் ஸ்ரீரங்கேஶய ஶரணமவ்யாஜமபஜம் ॥

[ஹே ஸ்ரீரங்கநாதனே! 'ஸ்ரீமந்நாராயணன் ஸ்ருஷ்டி, ஸ்திதி நியமனம் முதலிய காரியங்களால் சேதநாசேதனங்களைத் தனக்காக ஸ்வீகரிக்கிறான்' என்று உபனிஷத் வாக்யமானது சொல்லுகிறது. ஆகையால், இங்கு உபாயத்வமும், உபேயத்வமும் உனக்கு ஸ்வரூபம்; குணங்களல்ல. ஆகையால் உம்மை நிர்வ்யாஜமான உபாயமாக அடைந்தேன்.]

221. லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா ।
ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே ॥

[காருண்யமே வடிவெடுத்த பிராட்டியுடன் கூடியே பகவான் ரக்ஷகனாகிறானென்று எல்லா ஸித்தாந்தங்களிலும், வேதாந்தங்களிலும் புகழப்படுகிறான்.]

222. அர்த்தாத் ப்ரகரணால் லிங்காதௌசித்யாதர்த்தநிர்ணய:

[அர்த்தத்திலிருந்தும், ப்ரகரணத்திலிருந்தும், அடையாளங்களிலிருந்தும், ஔசித்யத்திலிருந்தும் பொருளை நிர்ணயிக்கவேண்டும்.]

223. 106-வது ப்ரமாணம் காண்க.

224. ஆஶம்ஸேயம் ஹரிச்ரேஷ்ட க்ஷிப்ரம் மாம் ப்ராப்ஸ்யதே பதி: ॥
அந்தராத்மா ச மே ஶுத்தஸ் தஸ்மிம்ஶ்ச பஹவோ குணா: ॥

[வானரத்தலைவனே! என் கணவன் விரைவிலேயே என்னை அடைந்துவிடுவாரென்று எதிர்பார்க்கிறேன். என் மனம் (தன்னை ரக்ஷிக்கத் தான் முயற்சிசெய்வதாகிற) அசுத்தியற்றிருக்கிறது. அவனிடமும் குணங்கள் பலவுள்ளன.]

---

219. மாத்ஸ்யபுராணம் (67-41) 220. ர-ஸ்த (2-88) 221. லக்ஷ்மீ தந்த்ரம் (28-14) 224. ரா-ஸு (37-14)

225. யத்யபி ஸச்சித்தோ ந நிர்ப்புக்ணதைவதம் குணகணம்
மநஸாऽநுதாவேத், ததாப்யந்த்ர்க்குணமேவ தேவதாம் பஜதே,
தத்ராபி ஸகுணைவ தேவதா ப்ராப்யதே

[ஸத்தாகிற ப்ரஹ்மத்தை தியானிப்பவன் தேவனாகிற அந்த ப்ரஹ்மத்தை விட்ட குணஸமூஹத்தை மனஸ்ஸினாலே தியானிக்க முடியாவிடினும், குணங்களுடன் கூடிய தேவதையையே உபாஸிக்கிறான்; அதிலும் குணத்துடன் கூடிய தேவதையையே அடைகிறான்.]

226. ....புவநபவந ஸ்தித்யபாயைகஹேதோ:
லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர் தாஸதாஸஸ்ய தாஸ: ||

[உலகங்களைப் படைத்தளித்து அழிக்கும் ஒரே காரணபுருஷனாயிருக்கும் ஸ்ரிய: பதியான நரஸிம்ஹனுக்கு தாஸனுக்கும் தாஸனுக்கும் தாஸனாயிருக்கிறேன்.]

227. வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: |
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ்ஸஹ ||

[மேலான உலகமான வைகுண்டத்தில், ஜகத்பதியும், நினைக்கவொண்ணாத ஸ்வரூபத்தை உடையவருமான விஷ்ணு, பக்தர்களுடனும், பாகவதர்களுடனும் கூடியவராய் ஸ்ரீதேவியுடன் கூட எழுந்தருளியிருக்கிறார்.]

228. ஸர்வகாமப்ரதாம் ரம்யாம் ஸம்ஸாரார்ணவதாரிணீம் |
க்ஷிப்ரப்ரஸாதிநீம் தேவீம் ஸரண்யாம் சிந்தயேதிதி ||

[எல்லா இஷ்டங்களையும் தருமவளும், அழகியவளும், ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவிப்பவளும், விரைவில் அருள் செய்யுமவளுமான பிராட்டியை சரணமடையத்தகுந்தவளாக நினைக்கக் கடவன்.]

229. ஆத்மவித்யா ச தேவி த்வம் விமுக்திபலதாயிநீ

[தேவியே! நீயே ஆத்மஜ்ஞானத்தைக் கொடுப்பவளாயும், முக்திபலத்தைக் கொடுப்பதையே இயற்கையாக உடையவளாயுமிருக்கிறாய்.]

230. ஸக்ருத் விபாதா ஸர்வார்த்தி ஸமுத்ரபரிஸோஷிணீ
பவபங்காபஹாரிணீ பரநிர்வாணதாயிநீ

